தந்தி: "வசந்தா" கோயமுத்தூர். போன்: நெ, 25.

வசந்தா மில்ஸ் லிமிடெட்.

JUL 1946
MADRAS

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: சிங்காநல்லூர்.

மேனேஜிங் ஏஜண்ட்ஸ் அண்டு செக்ரடரீஸ்:

R. K. ஷண்முகம் செட்டி அண்டு பிரதர்ஸ்.

1934-ஆம் கள்ளிக்கோட்டையில், நடந்த கண்காட்சியில் நூல் ரகங்களுக்காக தங்க மெடல், நற்சாட்சிப் பத்திரம் பெற்றிருக்கிறோம்.

நூற்றல்:

20 நெ. முதல் 44 நெ. வரை, ஒத்தை, முறுக்கு, காரம் சலவை நூல் தயாரிக்கிறோம்.

எல்லா விதமான ஜவுளி ரகங்களும்:

வேஷ்டிகள், லாங்கிளாத்,
டவல், சர்ட்டிங்,
மல், சதர்,

தயாரிக்கிறோம்.

எங்களுடைய வி. 116 நெ. லாங்கிளாத் மார்க்கட்டில் பெயர் பெற்றது.

600 நெ. காடா தயாரிக்கும் உரிமை எங்களுடையதே.

போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள்.

நம் நாட்டுத் தொழிலை ஆதரியுங்கள்.

உண்மையான நல்ல பட்டை உணருங்கள்.

உண்மையான நல்ல பட்டு எப்படி உணர்ச்சிக்கு இருக்கும் என்பதை அறிய ஆடம்பரமும் மனோகாமுமான மைசூர் சில்க் அணிவதன்மூலம் தெரிந்து கொள்ளலாம். அது சாதாரண பட்டுக்களைவிட அதிக நாள் உழைக்கும்.

மைசூர் சில்க்

மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு.

கவர்ன்மெண்ட் சில்க் வீவிங் பாக்டரி, மைசூர்,

MSK-10TM

தோஷமற்ற, உயரிய, பூரிப்புள்ள

வைரங்கள்

அழகிய வேலைப்பாடமைந்த

பவுன் நகைகள்

நவீன முறைகளால் தயாரிக்கப்படும்

வெள்ளி சாமான்கள்

இவைகளுக்கு எங்களைக் கலந்து ஆலோசிக்கவும்.

உம்மிடியார்

உம்மிடி ராமய்ய செட்டி, குருசாமி செட்டி கம்பனி

24/25. சைனு பஜார் :: மதருஸ்



கடைசி "விக்கெட்"

வெய்யிலின் வெப்பம் அதிகரிக்க அதிகரிக்க கிரிக்கெட் விளையாடுபவர்களின் வேகமும் குறைகிறது. கடைசியாக பந்தடிப்பவன் விக்கெட்டை நோக்கி ஓடுகிறான். பந்தெறிபவனே விக்கெட்டைக் கலைத்து விடுகிறான். இவன் வெளியேறுவதோடு வெளியூர்க் கோஷ்டியின் ஆட்டம் முடிகிறது.

கூடாரத்தில் விளையாடிக் களைத்தவர்களை வரவேற்கத் தேனீர் காத்திருக்கிறது. வியர்வை துடைத்து தாகசாந்தி செய்து சிறிது ஓய்வெடுக்கிறார்கள். ஒன்றிரண்டு கோப்பை தேனீர் அருந்த வேண்டியதுதான். உள்ளூர்க் கோஷ்டியார் பந்து பொறுக்கி எறிந்த சிரமத்தை மறந்து பந்தடிக்கக் கிளம்புகிறார்கள்.

இந்தியாவிலுள்ள கிரிக்கெட் மைதானங்களுக்கெல்லாம் தேயிலை— அதிலும் தோட்டத்திலிருந்து நேராக வந்த ப்ரூக் பாண்ட் தேயிலை இன்றியமையாதது.

இடைவிடா விநியோகம்
சதா புதுமணம்.

ப்ரூக் பாண்ட்

" இரு இலையும் ஒரு மொட்டும் "

மிகச்சிறந்த ஆயுர்வேத ஔஷதங்களும் சிகிச்சைகளும்!

ஒரு முறை விஜயம் செய்யுங்கள்

★

ஆர்யவைத்தியர்

பி. வி. ராமவாரியர்

ஆர்யவைத்ய பார்மசி

திருச்சி ரோடு :: கோயமுத்தூர்

★

கேட்லாக் இலவசமாக அனுப்பிவைக்கப்படும்.

THE VASANTHA DYEING WORKS,

181 Oppanakara Street
Coimbatore.

Phone No. 155. **Estd., 1921.**

Proprietor
C. M. Subramanya Chettiar
CONTRACTOR
To
THE VASANTHA MILLS, LIMITED. SINGANALLUR.

For all kinds of dyeing border yarn and tie yarn etc., undertakes any variety of colour dyeing at reasonably cheap rates for dyeing all counts of yarn, cloth and sarees of 100 and 80 counts, wholesale orders received our due and special attention. A trial order will convince you the good quality of our work. Fastness and durability of colour guaranteed.

The Fashionable
Furnishing Fabrics

DRESS TEXTILES

Ladies', Gents', Children's
Underwear Sport Shirts etc.

S. BEEMIAH CHETTY,

"WHITE SHOP"

இந்தியன் பாங்கு லிமிடெட்

தலைமை ஆபீஸ்: 'இந்தியன் பாங்கு பில்டிங்ஸ்'

நார்த் பீச் ரோடு :: மதராஸ்

லோகல் ஆபீஸ்கள் :

எஸ்பிளனேட்	திருவல்லிக்கேணி
மயிலாப்பூர்	தியாகராயநகர்
புரசவாக்கம்	மவுண்டுரோடு
எக்மோர்	

தென்னிந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் பிராஞ்சுகளும் சப் ஆபீஸ்களுமுள்ளன.

வழங்கி வாக்களிக்கப்பட்ட
மூலதனம் ரூ. 68,71,800
செலுத்தப்பட்ட ,, ,, 44,42,662
ரிஸர்வ் நிதி ,, 50,00,000
டிபாஸிட்டுகள் 31—12—45 முடிய
ரூ. 13½ கோடிக்கு அதிகம்

எல்லாவிதமான பாங்க் அலுவல்களும்
ஏற்றுக்கொண்டு நடத்தப்பெறும்

பூரா விபரங்களுக்கும் பாங்கியின் எந்த ஆபீஸிற்காவது விண்ணப்பித்துத் தெரிந்து கொள்ளலாம்.

N. கோபால அய்யர், செக்ரடரி

I B N 101

நியூ இந்தியா அஷ்யூரன்ஸ்

கம்பெனி, லிமிடெட்.

(தலைமை ஆபீஸ்: பம்பாய்)

தீ, ஆயுள், கப்பல், விபத்துகள்

முதலிய இன்ஷூரன்ஸ்கள் செய்யப்படுகின்றன.

தலைவர் :- ஸர். சுனிலால் வி. மேதா.

உபதலைவர் :- ஸ்ரீ ஜே. ஆர். டி. டாடா.

ஆயுள் இலாகா சம்பந்தமான விவரம்

1944-ம் வருஷத்தில் செய்யப்பட்ட புது பிஸினஸ்	ரூ. 6 கோடிக்கு அதிகம்.
1944-ம் வருஷம் டிசம்பர் மாதம் 31-ந் தேதி வரைக்கும் செய்யப்பட்ட பாலிஸிகளின் மொத்த தொகை	ரூ. 21 கோடிக்கு அதிகம்.

பொருளாதார புள்ளி விவரங்கள்

செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 71,21,055.
மொத்த நிதி	ரூ. 6 கோடிக்கு அதிகம்.
மொத்த இருப்பு (சுமார்)	ரூ. 8 கோடி
ஆரம்பம் முதல் கிடைத்த பிரிமியம் வருமானம்	ரூ. 22 கோடிக்கு அதிகம்.
கொடுக்கப்பட்ட மொத்த உரிமைத் தொகை	ரூ. 11 கோடிக்கு அதிகம்.

இன்ஷியூர் செய்வதற்கோ அல்லது பிரதிநிதியாக இருப்பதற்கோ சிறந்த இந்திய கம்பெனி.

சென்னை கிளைநிலையம், 4 & 5 முதல் லைன் பீச்.

கே. கணபதி,
பிராஞ்சு மானேஜர்.



ஒரு சுத்தமான ஊற்றிலிருந்து

இயற்கை மைசூர் காடுகளில் மிக உன்னதமான சந்தன மரங்களை உண்டாக்கி யிருக்கிறது. இது தான் நூற்றுக்கணக்கான வருஷங்களுக்கு மிகவும் நேர்த்தியான சந்தன அத்தருக்கு ஆதாரம். இத்துடன் தற்கால விஞ்ஞானமுறைகளும் சேர்ந்து அற்றுக்கு நூறு சுத்தமான உயர்ந்த மைசூர் சந்தன அத்தர் கிடைக்கிறது. அது மருந்துகள், சோப் அல்லது வாசனை திரவியங்கள் தயாரிப்பதற்கு இன்றியமையாதது.

மைசூர்
சந்தன அத்தர்

MSK 16 TM

மைசூர் கவர்ன்மென்ட் தயாரிப்பு.

தி சென்டரல் பேங் ஆப் இந்தியா, லிமிடெட்.

(இந்தியாவிலேயே மிகப் பெரிய இந்தியன் ஜாயின்ட் ஸ்டாக் பேங்)

(ஸ்தாபிதம்: டிசம்பர் 1911)

அதிகாரம் பெற்ற மூலதனம்	ரூ. 5,25,00,000
வாக்களிக்கப் பட்ட மூலதனம்	ரூ. 5,04,39,600
செலுத்தப் பட்ட மூலதனம்	ரூ. 2,51,02,200
ரிசர்வும் மற்ற நிதிகளும்	ரூ. 2,54,72,000
டிபாசிட்டுகள் 31-12-1944ல் இருந்தபடி ...	ரூ. 94,48,67,000

தலைமை ஆபீசு:

மகாத்மா காந்தி ரோடு, போர்ட், பம்பாய்.

இந்தியா முழுவதிலும் 180க்கு மேற்பட்ட கிளை ஸ்தாபனங்களும், வளங்கும் ஸ்தாபனங்களும் பெற்றது.

மானேஜிங் டைரக்டர்:- Mr. H. C. கேப்டன், J. P.

டைரக்டர்கள்:-

Sir. H. P. மோடி K. B, E. (தலைவர்)
ஹரிதாஸ் மாதவதாஸ்
ஆர்டிஷ B. துபாஷ்
டின்ஷா D. ரோமர்
நூர்முகமத் M. சினய்
பாபுஜி தாதாபாய் லாம்
தரம்ஷே முல்ராஜ் காட்டாவ்
ஹார்மஜி பிரேம்ஜி கனிஷாரியட்
விதல் தாஸ் கான்ஜி

லண்டன் ஏஜண்டுகள்:- மெஸ்ர்ஸ், பார்க்லேஸ்பேங் லிமி மிட்லண்ட்பேங் லிமி.,

நியூயார்க் ஏஜண்டுகள்:- தி காரன்டி டிரஸ்ட் கம்பனி ஆப் நியூயார்க்

எல்லாவிதமான பாங்கி அலுவல்களும் கவனிக்கப்படும். விண்ணப்பம் செய்து விவரங்களை ஊர்ஜிதம் செய்து கொள்ளலாம்.

தென் இந்தியாவின் கிளை ஸ்தாபனங்கள்:—

அடோனி, ஆலப்பிலை, ஈரோடு, பங்களூர், பெஜவாடா, கள்ளிக்கோட்டை, கொச்சி, கோயமுத்தூர், கடப்பை, தோணி, எர்ணுகுளம், குண்டக்கல், கோவில்பட்டி, கர்நூல், மதராஸ், மதுரை, நந்தியால், பொள்ளாச்சி, சேலம், திருப்பூர், திருச்சூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, உடுமலைப்பேட்டை, விருதுநகர்.

வசந்தம்

20 JUL 1946

மலர் 5	விய ஹூ சித்திரை மீ	இதழ் 1

பொருளடக்கம்

மலர் மணம்	...	... ...	1
உதிர்ந்த மலர்	...	"சகதேவன்"	2
நல்ல பரிசு	...	எச். விஜயகுமார்	6
சிந்தனை	...	கு. ப. சேது அம்மாள் ...	12
புத்தக ஆராய்ச்சி	...	... ...	17
இதய கீதம்	...	கே. சி. எஸ். அருணாசலம் ...	18
பலி	...	ஜெயலட்சுமி ஆர். ஸ்ரீனிவாசன் ...	19
கலைக்கோயில்	...	சுவாமி சுத்தானந்த பாரதி ...	25
பேலூர் சிற்பம்	...	எஸ். பால சுந்தரம் ...	36
மகேந்திரன் மகன்	...	அ. கிருஷ்ணமூர்த்தி ...	44
நந்தியும் நாதமும்	...	"சிலம்பு" ...	52
கட்டுரைகள் வேண்டும்	...	ரா. நா ...	54
சாவித்திரி	...	ஆர். ஷண்முக சுந்தரம் ...	56
எண்ணெய்களும் உபயோகங்களும்	...	கே. நாராயணசாமி எம். எஸ்ஸி. ...	68
பலாப்பழம்	...	"சுகி" ...	71
உறவினருக்கு	...	ப. தனுஷ்கோடி ...	76
வசந்தம் பூத்தது	...	கே. விஜயராகவன் ...	86

முகப்புப் படம் உதவியவர்: ஆர். கிருஷ்ணன்

'வசந்தத்'தில் வெளிவரும் கதைகள், கட்டுரைகளில் காணப்படும் பெயர்களெல்லாம் கற்பனை.



முதலாளிக்கு அவன் பேரில்

நல்ல அபிப்பிராயம்

ஏனெனில் அவன் டாம்கோ கூந்தல் தேங்காயெண்ணெயும் ஷாம்பூவும் உபயோகித்து வருகிறான்!



தி டாடா ஆயில் மில்ஸ்

கம்பெனி லிமிடெட்.

நீண்ட தமிழால் உலகை

நேமியின் அளந்தான் — கம்பர்

மலர் மணம்

"வசந்தம்" புத்தழகும், புத்தொளியும் பெற்று வனப்புடன் திகழ்கிறது. புத்தாண்டில் வசந்தச் சோலை புதுமணத்துடன் பொலியும் என்பதை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

வானவில்லின் வர்ண ஜாலங்கள் போல வசந்தக் காட்சியில் பலவித ரசனையும் பொருந்தி இதயத்துக்கு இன்பந்தர வேணும் என்பதே நமது ஆசை. இந்த இதழில் அறிவுக் கட்டுரை, ஹாஸ்யக் கட்டுரை, சிந்தனைக் கட்டுரை, சிறு கதைகள், கலைக் கதைகள், சரித்திரப் பகுதி, பொருளாதாரப் பகுதி, இலக்கிய விவாதம் முதலிய பல அம்சங்களும் அதற்கிணங்க அமைந்திருப்பதை அனுபவிக்கலாம்.

புத்தாண்டில் இன்னும் பல புது அம்சங்களையும் ரசிகர்களுக்குத் தந்து, எல்லாத் தமிழ் வீடுகளிலும் 'வசந்த மணத்தை' ப் பரப்ப வேண்டும் என்பதே நமது கனவு!

ஆசிரியர்

உதிர்ந்த மலர்

"சகதேவன்"

197242

மாலைச் சூரியன் மேல் கடலுடன் முத்தமிட்டுக் கொண்டிருக்கிறான். உலகம் முழுவதும் பொன் முலாம் பூசியதுபோல் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. வசந்தத் தென்றல் மலர் மணம் உண்டு ஊசலாடிக் கொண்டிருக்கிறது. மேகத்தைக் கண்டு ஆடும் மயில்களுக்கும், மரக்கிளைகளிலிருந்து பாடும் குயில்களுக்கும் மத்தியில் வீட்டுப் புறத்துச் சோலையினுள்ளே ஓர் அன்னம் போல மலர்ந்துஆனந்தக் கனைக்கள் கண்டு கொண்டிருக்கிறாள் விசாலாட்சி.

காட்டுச் சிங்கத்தைப் போல் கலைந்த தலை; வேட்டை நாய்போல் சீறிடும் பெருமூச்சு; கோபாக்கினி கக்கும் முகம்....திடீரென்று முன் தோன்றி அவள் ஏகாந்தத்தைக் கலைத்தான் லோகநாதன்.

"அத்தான், இது என்ன கோலம்?" என்று இருகரங்களையும் பற்றினாள் மாது.

லோகன் நெஞ்சோ படபடத்தது. கண்கள் நீர் துளித்தன. நா எழவில்லை. உதடுகள் மாத்திரம் ஏதோ சொல்ல விரும்புவனபோல் படபடவென்று துடித்தன.

மறுபடியும் அவன் கரங்களைப் பிடித்து உலுக்கி, "அத்தான் ஏன் இந்த ஆத்திரம்? ஏன் இந்த நடுக்கம். நடந்ததைச் சொல்லுங்கள். ஐயோ! என் மனம் கலங்குகிறதே! சொல்லுங்கள் அத்தான்" என்று மன்றாடினாள் விசாலி.

"விசாலி, உன்னை நான் பிரிவதா? உன்னை மறப்பதா? உன்னைப் பிரிந்தும் உயிர் வாழ்வதா?" என்று ஆவேசத்துடன் குமுறினான் லோகன், ஏதோ மனத்தைத் திடப்படுத்திக் கொண்டவன் போல்.

விசாலியின் நெஞ்சு படபடத்தது. "அத்தான், நீங்கள் சொல்வதொன்றும் விளங்க வில்லையே. சற்று விவரமாய்ச் சொல்லுங்களேன்"

"விசா, நான் உன்னை அடியோடு மறந்துவிட வேண்டுமாம். உன்னை இனிப் பார்க்கக்கூடப் படாதாம் அடுத்த ஊரிலிருந்து அரை லட்ச ரூபாய் சொத்துடன் எவனோ எனக்குப் பெண் தருகிறானாம். நான் அவளைத்தான் மணந்துகொள்ள வேண்டுமாம்... என் தந்தையின் உத்திரவு"

"அடேயப்பா! இதற்குத்தானா இவ்வளவு கலவரம். நான் என்னவோ ஏதோவென்று நடுங்கியே போய் விட்டேனே" என்று மிகச் சாந்தமாய் பதில் தந்தாள் விசாலி. ஆனால் அவள் உள்ளம் மாத்திரம் எரிமலையின் அடி நெருப்புப் போல் குமுற ஆரம்பித்து விட்டது.

"ஆ! விசாலி, நீயுமா என்னை வெறுத்து விட்டாய்!"

"அத்தான், இதில் வெறுப்பதற்கு என்ன இருக்கிறது. இது

வெல்லாம் என்போன்ற ஒவ்வொரு ஏழைப் பெண்ணும் எதிர்பார்க்க வேண்டியதுதானே. அச்சம், மடம், நாணம், பயிர்ப்புத் தான் பெண்களுக்கு அழகு என்று எந்தப் பிச்சைக்காரனோ எழுதி வைத்தான். தனலட்சுமி தாண்டவமாட ஆரம்பித்தால் அவையெல்லாம் குப்பைத் தொட்டிக் கோட்டையுள் குடிபுக வேண்டியதுதானே. அவள் பாக்கியலட்சுமிதான். அத்தான், உங்கள் சுக வாழ்வுதானே எனது பிரார்த்தனை, உங்கள் பெருமையும் புகழுந்தானே எங்களுக்குப் புகலிடம். வீணாகக் கவலையை விட்டு அவளை மணந்து சுகமாயிருங்கள்'' என்று அடுக்க ஆரம்பித்தாள். கண்களிலிருந்தும் நீர் முத்துக்கள் நான் முந்தி நீ முந்தி என்று உதிர ஆரம்பித்தன.

அவளுடைய ஒவ்வோர் வார்த்தையும் பழுக்கக் காய்ச்சின பட்டயம் போல் லோகனின் காதுட் புகுந்தது. உடலெல்லாம் ஓராயிரந்தேள் கொட்டுவது போல் தோன்றியது. ஏதோ மலையைத் தூக்கி வைத்தது போல் தலை கனக்க ஆரம்பித்து விட்டது. அவளுடைய வார்த்தைகளை அதற்கு மேல் காது கொடுத்துக் கேட்க முடியவில்லை. ஏதோ வெறி கொண்டவன் போல் அவளிரு தோள்களையும் இறுகப் பற்றி ஓர் உலுக்கி உலுக்கி, "விசாலி, மூடு உன் வாயை பேசுவது நீயா அல்லது உன் உருவில்வந்த பேயா? இதுவரை என்னைக் காதலித்தது; இருதயத்தில் கோயில் கட்டிப் பூஜை செய்கிறேன் என்றது எல்லாம் பொய்தானா? உன் இதயத்திலிருந்துமா இவ் வார்த்தைகள் வெளி வருகின்றன! 'பெண்களை நம்புதல் பித்தலாட்டம்' என்பதற்கு நீயும் ஓர் எடுத்துக் காட்டா? சொல், சொல் சீக்கிரம்! என்னுடல் பதறுகிறது'' என வீறிட்டான் லோகன்.

விசாலவிற்கோ இதயம் படீரென்று வெடிப்பது போலிருந்தது. திடீரென்று அவன் பாதங்களில் விழுந்தாள். "சுவாமி, அதோ பொன் மயமாய்ப் புரண்டோடும் 'பொருநை' அன்னை மேல் ஆணையிட்டுச் சொல்கிறேன்! நம் காதல் அரும்பைத் தேனீர் வார்த்து வளர்த்த தென்றல் மேல் ஆணை! நான் தங்களிடம் கொண்டது தெய்வீகக் காதல்! இருதய கமலாலயத்தி லெழுந்தருளியிருக்கும் தங்களை உங்கள் தந்தை மாத்திரமல்ல எவராலுமே இச்சென்மத்தில் அப்புறப் படுத்த முடியாது. தங்கள் இதழ்களுடன் இணைத்த இவ்விதழ்கள் இனி எவையுடனும் குவியா. தங்கள் பொன் முகத்துடன் பொருந்திய இம் மலர்க் கன்னங்கள் இனி எம் முகத்துடனும் பொருந்தா. தங்கள் சுந்தர மேனியை அல்லும் பகலும் ஆவலுடன் காத்திருந்து கண்டு மகிழ்ந்த இக்கண்கள் இனி எவ்விடத்தினும், தங்களைத் தான் காணும். இவை முக்காலும் சத்தியம்!'' என்றாள்.

லோகனின் முகம் பிரகாசத்தால் மலர்ந்தது. விசாலியைத் தூக்கி மார் போடணைத்துக் கொண்டான். இருவர் இதழ்களும் சில விநாடிகள் ஒன்றாய்க் குவிவதும் பிரிவது மாய் இருந்தன.

"விசாலி, இந்த ஜன்மத்தி லல்ல, எந்த ஜன்மத்திலும் உன்னை மறக்க மாட்டேன். இறைவனருளிருந்தால் கூடிய சீக்கிரம் மறுபடியும் சந்திப்போம்'' என்று சொல்லி அவளிடம் விடை பெற்று மறைந்தான்.

அவளிதயத்தில் வந்து சூழ்ந்த இருள் போல் காரிருளும் வந்து உலகைக் கவ்வி விழுங்கிக் கொண்டது. லோக நாதன் ஊரை விட்டு எங்கோ ஓடிவிட்டானும் என்ற செய்தி பல நாட்களாய் 'இராஜ பதி' க்கிராமம் முழுவதும் பிரபல்யமாகிக் கழிந்தது.

நாட்கள், மாதங்கள், வருடங்கள் ஓட ஆரம்பித்தன. செந்தாமரை மொட்டுப் போல் வளர்ந்து வந்த விசாலாவின் மேனி, நகைத் தங்கத்தைப் புடம் போட்டது போல் குறைய வாரம்பித்து விட்டது. ஆனல் அவள் வீட்டு நாயும் பூனையும் கொழுக்க ஆரம் பித்து விட்டன. வீட்டுத் தோட்டங்கள் வாடிவதங்கிப் பட்டுப் பாழ் நிலமாயின. பாத்திரங்க ளெல்லாம் பாசிபடர்ந்தது; வீடு முழுவதும் தூசி பூத்தன.

அவள் அடிக்கடி தொலைக்கும் வளையல்களைத் தேடுவதே தாய்க்கும் தந்தைக்கும் பெரிய வேலையாயிற்று. அவளின் வெந்த புண்ணில் வேல் நுழைக்க விரும்பாத தந்தை எண்ணுத எண்ண மெல்லாம் எண்ணி ஏங்கி ஏழுமாதம் ஒரே படுக்கையாகி நிரந்தர சாந்தி நாடிச் சென்று விட்டார். வருடங்கள் ஐந்து வேகமாய்க் கழிந்தன. கைமை யெய்திய தாயும் கண் மூடினுள். சித்தம் கெட்டு பித்தம் பிடித்தவள் போன்று நிர்க்கதியாய் நின்ற விசாலாவை அவள்சிற்றன்னை மகனும் மகளும் வந்து பத்து மைல்களுக்கு அப்பாலிருந்த தங்களூருக்கு அழைத்துச் சென்றனர். என்ருலும் அவள் நிலை வரவர மோசமாகி இன்று, நாளை கண் மூடிவிடுவாளோ, என்ற கவலைக் கிடமாகியது.

தனது ஒரே மகனைப் பிரிந்த துயரால் லோகநாதனின் தந்தை புத்தியிழந்து ஒருவிதப் பைத்தியமானர். சதா எதாவது முனங்கிக் கொண்டேயிருப்பார். ஆனல் யாருடனும் பேசமாட்டார். ஒரே மௌனம். இருந்த செல்வத்தையெல்லாம் இன்னது ஏதென்றில்லாமல் அள்ளி இறைத்தார். என்ருலும் ஒரே சித்தப் பிரமை தான்.

'கடம்பாக் குளக் கரையில் பால் மரச் சோலையில் ஏதோ ஒரு மலைச் சந்நியாசி வந்திருக்கிருராம். அவரிடம் சென்ற சகல நோயாளிகளும் சில நாட்களில் குணமடை கிருர்களாம்' என்ற செய்தி பக்கத்து ஊர்களில் ஓர் பரபரப்பை உண்டு பண்ணியது. மகேந்திரநாதனும் தங்கை காந்திமதி' யம்மாளும் விசாலாவையும் அச் சந்நியாசியிடம் கொண்டு வந்தார்கள்.

தனக் கென்று தந்திருந்த தனிக் கொட்டகைக்குள் படுத்து உயிருக்காக ஊசலாடிக் கொண்டிருக்கிருள் விசாலா. கொட்டகைக்கு வெளியில் மகேந்திரன் மூலிகைகளை வெட்டிக் கொடுக்க காந்தி அறைத்துக் கொண்டிருக்கிருள். விசாலாவின் பக்கத்தில் அமர்ந்து ஏதோ மந்திரிக்கச் செம்பு நீரைக் கையிலெடுத்த சந்யாசியின் பார்வை நூலால் சூழப்பட்டு அவளணிந்திருந்த கைவிரல் மோதிரத்தின் மேல் விழுந்தது. அவள் புறங்கையில் தோன்றிய மச்சத்தின் ஒளி சந்யாசியின் உள்ளத்தில் ஓர் மின்னல் போல் பாய்ந்து ஊடுருவியது. ஒரு விநாடியில் பல வருடங்களுக்கு முன் நடந்த யாவும் அவர் அகக் கண் முன் தோன்றி மறைந்தன.

உள்ளக் கொதிப்பை அடக்க முடியாமல் திடீரென்று அவள் கையைப் பற்றி மோதிரத்தைக்

கூர்ந்து பார்த்தார். மனம் உறுதியாகி விட்டது. பிரக்ஞையற்றுக் கிடக்கும் விசாலாவின் முகத்தைக் கூர்ந்து நோக்கினர். அவர் பரிசத்தால் ஏதோ புத்துயிர் பெற்றவள்போல் விசாலா திடீரென்று கண்களைத் திறந்தாள். ஆம், அறிமுகமான முகந்தான். அன்றிருந்த நெற்றி வடு இன்னும் அப்படியே தானிருக்கிறது. ஆ! அத்தானு? என்று அவள் வாய் முணுமுணுத்தது.

"ஆ! விசாலி, நீயா, என் கண்மணி! நீயா; எனதின்னுயிர்" என்று அவளை வாரியெடுத்தார் சந்நியாசி.

"சுவாமி, தங்களை இந்தக் கோலத்திலா காண வேண்டும் இந்த துர்பாக்கியவதி" என்று சொல்லிக் கொண்டே அவர் தாடியை வாரிவிட்டாள் விசாலா அவள் தலை யுருண்டு அவர் மடிமேல் ஏற மன்ருடியது.

உள்ளே பேச்சுக்குரல் கேட்டதும் விரைந்தோடி வந்தனர் மகேந்திரனும் காந்தியும். திடீரென்று காந்திமேல் தாவியது விசாலாவின் கவனம்.

"சுவாமி, இவள்தான் எனக்கு ஓர் துணை. எனது சிற்றன்னை மகள். எனதின்பத்தையும், துன்பத்தையும் தனதாக பாவித்தவள் அவள் தகுந்த இடம் சேரக் காண வேண்டும் என்னும் ஒரே அவா தான் இதுவரை என் காலதாமதம். தங்களைக்கண்டதும் இனிக் கவலை தீர்ந்தேன். அவளையாவது என் போல் பாவித்து ஆதரித்துக் கொள்வேன் என்று ஓர் நல்வாக்குக் கொடுங்கள்' என்று மன்ருடினுள். சந்நியாசியின் கண்ணீர் வெள்ளம் அவர் தாடியையும் விசாலாவின் முகத்தையும் முழுக் காட்டியது.

"சரி, உன் இஷ்டம்" எனும் வார்த்தைகள் ஓர் பெருமூச்சுடன் கலந்து வெளிவந்தன.

தன் கோரிக்கை வெற்றியில் பூரிப்படைந்த விசாலா துள்ளி எழுந்து அவரிதழுடன் இதழ் பதித்து 'உச்'சென்ருள். அத்துடன் அவள் மூச்சும் பிரிந்தது.

சந்நியாசி மறைந்தார். அவரிடம் மருந்துண்ண வந்த நோயாளிகளும் மறைந்தனர். ஆனல் விசாலாவின் சாந்திமடம் மாத்திரம் இன்னும் இரவு பகல் எந்த நேரத்திலும் இடம்மாருது அக்குளக் கரையில் ஏகாந்தக் காட்சி தந்து கொண்டிருக்கிறது.

★

நல்லமரீக

எச். விஜயகுமார்

அமீன் ஒரு பிரபல எழுத்தாளன். அவனது எழுத்துக்கள் மனித இதயத்தை ஊடுருவிப் பாயும் சக்தி யுடையவை. மனிதனின் ஆழ்ந்த மனத்தில் மறைந்திருக்கும் உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் கிளறிவிடும் அவனது எழுத்துக்கள். அவனது சோகக்கதைகளை வாசித்தவர்கள் ஒரு சொட்டுக் கண்ணீராவது சிந்தாமலிருக்க முடியாது. அப்புறம் அவன் எவ்வளவு கல் மனத்தினனயினும் என்ன? ஒருதுளி கண்ணீர் வழிந்து தான் தீரும். அவனது ஹாஸ்யக் கதைகளைப் படித்தவர்கள் எவ்வித மான துக்க சாகரத்தில் ஆழ்ந்திருந்தாலும் ஒரு முறை வாய்விட்டுச் சிரித்துத்தானகை வேண்டும். அழகிய சொற்களை அழகாகத் தொடுத்து அற்புதமான சின்னஞ் சிறு வாக்கியங்களாக அவன் அமைக்கும் ஒழுங்கு படிப்பவர் மனத்தை அள்ளி ஆகாசத்தில் கொண்டுபோய் நிறுத்திவிடுப். அமீனின் முகத்தைப் பார்த்தவர்களின் கண்கள் ஒரு முறை அப்படியே தடை கட்டினல்போல் நின்றுவிடும். காரணம் அவனது சிரித்தமுகம்தான். என்னைறக்காவது அவன் அழுது ஜனங்கள் பார்த்ததில்லை. எப்பொழுதும் சிரிப்பதும் மற்றவர்களைச் சிரிக்க வைப்பதுதான் அவன் வேலை.

அவன் தந்தை அவனது பத்தாவது வயதிலேயே எம லோகத்தை எட்டிப் பார்த்துவிட்டார். நாட்கள் சென்றன, அவனது தாயும் சென்றுவிட்டாள். அமீன் அனாதையாக நின்றான். அனாதை ஆசிரமத்தில் வளர்ந்து வந்தான்.

அவன் அதிகம் படிக்கவில்லை என்றாலும் மற்றவர்களை நிறையப் படிக்க வைத்தான். அமீன் எழுத ஆரம்பித்தான். அவ்வளவுதான்! அவனது கதைகளும் அவனும் நாடு முழுவதிலும் பிரபல மடைந்து விட்டன. ஏறக்குறைய எல்லா மொழிகளிலும் அவனது கதைகள் மொழிபெயர்க்கப் பட்டன. அமீனின் பேனா அமீனுக்குப் புகழைச் சம்பாதித்துக் கொடுத்தது. ஆனால் பணத்தைக் கொடுக்கவில்லை. இந்திய எழுத்தாளர்கள் வாழ்வும் ஒரு வாழ்வா? அல்ல-அது ஒரு சாபத்தீடு.

அமீன் ஒரு இளங்காளை இப்பொழுது!

அமீன் எழுத்துப் பிரபாவத்தை அறிந்தனள் ஒரு பிரபல நடிகை. அமீனின் அரிய நட்பைப்பெற விரும்பினள் அவள். பெற்றும் விட்டாள். அவளது சொல்லின் இனிமை, வசீகரமான முகம், கண் பார்வை இவைகள் அமீனின் மனத்தை வெகுவாகக் கவர்ந்தன. எனினும் அமீன் தனது ஒழுக்கத்தினின்றும் தவறவில்லை. எப்பொழுதும் சிரித்துக் கொண்டிருக்கும்

அமீனின் சுபாவம் நடிகைக்கு மிகவும் பிடித்திருந்தது. இருவரிடையே இணையற்ற அன்பு. அவர்களின் இரு உள்ளங்களும் அன்பு கயிற்றால் ஒன்றாகப் பிணைக்கப்பட்டன. அன்புதான், காதலல்ல! அவர்களிருவரிடையேயுள்ள நட்பை மக்கள் விகற்பமாக எண்ணினார்கள். ஆனால் அவர்களிருவரும் அண்ணன் தங்கை என்ற முறையில் சகஜ பாவத்தில் பழகி வந்தார்கள். இதைத்தவிர அவர்களிடையில் வேறு எந்த விதமான சம்பந்தமுமில்லை.

அமீனின் திருமண தினம் நிச்சயிக்கப்பட்டது. அவன் தன் சிநேகிதையிடம் ஓடோடியும் வந்தான். வந்ததும் வராததுமாக கடகடவென்று சிரித்தான். நடிகைக்கு ஒன்றுமே புரியவில்லை.

''என்ன சமாச்சாரம்? அமீன்!' என்று கேட்டாள் அவள்.

''ஒன்று மில்லை!... நினைத்தால் சிரிப்பு வருகிறது!'' என்றான் அமீன்.

''எதை நினைத்தால்?''

''ஒன்றுமில்லை! கூடிய விரைவில் எனக்குக் கலியாணம் நடக்கும்!''

''அதற்காகவா இவ்வளவு சிரிப்பு? கலியாணம் செய்து கொள்ளப் போகிறீர்கள் இதில் புதுமை என்ன?

''புதுமை என்னவா? எனக்கே வயிற்றுக்கு போதவில்லை. அதற்குள் மற்றொரு பிராணிக்கும்... போடுவதென்றால் என்னால் முடியுமா? வரப்போகிறவள் என்ன செய்வாள் இங்கு வந்து?''

''வரப் போகிறவள் அதிர்ஷ்டத்தையும் தன்னுடன் கொண்டுவர மாட்டாளா? இதற்கு இவ்வளவு பயப்படுகிறீர்களே பைத்தியம்?''

''பயப்படுவதா? அசடே! என் தந்தை இறந்த பொழுதுகூட நான் பயப்படவில்லை. தெரியுமா?''

''பின் என்ன செய்தீர்களாம்?''

''அப்போதும் சிரித்துக்கொண்டிருந்தேன். இப்போதும் சிரிக்கிறேன்!''

''சரிதான் உங்கள் மனதில் மரணத்திற்கும் மணத்திற்கும் வேற்றுமையே இல்லை போலிருக்கிறது: ஏன்? அப்படித்தானே?''

''அப்படியேதான், இரண்டிற்கும் கலியாணம் என்று தான் அர்த்தம்! தெரியுமா?''

''எப்படி''

''உயிரோடிருக்கும் மனிதர்களின் கலியாணம் ஒரு பெண்ணுடன் நடக்கிறது. இறக்கும் மனிதர்களின் கலியாணம் மரணதேவதையுடன் நடக்கிறது. புரிந்ததா?'' என்று அமீன் சொன்னதும் நடிகையால் அதற்குமேல் அவனிடம் பேச முடியவில்லை. கலியாணமாகப்போகும் சந்தோஷத்தால் அன்று இரவு நெடுநேரம் வரை அமீனும் நடிகையும் பேசிக்கொண்டிருந்தார்கள். அன்று அமீன் நடிகையின் வீட்டிலேயே சாப்பிட்டான். கடைசியில் இரவு பன்னிரண்டு மணிக்கு அவள் வீட்டிலிருந்து வெளியேறினான்.

போகும்போது அருமையான உயர்ந்த 'செண்ட்' ஒன்றை அவள் அமீனிடம் கொடுத்துப் பூசிக் கொள்ளச் செய்தாள்.

அமீன் வெளியே வந்ததும் அவன் பூசியிருந்த செண்டின் சுகந்தம் நாற்புறமும் கமகமவென்று வீசியது. மக்கள் அமீனை

ஆச்சரியத்தால் அகன்ற கண்களுடன் பார்த்துப் பலவிதமாகப் பேசினர்.

அமீனின் கலியாணத்துக்கு இன்னும் கொஞ்ச நாட்களே இருந்தன. அந்தநாட்களும் இவ்விதமாகவே கழிந்தன. தினமும் அமீன் நடிகையின் வீட்டுக்குப் போய்வருவான். அங்கேயே சாப்பிடுவான். நெடுநேரம் பேசிவிட்டு பின்பு செண்டைப் பூசிக்கொண்டு தன் வீட்டுக்குச் செல்வான்.

நாளைக்கு அமீனுக்குக் கல்யாணம். இன்று அமீன் நடிகையிடம் வந்து, "இன்றுதான் கடைசி இரவு நான் இங்கிருப்பது" என்றான்.

"ஏன்?" என்று கேட்டாள் நடிகை.

"ஏனெனில் நாளைக்கு நான்

சிறைச்சாலையிலிருப்பேன்"

"சிறைச்சாலையா? ஏன்?"

"அசடு! இதுகூடத் தெரியவில்லை! நாளைக்கு என் வீட்டுக்குப் புது மணப்பெண் வருவாள்.

நாளையிலிருந்து அவளுக்குத்தான் சொந்தம். பிறகு நான் இங்கே வர முடியுமோ என்னவோ?''

''வாஸ்தவம்தான்!''

''வாஸ்தவ மில்லா விட்டால் என்ன? நான் என்றுவது பொய் பேசுகிறேனு?''

''எழுதுவதெல்லாம் புளுகுகள் தானே!'' என்று பரிகசித்தாள் நடிகை. அதன் பிறகு அமீன் அவளிடம் விடை கேட்டான்.

''இதை வைத்துக் கொள்ளுங் கள்!'' என்றுள் நடிகை.

''எதை?'' என்று கேட்டான் அமீன்.

''இந்த செண்ட் பாட்டில் உங் கள் கலியாணத்திற்கு. இதை எனது பரிசாக வைத்துக் கொள் ளுங்கள்.''

''முடியாது!''

''ஏன்?''

''நான் உன்னிட மிருந்து வாங் கினல் பிறகு நானும் உனக்குக் கொடுக்க வேண்டுமல்லவா?''

''ஆமாம்! தாராளமாகக் கொடுங்களேன்!''

''எப்போது கொடுப்பது?''

''என் கலியாணத்தின்போது!''

''கலியாணமா? உனக்கா?''

''ஆமாம்! எனக்குக் கலியாணம் நடக்கக் கூடாதா என்ன?

''யார் கண்டார்கள்? நடிகைக் குக் கலியாணம் நடப்பது...என் னவோ...! சரி! அதெல்லாம் போகட்டும், உனக்குக் கலியாண மாகும்போது அவசியம் கொடுக் கிறேன்!'' என்றுன் அமீன்.

அமீனின் கலியாணம் சிறப் பாக நடந்துவிட்டது. அமீனின் வாழ்க்கை மிகவும் சந்தோஷகர மாக இருந்தது. எழ்மையிலும் இன்பம் இருந்தது.

அமீன் இப்போதும் அடிக்கடி நடிகையின் வீட்டுக்குச் செல் வான். ஆனல் அதிக நேரம் தங்கி யிருக்கமாட்டான். இரவு மணி ஒன்பது ஆவதற்கு முன்னல் வீட் டிற்கு வந்துவிடுவான்.

அமீனின் மகிழ்ச்சி மயமான வாழ்க்கையில் இன்னும் சந்தோ ஷம் நிரம்பியது. அமீன் இப்போது ஒரு குழந்தைக்குத் தந்தையாகி விட்டான். அவன் வீடு கலகல வென்று எப்போதும் ஆனந்த சாகரத்தில் மூழ்கியிருந்தது. ஆனல் விதியின் செயல் என்னவோ வேறுவிதமாக இருந்தது. திடீ ரென்று குழந்தைக்குக் காய்ச்சல் கண்டது. தாயின் இதயம் துடித் தது. அமீன் ஒன்றும் பேசவில்லை. சிரித்தான். அல்லாவின் மீது நம்பிக்கை வைத்து குழந்தையைப் பற்றின கவலையை விட்டுவிட் டான். மாலையில் அமீன் நடிகை யின் வீட்டுக்கு வந்தான். வந்த தும் வராததுமாக நடிகை 'கட கட' வென்று சிரித்தாள்! அமீ னுக்கு ஒன்றுமே புரியவில்லை.

''என்ன சமாச்சாரம்?'' என்று கேட்டான் அவன்.

''ஒன்றுமில்லை நினைத்தால் சிரிப்பு வருகிறது!'' என்றுள் நடிகை.

''அப்படியானல் நீ கூட......''

''ஆமாம்! அமீன் நீங்கள் எதைச் செய்து கொண்டீர்களோ அதை யே நானும் செய்து கொள்ளப் போகிறேன்!''

''யாருடன்?''

''ஒரு மனிதனுடன்!''

"யார் அந்த மனிதன்?"

"ஏன் அந்த மனிதனைப் பார்க்க வேண்டுமா? இவளை எங்கே அழைத்துக்கொண்டு போகப் போகிறாய் என்று கேட்கப் போகிறீர்களா என்ன?"

"ஆமா...ம். சரி அல்லா உன் வாழ்வை இன்ப மயமாக்கட்டும்; நான் வருகிறேன்!"

"அமீன் எங்கே நழுவுகிறீர்கள்? மறந்து விட்டீர்களா?"

"எதை"

"என் கல்யாணத்தின் போது செண்ட் கொடுப்பதாகச் சொன்னது ஞாபகமில்லையா?"

"ஞாபகமிருக்கிறது!"

"அப்போது......"

"கட்டாயம் கொண்டு வருகிறேன்."

"எப்போது!"

"கலியாணம் எப்போது?"

"இரண்டு நாட்கள் இருக்கின்றன."

"அப்போது கலியாணத்துக்கு முந்தினநாள் கொடுக்கிறேன்"

அமீனும் நடிகையும் பிரிந்தார்கள்.

அமீன் வீட்டில் குழந்தைக்கு வியாதி முற்றியது. குழந்தைக்கு வாந்தியும் பேதியும் கண்டிருந்தது. அமீன் திடுக்கிட்டான். உடனே அவன் டாக்டரிடம் ஓடினான். டாக்டர் வந்து மருந்து கொடுத்தார். போகும்போது "பீஸ் எடு?" என்று கேட்டார் அமீனைப் பார்த்து. "நாளைக்குக் கொடுக்கிறேன்" என்றான் அமீன். டாக்டர் சென்று விட்டார்.

மறுநாள் குழந்தைக்கு உடம்பு சுமாராக இருந்தது. மருந்து வாங்கவேண்டும். டாக்டருக்குப் பீஸும் கொடுக்கவில்லை.

அமீனின் மனைவி, தன்னிடம் இருந்த ஒரே மூக்குத்தியை அடகு வைத்து பணம் வாங்கிக்கொண்டு வந்து அமீனிடம் பத்து ரூபாயைக் கொடுத்தாள். அமீன் டாக்டரிடம் செல்லப் புறப்பட்டான். கடைவீதி வழியாகச் சென்று கொண்டிருந்தான். கம்மென்ற வாசனை அவனை இழுத்தது. பக்கத்தில் திரும்பிப் பார்த்தான். "கனேஜ் செண்ட் ஸ்டால்!" என்று போர்டு போட்டிருந்தது. கடை கண்ணுக்குப்பட்டதும் நடிகையிடம் தான் கொடுத்த வாக்குறுதி ஞாபகத்திற்கு வந்தது. வந்த காரியத்தை மறந்து கடைக்குப் போனான். போய் விலையுயர்ந்த செண்ட் பாட்டில் ஒன்றை வாங்கிச் சட்டைப்பையில் போட்டுக்கொண்டான். அங்கிருந்து நேரே நடிகையின் வீட்டுக்கு வந்து நடிகையைப் பார்த்து "இதை வைத்துக்கொள்!" என்றான்.

"எதை?" என்று கேட்டாள் நடிகை.

"இதோ இந்த செண்ட் பாட்டிலை, உன் கலியாணத்துக்கு எனது பரிசாக வைத்துக்கொள்"

"சரி! சந்தோஷம்" என்று வாங்கிக்கொண்டாள் நடிகை.

"நான் போகிறேன்!" என்றான் அமீன் நடிகையைப் பார்த்து.

"அதெல்லாம் முடியாது நான் போகவிடமாட்டேன்!"

"ஏன்!"

"இன்றுதான் கடைசியாக நாம் சந்திப்பது. பிறகு நாம் எப்போது சந்திப்போமோ? யார் கண்டார்கள்!"

"சரி!" என்று ஒத்துக்கொண்டான் அமீன்.

இரவு வெகுநேரம் வரை பேசிவிட்டு வீட்டுக்கு வந்தான் அமீன். வந்து பார்த்ததும் திடுக்கிட்டான். வியாதி மிகவும் முற்றிப்போயிருந்தது குழந்தைக்கு. அமீனின் இதயம் வெடித்துவிடும் போலிருந்தது. அவன் மனைவி அவனைப் பார்த்து "எங்கே இவ்வளவு நேரம் தொலைந்து போய் விட்டீர்கள் குழந்தைக்கு உயிர் போகிறது..." அதற்குள் 'வீல்' என்று குழந்தை கத்தியது. தாய் ஓடிக் குழந்தையினருகில் சென்றாள். ஆனால் அவள் குழந்தையை அணைப்பதற்குமுன் எமதூதன் அணைத்துக் கொண்டுவிட்டான்.

மனைவி அதிர்ச்சியால் ஸ்மரணையற்று கீழே விழுந்தாள். அமீனுக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. ஆனால் ஒன்றும் பேசவில்லை. சிரித்தான். உடனே நடிகையின் வீட்டுக்குச் சென்றான் அவன். தூங்கிக் கொண்டிருந்த நடிகை. எழுந்து வரவேற்றாள்.

"அமீன்! நீங்கள் கொடுத்த செண்ட் நான் கொடுத்ததைவிட மிகவுயர்ந்தது!" என்றாள் அவள்.

அமீன் இதயத்தில் சம்மட்டியால் அடிப்பது போலிருந்தது. நடிகை உள்ளே சென்று செண்டைக் கொண்டு வந்து அமீனின் கன்னத்தில் தடவி "பார்த்தீர்களா அமீன்! எவ்வளவு உயர்ந்த வாசனை! அற்புதமான செண்ட்!" என்றாள்.

"அது செண்ட் அல்ல! என் குழந்தையின் ரத்தம்" என்று அமீனின் வாய் முணுமுணுத்தது.

('ஷய்தா'வின் தழுவல்)

சிந்தனை

கு.ப. சேதுஅம்மாள்

இளவரசன் சித்தார்த்தனுடைய ஜன்ம தின உத்ஸவம் இவ்வாறு வெகு குதூகலத்துடன் கொண்டாடப்பட்டு, எதன் நிமித்தமாக இவ்வளவு ஆடம்பரங்களும் சித்தம் செய்யப்பட்டதோ அந்த மனோரதம் லபித்து விட்ட ஆனந்தத்தில் 'சுத்தோதனரும், அமைச்சரும் பேரானந்தம் கொண்டவர்களாக அந்த விலாச மண்டபத்திலிருந்து புறப்பட்டார்கள்.

மந்திரியினுடைய ஆலோசனையின்மீது, இரவு போஜனத்திற்குப் பிறகு இந்த விஷயத்தை யசோதரையின் பிதாவினிடம் தெரிவித்து அவருடைய மனதையும் ஆஸ்வாசப் படுத்தி விவாகத்திற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று ஆனந்தக் கோட்டை கட்டிக் கொண்டே அங்கிருந்து தம் மாளிகைக்குத் திரும்பினார் சக்கரவர்த்தி.

சுத்தோதனருடைய ஏகாந்த மஹலில் அவர்களிருவரும் சந்தித்துப் பேசிக் கொள்ள ஏற்பாடு செய்தார் மந்திரி.

விருந்தினரும், யசோதரையின் பிதாவுமான சுப்ரபுத்த அரசரும், சக்கரவர்த்தியான சுத்தோதனரும் சம ஆசனங்களில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

மாலையில் நடந்த வரலாறைக் கேட்ட சுப்ரபுத்தன் ஆச்சரியத்தில் மூழ்கி விட்டார்! விரிந்த கண்களுடன் சுத்தோதனருடைய முகத்தையே பார்த்துக் கொண்டு மேலே அவர் சொல்லப் போவது என்ன என்பதை மிக்க ஆவலோடு எதிர் பார்த்தார்.

அப்பொழுது சந்தோஷத்தால் வார்த்தைகள் தடைப்பட "அருமை மிக்க அன்பரே, ஏனிப்படி மௌனமாக இருக்கிறீர்கள் என்பதை நான் அறிகிறேன். இளவரசனும், யசோதரையும் ஒருவர் மற்றொருவருக்காகவே சிருஷ்டிக்கப் பட்டவர்கள் என்பதுதான் என் சித்தாந்தம்! இதில் தங்களுக்கேதும் ஆட்சேபணை இல்லையே!" என்று பரம வாத்ஸல்யமாகக் கேட்டார் சக்கரவர்த்தி.

மரியாதையும் இனிமையும் தொனிக்கும் குரலில் "மஹாபூபதியே, தங்களுடைய வாக்கினின்றும் பிறப்பது ஆட்சேபணைக்கு இடம் தரும் விஷயமாகவா இருக்கும்! சக்கரவர்த்தியின் திருமகன், பராக்கிரமும், சௌந்திரியமும் ஒருங்கே கொண்ட சித்தார்த்தன் என் மருமகனாக, என் குமாரி யசோதரையின் மணவாளனாக வர பாக்கியமிருக்க வேண்டுமே எனக்கு என்றுதான் சங்

கையுறுகிறேன்!'' என்று மொழிந்தார் சுப்ரபுத்த மன்னன்.

''ஏன், நானே அவ்வாறு நிச்சயம் செய்துவிட்ட பிறகு சங்கையுறுவதற்கு?'' என்று பரிவுடன் சொல்லி தமக்குள் தாமாக யோசனை செய்யும் சுப்ரபுத்தனை அக்கரையுடன் கவனித்தார் சக்ரவர்த்தி.

''மஹாராஜா, ஒரு சிறிய விஷயத்தை நான் முன்னதாகவே தங்களுக்குத் தெரிவிக்க வேண்டுமே!'' என்று சுப்ரபுத்தன் சொன்னார்.

''தாராளமாக தெரிவிக்கலாமே?'' என்றார் சுத்தோதனர்.

''குமாரி யசோதரை குழந்தையாக இருந்த பொழுது ஒரு மஹான் — அங்க லக்ஷணங்களால் அதிருஷ்டத்தைக் கணிக்கக் கூடிய நிபுணத்வம் வாய்ந்தவர் காலதேவலரென்றுபேர்கொண்ட யோகி — அவர் சில நிபந்தனைகளை ஏற்படுத்திச் சென்றிருக்கிறார் — யசோதரையின் கணவனை நான் தேர்ந்தெடுப்பதற்கு......'' என்று சொல்லிக் கொண்டே வந்த சுப்ரபுத்தன், சுத்தோதனர் ஏதோ ஒரு நினைவால் அச்சமுறுவதைக் கவனித்து விட்டு, தயக்கத்துடன் ''மஹாபூபதி, என்ன சிந்திக்கிறீர்கள், நான் அறியலாமோ அதை?''

''ஆ! காலதேவலர்! அரசே, அவர் இப்போது எங்கிருக்கிறார்? இருக்கிறாரா இன்னமும் ஜீவியவந்தராக?'' என்று மிக்க ஆவலோடு கேட்டார் சுத்தோதனர்.

தாம் கேட்டதைக்கூட சிரத்தை செய்யாமல், காலதேவலருடைய பெயரைக் கேட்ட மாத்திரத்தில் கலவரமடைந்து விட்ட சக்கரவர்த்தியை வியப்புடன் கவனித்தார் சுப்ரபுத்தன் முதலில்! பிறகு சாவதானமடைந்து, ''இல்லை, அவர் ஜீவன் முக்தி பெற்று விட்டாரே! ஏன் கேட்கிறீர்கள்?'' என்று மறுபடியும் கேட்டார்.

''அன்பரே, சொல்லுகிறேன், அதற்கு முன்பாக யசோதரையின் மணாளனுக்குரிய நிபந்தனையாவை என்பதை தெரிவியுங்கள்'' என்று சிறு குழந்தைபோல அமைதியிழந்து கேட்பதைப் பார்த்து சுப்ரபுத்தனுக்கு ஒன்றுமே விளங்க வில்லை!

அவருக்கும் மனதில் குழப்பமுண்டாயிற்று! சொல்ல வேண்டுமே என்று தயங்கிக் கொண்டு, ''மன்னர் மன்னவ, பூர்வீகத்தில் கேள்விப் பட்டிருக்கிறோம், வில்லை வளைத்து ஸீதா தேவியை ராமன் கை பிடித்ததும், தன்னிடமிருந்த மணி வளையத்தினுள்ளிருக்கும் வஸ்துவை ஒரு அம்பினல் வீழ்த்தும் ராஜ குமாரனுக்கே தம் பெண் உரியவளென்றும் இதிஹாசத்தில் கண்டிருக்கிறோம்! இவைகள் ராஜகுமாரனுடைய வீரியத்தை அறிய சிறந்த சாதனம் என்பதை மறுக்க முடியாது!

ஆனல், இவற்றின்கூட இன்னுமிரண்டு அற்புதச் செயல்கள் இருக்கின்றன! அவைதான் எனக்கு தீராத கவலையைத் தந்து, எனது குமாரி கன்னிகையாகவே இருக்க நேர்ந்து விடுமோ என்ற திகில் என்னை ஆட்டுகிறது!''

''அதென்ன அப்படிப்பட்ட நிபந்தனை — திகிலுறும்படியாக?''

''சொல்லக்கூட நாவெழும்பவில்லை, வறுக்கப்பட்ட நவதானியங்களும், பூணைக்கழற்றிய உலக்கையும் மறுபடி உயிர் பெறுமாம் அவன் கைத்தண்ணீரால்!''

"என்ன, என்ன!"

"ஆம் சக்கரவர்த்தி! இவை காலதேவலருடைய வாக்கிலிருந்து ஜனித்த சத்திய மொழிகள்! வறுக்கப்பட்ட தானியங்கள் முளைகண்டு, உலக்கையும் தளிர்த்தால் எனது குமாரி மணமகள் ஆவாள், நான் பார்க்கலாம்! மஹாராஜா, அந்த மஹா புருஷனே என் மகளை கை பிடிக்க இருக்கிறான். அவன் சித்தார்த்தனை இருக்கக்கூடாதா என்று சிந்திக்கிறேன்!" என்று தமது உள்ளக் கிடக்கையைத் திறந்து சொன்னார் சுப்ரபுத்தன்.

"மன்னரே, பாரத வர்ஷத்தில் இத்தனை காலமாக யாருமே இவ்வித அற்புதச் செயல்களை நிறைவேற்றியதாக நாம் அறிந்ததில்லை! மஹான் காலதேவலருடைய வார்த்தை வீண் போகாதது. அதை நான் நன்கு அறிவேன்!

ஆகையால் இப்போது நான் சொல்லக்கூடியது ஒன்றே ஒன்று தான்; சத்தியம், தவறாமல் இந்த பூமண்டலத்தை நான் ஆளுவது உண்மையாக இருந்தால் எனது குமாரன் சித்தார்த்தனுடைய கை நீரால் வறுத்த தான்யங்களும் முளைத்து, உலர்ந்த கட்டையும் துளிர்க்கட்டும்!"

"மஹாராஜா, அவ்விதமே ஆக நானும் பேரவாக் கொண்டிருக்கிறேன் பிரபு!" என்று பதிலை ஆவல் ததும்ப சட்டென்று சொன்னார் சுப்ரபுத்தன்.

இவ்வாறு சுத்தோதனரும், சுப்ரபுத்தரும் பரஸ்பர தத்தம் மனதிலெழுந்த கலவரங்களை லட்சியமே செய்யாமல், தைர்யமாக பேச்சினிமை பொருந்தப் பேசிக் கொண்டு, நித்திரா காலம் சமீபித்து விட்டதை அறிந்து சுப்ரபுத்தனுக்கு விடை கொடுத்தனுப்பி விட்டு சிந்தனை மனதுடன் தம் மஞ்சத்தின் மீது சாய்ந்தார் சக்கரவர்த்தி.

இரவு போய், உதயமாகி நாலு நாழிகைப் பொழுதும் ஓடி விட்டது. காலைக்கடன்களை முடித்துக் கொண்டு அமைச்சர் பேட்டி மஹலில் அரசரைக் காண வந்த பொழுது அங்கே சுத்தோதனரைக் காணவில்லை.

முதல் நாளிரவு சம்பாஷணை நடந்த ஏகாந்த மாளிகையை நோக்கி விரைந்தார் மந்திரி.

அங்கு சென்று பார்க்கும் பொழுது துயரம் தேங்கிய மனத்தினராக சக்கரவர்த்தி மஞ்சத்தில் சயனித்தபடியே இருக்கக் கண்டார்.

பக்கத்தில் சென்று வரவு கூறி வணங்கிக்கொண்டிருக்கும் பொழுதே இளவரசரும் அங்கே தோன்றினார். "அரசே, இதோ இளவரசரும் காலை வந்தனத்திற்காக இங்கேயே வந்து விட்டார்!" என்று சொல்லவும் சித்தார்த்தன் பிதாவின் சமீபம் வரவும் சரியாக இருந்தது.

எழுந்து உட்கார்ந்தார் சுத்தோதனர். முகத்தில் மலர்ச்சியை உண்டாக்கிக் கொண்டு புத்திரனை ஆவலுடன் வரவேற்றார்.

சித்தார்த்தன் அருகில் சென்று நமஸ்கரித்து எழுந்ததும் அவரையும், மந்திரியையும் தமது சமீபமாக அழைத்து மஞ்சத்தின்மீது அமர்த்திக் கொண்டார்.

பிறகு அருமையுடன் தமது குமாரனுடைய நெற்றியை ஒதுக்கி முகத்தை அன்பு தோன்ற வருடியபடியே தம்மை கனிவு

டன் பார்ப்பதை சித்தார்த்தன் கண்டார்.

அந்தப் பார்வை ஏதோ ஒரு சங்கையை வெளியிட்டுக் காட்டு வதைக் கண்ட சித்தார்த்தன் மெதுவான குரலில் "பிதா, என்ன சிந்திக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

குமாரன் இவ்வாறு கேட்டது தான் தாமதம், சக்கரவர்த்தியின் முகத்திலிருந்த மலர்ச்சி பறந்து போயிற்று, கண்கள் கலங்கின.

"பிதா, தங்களுடைய கலக்கத்தைக் கண்டு எனது......"

"குமார சித்தார்த்த............" என்றார் குரல் தழுதழுக்க.

தகப்பனாருடைய தடுமாற்றம் நிறைந்த துயரம் இன்னதென்று விளங்காமல் திகைத்தான்.

"அரசே, தங்கள் மனத்துயரம் தங்களுக்கே சொந்தமானதா?" என்று சமயோஜிதமாகக் கேட்டார் மந்திரி.

உடனே தமது அமைச்சரின் புறமாகத் திரும்பி அன்பு நிறைந்த குரலுடன் "அன்பரே, அனைத்தும் தங்களுக்கும் உரியவைதாம்! ...."

"அப்பொழுது தாராளமாகச் சொல்லலாமே!"

"துணைவரே, மஹான் காலதேவலரை ஞாபகமிருக்கிறதா தங்களுக்கு?"

"நன்றாக இருக்கிறது, சொல்லுங்கள்......"

"அவர் இங்குவந்து நமது சித்தார்த்தனுடைய அங்க லக்ஷணங்களை மட்டும் கூறவில்லை — சுப்ரபுத்தருடைய மாளிகைக்குச் சென்று, அவருடைய குமாரியின் லக்ஷணங்களையும் ஆராய்ந்து — அதோடு அல்லாமல் அவளை மணக்க இருப்பவனை தேர்ந்தெடுக்க சில அறிகுறிகளைத் தெரிவித்திருக்கிறாராம்! அமைச்சரே, இது காறும் நாம் கேள்விப்படாத விசித்திரங்களெல்லாம் என் வாழ்வில் வந்து வாய்த்திருக்கிறது" என்று சொல்லி, முதல் நாள் சுப்ரபுத்தன் தெரிவித்த சங்கதியை அப்படியே எடுத்துச் சொன்னார் சுத்தோதனர்.

அரசர் சொன்னதை கொஞ்ச நேரம் மௌனமாக ஆழ்ந்து யோசித்து விட்டு "அரசே, குதிரையேற்றமும், பாணப்ரயோகமும் பற்றிய பிரச்னையில் இளவரசருடைய திறமை நமக்குப் பரிச்சயமானது — ஆனால் கடைசியாக உள்ள இரண்டு நிபந்தனைகளைப் பற்றித்தான்......"

"அமைச்சரே, அது முற்றிலும் உண்மை! அதிலும் காலதேவலருடைய நாவில் பிறந்த வாக்கியம். சுப்ரபுத்தனுடைய ஆந்திரீகப் பதைப்பை நான் நிதரிசனமாக நேற்று கண்டேன்" என்று சொன்னார் சக்கரவர்த்தி.

அசாதாரண சூக்ஷ்மமும், தீர்க்க தரிசன சக்தியும் பெற்ற மந்திரியின் கலக்கத்தைக் கண்டு அரசரும் திகைத்துப் போய் உட்கார்ந்திருந்தார்.

அப்போது சித்தார்த்தன் கணீரென்ற குரலில் "சக்கரவர்த்தியும் அமைச்சரும் இப்படி இந்த சிறிய விஷயத்திற்காக துயருறுவது கண்டு எனக்கு வியப்புண்டாகிறது! யசோதரை எனது மனைவியாக வேண்டிய பிராப்தமிருந்தால் அவை பலிக்கிறது! பலிக்கவில்லை என்றாலும்தான் என்ன? அதனால்

நமது ராஜ்யத்திற்கும் நமக்கும் தவிர்க்க முடியாத நஷ்டமொன்றும் நேர்ந்து விடப்போவதில்லையே! அவளுடைய கணவன் நானல்லவென்பது......''

சித்தார்த்தனுக்கு வார்த்தைகள் தடைபட்டு நின்றன. பேசு முன்பு தோன்றிய தைரியம் இப்பொழுது இல்லை! அவ்விடத்தில் நிலை கொள்ள வில்லை — எழுந்து பிதாவை வணங்கி உத்தரவு பெற்றுக் கொண்டு புறப்பட்டு விட்டான் இளவரசன்.

புத்திரனுடைய உள்ளக் கிடக்கையை ஸ்பஷ்டமாகத் தெரிந்து கொண்ட சுத்தோதனருக்கு இருமடங்கு கிலேசமுண்டாயிற்று.

துயரத்தால் தத்தளித்த குரலுடன் ''அமைச்சரே, இதுகாறும், அவன் இன்பத்தை நிமிர்ந்து பார்ப்பானே என்று ஏங்கினேம். அதற்காக என்றே இந்த வைபவத்தை ஆடம்பரமாக்கி பரீட்சை பார்த்தோம். இப்போது எனப்படிச் செய்தோம் என்ருகி விட்டதே என்ன செய்கிறது ?''

''அதிபரே, சித்த உறுதியைத் தளர விடாதீர்கள். நிச்சயமாக நமது இளவரசர் வெற்றி பெறுவார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது''

''பெருவிடில்?''

''அப்படியேன் நினைக்கிறீர்கள்? நிச்சயம் யசோதரைதான் நமது வருங்காலத்து பட்டமகிஷி. இன்னென்றைத் தங்களுக்கு இச்சமயம் நினைவூட்டுகிறேன். சித்த புருஷரான காலதேவலரால் 'அமானுஷிக சக்தி பெற்ற மஹா புருஷன்' என்பதாக அல்லவோ ஸ்திரப் படுத்தப்பட்டிருக்கிறது? அவருடைய திவ்ய வாக்கினல் சிறப்பிக்கப் பட்ட உத்தமன் அல்லவா நமது சித்தார்த்தன்!

அவருடைய விருப்பம் வியர்த்தமாகுமா? பிறருடையது என்றிருந்தால் அவருடைய மனம் விரும்புமா? அவ்வளவு கூட்டத்தினரில் அவர் தம் மனைவியைத்தான் நிமிர்ந்து பார்த்தார்! அதை நாமே நமது கண்களால் காணவில்லையோ மஹா ராஜா! அவர் தலை நிமிர்ந்து பார்த்து வேட்கையுற்ற அந்த யசோதரைதான் அவருடைய பத்தினி! இதை நிச்சயமாக நம்புங்கள்'' என்று வாச்சல்யமான குரலில் சொல்லி நிறுத்தினர்.

அமைச்சருடைய இந்த தீர்க்க தரிசன உறுதிமொழி அரசரை ஆனந்த சாகரத்தில் ஆழ்த்தியது. உத்ஸாகத்துடன் ராஜ காரியங்களை கவனிக்கவும், சுப்ரபுத்தரைக் கண்டு சுயம்வரத்திற்கான ஏற்பாடுகளைச் செய்யச் சொல்லி அவரை ஊருக்கனுப்பும் முக்யத்துவத்தையும் கருதி தம் ஆசனத்திலிருந்து எழுந்தார்.

★

புத்தக ஆராய்ச்சி

•

[கலைமலர்: பதிப்பாசிரியர்: கலைப் பித்தன். (மாத வெளியீடு) புதுக் கோட்டை: விலை அணா 0-8-0]

"கலைப்பித்தன்" உற்சாகம் மிக்க சிறந்த எழுத்தாளர். கருத்தழகும் சொல்லழகும் ததும்ப எழுதும் வன்மை பெற்றவர். தம்முடைய இம்மலரை வெகு அழகாகக் கொணர்ந்திருக்கிறார். புகழ் பெற்ற இலக்கிய ஆசிரியர்கள் விஷயதானம் புரிந்திருக்கிறார்கள். கலைப்பித்தன் 'காணிக்கை'யில் இந்த விதம் கூறுகிறார். "எமது உறுதி, ஊக்கம், உணர்ச்சி, அறிவு, ஆற்றல், மூச்சு அனைத்தையும் முத்தமிழுக்கே தத்தம் செய்து விட்டோம் என்பதை அறுதியிட்டுக் கூறுகிறோம். உங்கள் அன்பையும் ஆதரவையும் ஒத்துழைப்பையும் தந்து, எங்களோடு கைகோத்துக் களிநடம் புரியக் கோருகிறோம்."

வாஸ்தவந்தான். ரசிகர்கள் இலக்கிய வெள்ளத்தில் திளைத்து ஆனந்தங் கொள்வார்களாக!

•

[மறுமலர்ச்சி: (மாத வெளியீடு) ஆசிரியர்கள்: ஏ. எஸ். முருகானந்தம், டி. எஸ். வரதராஜன். விலை: 30. சதம். யாழ்ப்பாணம்]

நமது இலங்கை எழுத்தாள நண்பர்கள் ஆர்வத்திற்குப் பேர் போனவர்கள்! இலக்கிய உலகில் 'மாயக் கனவுகளை' சிருஷ்டிக்க வேண்டும் என்பதில் தமிழ் நாட்டிற்கு எந்த விதத்திலும் சளைத்தவர்கள் அல்ல! கதை, கட்டுரை, கவிதை எந்தத் துறையிலும் 'அபாரமாக'த்தான் இறங்குகிறார்கள். அதற்கு சரியான உதாரணமாக மலர்ந்திருக்கிறது, "மறுமலர்ச்சி" பெயரைப் பார்த்தாலே "எல்லாம்" தெரிந்து கொள்ளலாம். படித்தவுடன் சந்தேகங்கள் பறந்து விடுகின்றன! முக்கியமான "எழுத்தாளர்களும் ரசிகர்களும் சேர்ந்து ஆரம்பித்த பத்திரிகை இது. இதனுடைய வளர்ச்சி இலக்கியத்தின் வளர்ச்சி. இதனுடைய இதயத்துடிப்பு தமிழ் இலக்கியந்தான்" என்பதை அறிந்து கொள்வீர்கள்.

•

[வெள்ளித் திரை: (மாத மாதம் வரும் புத்தகம்) பதிப்பாசிரியர்: தா. நாகலிங்கம். விலை 4- அணா. உரிமை: புதுமலர் நிலயம், கோயமுத்தூர்.]

அழகான தோற்றத்துடன், சினிமா சம்பந்தமான உயரிய விஷயங்களோடு வெளி வரும் புத்தகம். பழக்கமான எழுத்தாளர்களே எழுதி இருக்கிறார்கள்.

•

கிடைக்கப் பெற்றோம்:

[இள எழுச்சிப் பாக்கள்: ஆசிரியர்: திருவத்திபுரம் மாவண்ணா, தேவராசன். பிரசுரம்: ஸ்ரீ இலக்ஷ்மி நூல் பதிப்பகம், திருவத்திபுரம், வ. ஆ. விலை. 3 அணா]

இதய கீதம்

[கே. ஸி. எஸ். அருணசலம்]

நெஞ்சைக் கவரும் இரு தாமரைகளால் — இரு
நீலக் குவளைகளை மறைப்பதுபோல்
கொஞ்சிச் சிரித்துவளை குலுங்கிடவே — உன்
கோலக் கரங்களினுல் விழிபுதைத்தாய்.

நாணித் திருவிழிகள் புதைத்து நின்ருய் — அடி
நல்லமழை கண்டுமயில் நாணிநிற்குமோ ?
வீணைச் சுதியைவிரல் வேண்டியணையின் — அது
வெட்கிக் கிடப்பதெனில் விந்தையல்லவோ ?

தித்திக்கும் மாங்கனியைத் தேடிவந்தவோர் —
தீங்குயில்தான் கண்டதனைப் பாடியினிதாய்க் —
கொத்திப் புசித்திடவே முயலுவதை — பெருங்
குற்றச் செயல்எனவே கூறிடுவதோ ?

★

பலி

[ஜெயலட்சுமி ஆர். ஸ்ரீனிவாசன்]

நான் எம். ஏ. தேறினேன். என் பெற்ளேர் எனக்குக் கலியாணம் செய்ய வேண்டுமென்று பெண் தேடிக் கொண்டிருந்தார்கள். கடைசியில் எப்படியோ பெண் நிச்சயமாயிற்று. எங்கள் ஊரிலிருந்து பன்னிரண்டு மைல் தூரத்திலிருந்த ஒரு கிராமந்தான் அவள் ஊர். அவள் பெற்ளேர் ரொம்ப ஏழையாம். எனக்கோ கனவான் வீட்டு மாப்பிள்ளையாக வேண்டுமென்று ரொம்ப விருப்பம். ஏனெனில், இங்கிலாந்துக்குப் போய் நான் படிக்க வேண்டும். என் தந்தைக்கு எனக்காக நிறைய பணம் செலவழிக்கும்படியான சக்தியில்லை. செல்வந்தர் வீட்டு மாப்பிள்ளையானல் நான் இங்கிலாந்திற்குச் சுலபமாக செல்ல முடியும். ஆதலால் அந்த ஏழைப் பெண்ணை மணப்பதற்கு என் உள்ளம் சம்மதிக்கவில்லை.

மாலை நேரம். உலாவிவரச் சென்றிருந்தவன் அப்பொழுது தான் அகத்திற்கு வந்தேன். என் தந்தை வெகு. ஆசாரசீலர். நாள் தோறும் தவருமல் சந்தியா வந்தனம் செய்வார். நானும் அப்படிச் செய்ய வேண்டுமென்பது அவருடைய விருப்பம். உலாவச் செல்லுகையில் நண்பர்களுடன் வார்த்தையாடும் வேடிக்கையில் சந்தியா வந்தன சமயம் நெருங்கியும்கூட எனக்குத் தெரியவில்லை. நான் வீட்டிற்கு வந்த சமயம் அப்பா உள்ளே ஜபம் செய்து கொண்டிருந்தார். நான் சட்டையைக் கழற்றுவதற்காக என் அறைக்குச் சென்றேன். அங்கே என் தங்கை விஜயா படித்துக் கொண்டிருந்தாள். நான் அவளை 'வி' என்று அழைப்பேன். என்றைக்கும் மாலை நேரங்களில் அவள் சுவாமி கீர்த்தனங்களைப் பாடிக் கொண்டு சுவாமி அறையிலிருப்பது வழக்கம். இன்று என் அறையில் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து "என்ன வாசிக்கிறுய், வீ?" என்றேன். படித்துக் கொண்டிருந்த புத்தகத்தை மேஜை மீது வைத்து விட்டுப் "படிக்கவுமில்லை, ஒன்றுமில்லை. அந்தப் பாழும் புத்தகத்தில் படிப்பதற்கு என்ன இருக்கிறது?" என்ருள் அவள். நான் சட்டையைக் கழற்றி மாட்டிவிட்டு டையை அவிழ்க்கலானேன். அப்பொழுது அவள் "அண்ணு, உனக்குச் சம்மதமா?" என்று கேட்டாள்.

"என்ன சம்மதம்?" என்றேன் நான்.

அவள், "ஒன்றும் தெரியாது பாவம்! அந்தப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்வதற்குச் சம்மதமா என்ருல் என்ன என்கிருயே?" என்ருள்.

"நான் அவளைப் பார்க்கவே இல்லை! நான் என்னவென்று பதில் சொல்லட்டும்?" என்றேன்.

"அண்ணு, அவள் எல்லா விதத்திலும் உனக்கு ஏற்றவளாகவிருக்கிருள். எழுதப் படிக்கத்

தெரியும். பார்ப்பதற்கோ நல்ல அழகி அவள்......'' என்றாள்.

"வரதக்ஷிணை எவ்வளவு கொடுக்கிறார்களாம்?'' என்றேன்.

விஜயா சொன்னாள்: "அப்பாவிற்கு வரதக்ஷிணை வாங்க விருப்பமில்லை. அண்ணா, அவர்கள் ரொம்பவும் ஏழை. ஆனால் பெண் ரதிதேவியைப்போல் இருக்கிறாள். அவர்களாக ஐந்நூறு ரூபாய் கொடுக்கிறோம் என்றார்கள். அதை வாங்க அப்பா இஷ்டப்படவில்லை''

"வீ, எனக்கு லண்டனுக்கு சென்று 'லா' படிக்க வேண்டுமென்று விருப்பம். அதற்கான செலவைக் கொடுப்பதாக விருந்தால் மட்டும்.........''

"அப்பொழுது விஜயா, அண்ணா, நீ ஒரு எம். ஏ. உன் வாயில் இத்தகைய வார்த்தை வரலாமா? உன்னை நீயே விற்றுக் கொள்வதா? இது அழகல்ல உனக்கு'' என்று சினந்து கொண்டு கூறினாள். நான் பதிலளிக்கவில்லை. கோபித்துக் கொண்டு அவள் சென்று விட்டாள்.

ஜபத்தை முடித்துக் கொண்டு வெளியே வந்து உட்கார்ந்தேன். என் தந்தையும் வெளியில் வந்தார். "என்னடா, நீ விஜயாவிடம் என்ன சொன்னாய்?'' என்று கேட்டார். நான் பேசவில்லை.

"நீ மேலே படிப்பதற்குப் பணம் கொடுப்பதாக விருந்தால் கலியாணம் செய்து கொள்கிறேன் என்றாயாம். அவர்களோ ஏழை, ஆறேழு பெண் குழந்தை கள்வேறு! எங்கே இருந்து பணந் தருவார்கள் பாவம்! நீ ஒன்றும் அறியாத குழந்தையில்லையே! பெண் லக்ஷணமாக விருக்கிறாள். நீ பெரிய மனிதர் வீட்டு மாப்பிள்ளையாகி, லண்டன் செல்வதில் எனக்கு விருப்பமில்லை. இந்தப் பெண்ணைப் பண்ணிக்கொண்டால் இவ்விடமே 'லா' படிப்பதற்கான செலவை நான் என்னவாவது பாடுபட்டு ஏற்றுக் கொள்கிறேன். என் வார்த்தையைக் கேட்காத பட்சத்தில் நீ என் பிள்ளையல்ல', என்று சொல்லி விட்டு உள்ளே சென்று விட்டார். கொஞ்ச நாழிகைக் கெல்லாம் அம்மா சாப்பிட அழைத்தாள். "எனக்குப் பசிக்க வில்லை'' என்று என் அறைக்குள் சென்று தாழ்ப்பாளிட்டுக் கொண்டேன். கொஞ்சமாவது சாப்பிடென்று அம்மா வெளிப்புற மிருந்தே கேட்டாள். எனக்குக் கொஞ்சமும் வேண்டாமென்றேன்.

அன்று இரவு அனைவரும் படுத்துக் கொண்ட பிறகு, நான் வெளியே கிளம்பினேன். என் மனம் சினத்தால் கலங்கிற்று. அந்தப் பெண்ணைக் கலியாணம் செய்து கொள்வதில் எனக்குக் கொஞ்சமும் விருப்பமில்லை. தந்தையின் எதிரில் நின்று அப்படிச் சொல்லத் தைரியமுமில்லை எனக்கு. ஆதலால் அன்று இரவே வீட்டை விட்டுக் கிளம்பினேன். எங்கள் கிராமத்திலிருந்து ரயில் வேஸ்டேஷனுக்கு நான்கு மைல். நான் அவ்விடம் போய்ச் சேரும் பொழுது மணி பன்னிரண்டு. ரயில் புறப்படுவதற்கு இன்னும் பத்து நிமிஷம்! அதற்குள்ளாகச் சென்னைக்கு ஒரு டிக்கெட் வாங்கிக் கொண்டு ஒரு கம்பார்ட்மெண்டில் போய் அமர்ந்தேன். நான் உட்கார்ந்த விடத்தில் வேறொருவருமில்லை. மேலே செய்வதென்னவென்று சிந்தித்த வண்ணம் உட்கார்ந்திருந்தேன்; தூக்

கம் வந்து விட்டது. என்னவோ சத்தமாகவே என் தூக்கமும் கலந்தது. கண்ணைத் திறந்து பார்த்தேன். பௌர்ணமி சந்திரன் ஜன்னல் மூலம் எட்டிப் பார்த்த வண்ணமிருந்தான். நிலாவொளியில் எதிர் பெஞ்சின்மீது இன்னொருவர் உட்கார்ந்திருப்பதைக் கண்டேன். எங்களூரிலிருந்து புறப்படும்பொழுது நான் ஒருவன்தான் இருந்தேன். நடுவில் யாரோ ஏறி உட்கார்ந்திருக்க வேண்டுமென்று யோசித்தபடியே எழுந்து உட்கார்ந்தேன், எதிரில் உட்கார்ந்திருந்தவர், வாலிபனைப்போல் 'ட்ரெஸ்' செய்து கொண்டிருந்தார். பார்த்தவுடன் கிழவனென்று புலப்படும்படியாக விருக்க வில்லை. அவருடைய ஆடையலங்காரங்கள் அவர் ஒரு பணக்காரர் என்று தெரிவித்தன. உடனே அவரை அறிமுகப் படுத்திக் கொள்ள வேண்டுமென்று விருப்பமேற்பட்டது எனக்கு.

அவர் என்னையே நோக்கிய வண்ணம் உட்கார்ந்திருந்தாலுங்கூடப் பேசப்போவதாகத் தோன்றவில்லை. நானே பேசலாம் என்று முடிவு செய்தேன். "சுவாமீ தயவுசெய்து மணி என்னவென்று சொல்ல முடியுமா?" என்று கேட்டேன். அவர் கைக் கடிகாரத்தைப் பார்த்து 'இரண்டு மணிக்குப் பத்து நிமிஷம்" என்றார். நான் முதலில் பேச ஆரம்பித்த பிறகு அவரும் பேச ஆரம்பித்தார். பேசியதில் அவர் பெரிய வாயாடி என்று பட்டது. பேசிக் கொண்டே சென்னைக்குப் போய்ச் சேருவதற்குள்ளாகவே நாங்களிருவரும் நண்பர்களாகி விட்டோம்.

அந்தக் கிழவர் ஒரு ரத்தின வியாபாரி.

நான் யார் என்று கேட்டதற்கு நான் ஒரு ஏழை என்றும் எம். ஏ. தேறி இருக்கிறேன் என்றும், வேலை தேடுவதின் நிமித்தம் சென்னைக்குப் புறப்பட்டிருக்கிறேன் என்றும் சொன்னேன். வேலை எதுவும் கிடைக்கா விட்டால் தன்னை வந்து பார்க்கும்படிச் சொன்னார். ரயிலும் சென்னை வந்து சேர்ந்தது. ரயிலை விட்டிறங்கி, முன்பு படிக்கும்பொழுது வசித்து வந்த Y. M. C. A. க்கு நான் சென்றேன். சட்டம் படித்துவரும் என் நண்பர்கள் பலர் அங்கே இருந்தனர். அவர்களுடன் பேசிய வண்ணம் அன்று அங்கேயே தங்கினேன்.

அடுத்த நாளையிலிருந்து வேலை தேட வாரம்பித்தேன். என் துரதிருஷ்டத்தினால் எங்கேயும் வேலை கிடைக்கவில்லை. நான் சென்னைக்கு வந்து இரண்டு வாரம் கழிந்தது. கையிலிருந்த சொற்பப் பணமும் செலவழிந்து விட்டது. சாப்பாட்டிற்கே தொந்திரவு. வேறெதுவும் திக்குத் தோன்றாமல் ரயில் நண்பர் வீட்டிற்குச் சென்றேன். நான் போன வேளை அவரும் வீட்டில் இருந்தார். நான் வந்ததைக் கண்டு அவருக்கும் வெகு சந்தோஷமாயிற்று. பேச்சு வார்த்தை நடந்த பிறகு எனக்கு வேலை கிடைக்கவில்லை யென்று அவருக்குத் தெரிந்தது. அவருக்கு ஒரு பெண்ணும், தூரத்து உறவினளான மருமாளும் இருந்தனர். அவர்களிருவருக்கும் பாடம் சொல்லிக் கொடுக்க முடியுமா என்று கேட்டார். ஒரு வேலையும் கிடைக்காத எனக்கு அதே ஒரு பெரிய உத்தியோகம் போலாயிற்று; சரி என்று இணங்கினேன். மறு நாளிலிருந்து பாடம் சொல்லிக்கொடுக்க ஆரம்பித்தேன். அவர் பெண்ணிற்கு

சுமார் பதினன்கு வயதிருக்கும், மருமாளிற்குப் பதினறு. அவர் பெண் லக்ஷணமாக விருந்தாள். ஆனல் மருமாள் இன்னும் அழகாக விருந்தாள். பாடத்திலும் அப்படியே. பெண்ணின் படிப்போ சுமாராய்த்தான் இருந்தது. மருமாளோ வென்றல் ஒரு தடவை சொன்னல் போதும் உடனே கற்றுக்கொண்டு விடுவாள். பெண் ரொம்பவும் பேசுவாள். மருமாள் கேட்ட கேள்விக்குப் பதிலைத் தவிர வேறென்றும் பேசமாட்டாள். பெண்ணிற்கு எப்பொழுதும் சிரித்த முகம். மருமாளின் அழகிய முகமானது ஏதோ கவலையால் சுண்டி இருக்கும். கவலையால் வாடி இருந்தும்கூட அந்த முகத்தில் அதொரு விதமான, எவ்வளவு பார்த்தாலும் போதாது என்பது போன்ற அழகு விளங்கிற்று. பெண்ணின் பெயர் சீதா; சாந்தி என்பது மருமாளின் பெயர்.

நான் பாடம் சொல்லிக்கொடுப்பதற்கு ஆரம்பித்து ஆறு மாதங்கள் கழிந்தன. பெண்களிருவரும் நன்றகவே பாடம் கற்றுக் கொண்டிருந்தனர். ஆனல் சாந்தாவைப் போல் ஸூக்ஷ்மமாக சீதா கற்றுக் கொள்ள மாட்டாள். சாந்தாவின் அழகு, அழகைச் சூழ்ந்த துயரம், கல்வியில் அவளுக்கிருந்த பற்றுதல், மிதமான பேச்சு; ஆக எல்லாம் சேர்ந்து என் உள்ளத்தை அவள்பால் இழுக்கவாரம்பித்தன. எவ்வளவு பார்த்தாலும் அவளை இன்னொரு தடவை பார்க்க வேண்டுமென்று ஆசையுண்டாகும். அவள் ஹைகோர்ட் ஜட்ஜின் தங்கை பெண்ணுக விருந்தாலும் அவள் பெற்றோர்கள் அவ்வளவாக செல்வமுடையவர்களல்ல. பெண்ணின் கலியாணத்திற்காக ரொம்ப பிரயத்தனம் செய்து கொண்டிருந்தார்கள். ஏழ்மை நிலையால் வரதக்ஷிணை கொடுக்க மாட்டாமல் இன்னும் பெண்ணிற்கு கலியாணமாகவில்லை. எனக்கோ வென்றல் எப்பொழுதும் சாந்தாவின் ஜபம் தான். கலியாணம் செய்து கொண்டால் அவளைத்தான் கலியாணம் செய்துகொள்ள வேண்டுமென்று தோன்றிற்று. அவளைக் கலியாணம் செய்து கொண்டாலோ லண்டனுக்குச் செல்ல முடியாது. ஆதலால் அவளை மறக்க முயற்சித்தேன். எவ்வளவு முயற்சித்தாலும் அவள் சத்குணங்கள் என்னை அவள்பால் இழுக்கவாரம்பித்தன.

நான் சீதாவை விவாகம் பண்ணி இருக்கலாம். எவ்வளவோ தடவை அவள் தகப்பனர் என்னை மாப்பிள்ளை என்று பரிகாசமாக அழைப்பார். அவருக்கு சீதா ஒருத்திதான் பெண். அவளை எனக்குக் கலியாணம் செய்து என்னை மாப்பிள்ளையாக்கிக் கொள்ள வேண்டுமென்பது அவர் விருப்பம். அவர் மாப்பிள்ளையாகி விட்டால் சுலபமாக நான் லண்டனுக்கு போகலாம் போல் இருந்தது. ஆனல் என்றையிலிருந்து சாந்தாவைக் காதலிக்கத் தொடங்கினேனே அன்றையிலிருந்து பணத்திற்காக அன்பைப் பலியிடப்படாதென்று என் உள்ளம் தூண்டிற்று. எனக்கு இன்றும் லண்டனுக்குச்செல்ல வேண்டுமென்ற விருப்பம் குறைந்தபாடில்லை. ஆதலால் சாந்தாவின் பெற்றோரிடத்தில் சாந்தா பிக்ஷை வேண்டுவதற்கு நான் இன்னும் சித்தமாகவில்லை.

ஒன்பது மணியடித்து விட்டது. நான் படிக்கும் அறையில் அமர்ந்து என் மாணவிகளின்

வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். உண்மையைச் சொல்ல வேண்டுமானல், நான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது சாந்தாவைத்தான். சாந்தாவைச் சிந்தனை செய்து கொண்டிருக்கையில் கதவு திறந்த சப்தம் கேட்டது. திறந்த கதவின் வழியாகச் சீதா நுழைந்தாள். எப்பொழுதும் அவள் கூடவே வரும் சாந்தாவைக் காணேம். அவளைக் காணுமல் மனம் கவலையுற்றது. எடுத்தவுடன் 'சாந்தா எங்கே?' என்று கேட்பதற்குக் கொஞ்சம் சங்கோசமாக விருந்தது. ஆனல் நான் கேட்பதற்கு முன் அவளே "பாருங்கள் சார், நேற்று இரவு சாந்தாவின் அப்பா வந்து அவளை ஊருக்கு அழைத்துக் கொண்டு போய் விட்டார். எதற்கென்று தெரியுமா? கலியாணம் செய்ய!" என்ருள்.

அப்பொழுதுதான் நான் அறிந்தேன், சாந்தா இல்லாமல் நான் பிழைத்திருக்க முடியாதென்று. முன்பே அவள் பெற்ரோர்களைக் கேட்காமல் போனதற்காக என்னை நானே நிந்தித்துக் கொண்டேன். இப்பொழுது என்ன செய்தென்ன பலன்? பணத்தாசையால் என் வாழ்வை நானே பாழாக்கிக்கொண்ட பிறகு அறிந்தேன், சாந்தா இல்லாமல் இந்த உலகில் உயிர் தரிப்பது என்னல் அசாத்தியமென்று. சாந்தாவை துறந்து, அன்று பூராவும் அசாந்தியுடன் கழித்தேன். மறுநாள் பாடத்தின் பொழுது, சீதா கடிதமொன்றை எனக்குக் காண்பித்தாள். அன்று காலையில் தபால் மூலம் சீதாவிற்கு சாந்தாவிடமிருந்து வந்த கடிதமது.

அன்பார்ந்த சீதா, சந்தோஷமாக விருக்கும் உன்னைத் துயரத்திற்குள்ளாக்குகிறேன்; மன்னிப்பாயாக. உனக்கு என் துயரத்தை எழுதி இருக்க மாட்டேன். ஆனல் இவ்வுலகில் எனக்கு உன்னைக் காட்டிலும் வேறெந்த உற்ற நேசியும் கிடையாது: உன்னிடம் சொல்லாமல் நான் இதுவரைக்கும் எதுவும் செய்தவளல்ல. இப்பொழுது செய்யப் போகும் இந்தக் காரியத்தையும் உனக்குச் சொல்லாமல் செய்ய மாட்டேன்.

அப்பா என் கல்யாணத்தை நிச்சயம் செய்து விட்டார். அப்பாவை விட வயதில் முதிர்ந்தவராம்! மூன்ரும் கலியாணமாம்! வரனுக்கு நான்கு பேர் பேரக் குழந்தைகள் உண்டாம். வரதக்ஷிணை கொடுக்கச் சக்தி யில்லாததால், எனக்கு முன்பு நிச்சயமாகி இருந்தவர் என்னை மணக்கச் சம்மதிக்க வில்லையாம். சீதா. அந்தக் கிழவனின் மனைவியாகச் செத்த பிணம் போல உயிர் வாழ்வதை விட எனக்குச் சாவதே மேலென்று தோன்றுகிறது. லேசான காரியத்தை ஏன் செய்யக் கூடாது? தற்கொலை பாபச்செயல் என்று எல்லாரும் சொல்கிருர்கள். கிழவனின் கழுத்தில் சிறுமியைக் கட்டுவது புண்ணியமென்ருல் எனக்கு அந்தப் புண்ணியத்தை விடத் தற்கொலை பாபமே உயர்வென்று தோன்றுகிறது. உனக்கு இக்கடிதம் கிடைக்கும் பொழுது, உன் துரதிருஷ்ட சகோதரி, இந்த உலகைத்துறந்து சென்றிருப்பாள். 'தற்கொலை செய்து கொண்ட பாபி' என்று என்னை நீ நிந்திக்க மாட்டாயென்பது நான் அறிவேன். மன்னிப்பாயாக!

உன் — சாந்தா.

சாந்தாவின் கடிதத்தைப் படித்தேன். சாந்தாவைப் போன்ற தங்கப் பதுமையை கொடுப்பதுமல்லாமல் அவளுடன் வரதக்ஷிணையும் கொடுக்க வேண்டுமென்று கேட்ட நீசனைச் சபித்தேன்.

பின்பொரு தடவை நான் ஏழைப் பெண்ணை மணக்க நிச்சயித்ததைத் துயர மேலீட்டால் மறந்தே போனேன். கடவுளை நிந்தித்தேன். கடவுளை நிந்திப்பதைவிட, நானே என் பேராசையைத் துறந்து, சாந்தாவை மணந்திருந்தால் அந்த அழகிய சிறுமி தற்சமயம் சுகமாக விருந்திருப்பாள். என் தவறுக்காக என்னை நானே நிந்தித்துக் கொண்டேன். வரதக்ஷிணை என்ற பிசாசு எவ்வளவு அழகிகளைப் பலி எடுத்துக் கொள்ளுகிறதோ, பகவான்தான் அறிவார். ஆனால் என் சாந்தாவை அது பலி எடுத்துக் கொண்ட பிறகுதான் எனக்கு அதன் நிஜ சொரூபம் தெரிந்தது.

அன்றிரவே ஊருக்குப் புறப்பட்டேன். மறுநாள் காலை, வீட்டை அடைந்தேன். நான் சென்ற பொழுது அம்மா வாசப்புரம் தண்ணீர் தெளித்துக் கோலமிட்டுக் கொண்டிருந்தாள். அப்பாவும் 'வி'யும் உள்ளே இருந்தார்கள். என்னைப் பார்த்ததுமே அம்மா சந்தோஷத்துடன் ஓடி வந்து தழுவிக் கொண்டாள். என் தந்தையோ, என்னைப் பார்த்தும் பேசவில்லை. நானும் அங்கே நிற்காமல் என் அறைக்குச் சென்றேன். அங்கே விஜயா ஒரு படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். என்னைப் பார்த்ததும் அதை மறைத்துக் கொண்டாள். வியப்புடன் "என்ன பார்த்துக் கொண்டிருக்கிறாய் வீ?" என்றேன். அப்பொழுது அவள் தான் பார்த்துக் கொண்டிருந்த பேப்பரை என் புறம் எறிந்து, "பார்த்துக் கொண்டிருந்தது நீ கொன்ற பெண்ணை" என்றாள்.

ஓடோடியும் படத்தை எடுத்தேன். சாந்தாவின் போட்டோ — அதன் கீழ் "வரதக்ஷணையின் பலி" என்று ஒரு குறிப்பு.

என் மனம் பதறியது; பறவை பறந்து விட்டது; அதன் பலிக்குப் பலியானவன் நான் — நான் ஒரு பாவியானேன்.

[திருமதி பி. டி. ஜி. கிருஷ்ண கன்னடத்தில் எழுதியது]



கலைக்கோயில்

சுவாமி சுத்தானந்த பாரதியார்

லூயி: நானன்றோ வந்தனம் செலுத்த வேண்டும்... மணி, தாங்கள் பாடிய ஞானப்பாடல்கள் எனக்கே பொருத்தம். என்கண்ணை அவை திறந்தன. உலகில் போர், போட்டி, பொருமை காமக் குரோதாமத மாச்சர்யாதிகளை நான் கண்டு கசந்தேன். அன்பும் அருளும் கருணையுங் கொண்டு இனி இந்தியாவில் வசிக்கவே என் மனம் கெஞ்சுகிறது. எனது மனைவி சென்றஆண்டே தவறிப் போனாள். பத்துநாளைக்கெல்லாம் என் ஒரே மகள் காலஞ் சென்றாள். உலகம் புளித்தது இனிக் கட்டில்லை.

மணி: கட்டுண்டு. என் அன்பின் பாசம் உண்டு. அதைத் தாங்கள் மீறமுடியாது. அன்பினால் ஆண்டவனைக்கண்டு, அவன்மயமான உலகுடன் கலந்து அன்பில் வாழ்வதே தமிழ்க்கலையின் கருத்தாகும்.. அக்கலையின் நண்பரெல்லாம் எனது நண்பரே...

தாகூர்: அந்தக்கலையையே நான் வரவேற்கிறேன். மணி நாம் யாருக்கும் குடியில்லை, நமனுக்கும் பயமில்லை. கடவுள் ஒன்றே அதன்மயமே உயிர்கள் என்று நீபாடியது என் உள்ளத்தைத் தொட்டது. வேதமும் அப்படியே கோஷிக்கிறது. ஏகோ தேவ. ஸர்வ பூதேஷ—கூட. என்கிறது.

மணி: தமிழ் வேதம் ஒருபடி மேலே செல்கிறது. 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்.'' பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்....'' சாதிகுலநாமாதி தன்மையைக் கடந்ததே கடவுள்.'' தமிழ் வேதமெல்லாம் இந்தச் சமரஸ முழக்கமே. எங்கள் ஔவை ஒருநாள் ஒரு கோயில் சந்நிதிக்குநேரே கால் நீட்டிப்படுத்தாள். பூசாரி ஏ கிழவீ சாமியிருக்கும் சந்நிதிக்குநேரே காலை நீட்டுகிறாயே... தள்ளிப்படு என்றான். ஐயா நான் கிழவி. சாமியில்லாத திக்

இல் என் காலைத் திருப்பிப் போடேன்... என்றாள். கிழப் பூசாரி ஔவையின் காலை வடக்கே திருப்பினான். ஔவை, ஐயா அதோபாரும் வடக்கிலும் கடவுள் சந்நிதி என்று காட்டினாள். தெற்கே திருப்பினான். அங்கும் மேற்படியே. கிழக்கிலும் அப்படியே. பூசாரி அம்மா கடவுள் இல்லாத இடமில்லை. உன்இஷ்டப்படிப் படுத்துக்கொள் என்று சொன்னான்.

தாகூர்: குருநானக்கும் அப்படியே உபதேசித்தார். தமிழில் இவ்வளவு அறிவுமணிகள் இருப்பதை இன்றே கண்டோம். மணி நீ அவசியம் லூயி சொன்னதை நிறைவேற்ற வேண்டும்.

மணி: சாந்தி நிகேதனம் எனக்கு வழிகாட்டுகிறது. தங்கள் கலையார்வம் இன்று என்னையும் பற்றிக்கொண்டது. கவியரசே கலைமட்டும் என் நோக்கமன்று எனது தேசம் மடமையாலும் வறுமையாலும் வருந்துகிறது. பசியால் வருந்துகிறது. எங்கும் பஞ்சம். வேலையில்லாத் திண்டாட்டம், பசிக்கிற மனிதனுக்கு யாழும் குழலும் சுவைக்குமா?

தாகூர்: உண்மை, மணி: இதை உத்தேசித்து நான் ஸ்ரீ நிகேதனம் அமைத்தேன். அதில் கிராம வேலையும் கைத்தொழிலும் பயிர்பச்சைத் தொழிலும் நடக்கின்றன. ஆயிரம் ஏழைகள் உழைத்துப் பிழைக்கிறார்கள்.

மணி: ஸ்ரீநிகேதனம் அற்புதமான ஏற்பாடுதான். கல்கத்தாவில் இருந்தபோது பார்த்தேன். கிராமத்தொழில் மட்டும் போதாது. நாம் காலசக்திக்குப் பதிற்சொல்லக்காலத்திற்கேற்ற தொழில்களை எழில்பெற நாட்ட வேண்டும். ஆயிரக்கணக்கான பேர்கள் நம்மைச் சுற்றிவாழும் போது அவர்களுக்கேற்ற சமுதாய சுகாதார வாழ்வையும் திருத்தமாக அமைக்க வேண்டும்.

ஆலி: எங்கள் பஹாய் இயக்கம் அமைத்திருக்கும் மஷ்ரக் எல் அஃ ஜகார் (பொதுக் கோயில்) உங்களுக்கு உதாரணமாக விளங்கும்...

மணி: ஆம் இந்த ஊரிலுள்ள மஷரக் எல் அ, : ஜகாரைக் கண்டுதான் இந்த உணர்ச்சி பெற்றேன். அந்தப் பொதுக் கோயில் எனக்குப் புதிய உணர்வைத் தந்தது. அதே மாதிரியே எனது கலைக் கோயிலைச் சுற்றி வாழ்விற்கு வேண்டிய கலாசாலை, வைத்திய சாலை, உணவுச்சாலை, பசுமடம், புத்தகாலயம், தொழிலகம், நூலகம், தோட்டந் துறவுகள் வயல்கள் குடியிருப்புகள் ஆகிய எல்லாம் அமைக்கவேண்டும்.

தாகூர்: நல்லது நின் கனவு கலைக் கோயிலாகட்டும். அமெரிக்கா உன்னை விரும்புகிறது. கலையைப் பொதுவாக்கி உலகெல்லாம் கூடி அனுபவிக்கச் செய்.

இச்சமயம் பொதுக் கோயில் மணியடித்தது. மிர்ஜா ஆலி எல்லாரையும் தொழுகைக்கு அழைத்துச் சென்றான். அங்கே மணி கோஷ்டி அருட்பா பாடி வள்ளலாரின் சத்தியஞான சபையையும் பவாய் இயக்கத்தையும் ஒப்பிட்டு விளக்கியது. சுமார் இரண்டாயிரம் பேர் வள்ளலாரின் சுத்த சத்திய சன்மார்க்க ஆன்மநேய ஒருமைச் சங்கத்தை யறிந்து வியந்தனர்.

அத்தியாயம் இருபத்தெட்டு
தமிழ் முழக்கம்

புதிய கலைகளைவரவேற்பதில் அமெரிக்காவுக்கு நிகரில்லை. பத்திரிகைகளிலெல்லாம் மணியின் பெயர் வந்தது. வாருங்கள் வாருங்கள் என்று அவனை ஊர் ஊராகச் செல்வரும் அறிஞரும் அழைத்துச் சென்றனர். ஏரிக்கரையிலுள்ள ஊர்களெல்லாம் நன்றாக உபசரித்தன. டெட்ராயட்டில் பலமான உபசாரம். அங்கிருந்த தொழிற்சாலைகளைக் கண்டு மணி பிரமித்துப் போனான். எடிசனின் மென்லோ பார்க்கைக் கண்டான். அங்கே நடக்கும் மின்சார அற்புதங்களையும் சுறுசுறுப்பான வேலைகளையும் எடிஸனின் அயரா உழைப்பையும் கண்டு ஆவேசங் கொண்டான். தற்கால உலகிற்கேற்ற தொழில்களையும் கலைக்கோயிலில் நாட்டி இப்படி வளர்க்க உறுதி கொண்டான். ஒகியோ, இண்டியானா, நியூ ஓர்லியன்ஸ் பிளாரிடா, வாஷிங்டன், பால்டிமோர், பிலடல்பியா, போஸ்டன், நியூயார்க் முதலிய கடலோரத்து நகர்களையெல்லாம் பார்த்தான். வாஷிங்டனில் அமெரிக்க வீரனின் நினைவுச் சின்னங்களையும், வெண்மாளிகையின் அரசியல் ஊக்கத்தையும் அளந்து நோக்கினான்.

அச்சமயம் வாஷிங்டனில் இரண்டு இந்தியப் பிரதிநிதிகள் வந்திருந்தார்கள். அவர்கள் பெயரைச் சொல்லக் கூடாது. அவர்கள் பர்கென்ஹெட்டின் ஆட்கள். இந்தியாவைப்பற்றிப் பொய்ப் பிரசாரம் செய்யவே அவர்கள் ஆங்கிலப் பணத்தைப் பெற்றுக் கொண்டவர்கள். அவர்கள் பிரசங்கம் ஒன்றை மணி கேட்டான். பேச்சின் சாரமாவது :

"இந்தியா என்பது பல சாதி மதச் சந்தை. அதில் ஒற்றுமை மருந்துக்கும் கிடையாது. இந்து முஸ்லீம், கலகங்கள் தினமும் நடக்கும். ஆங்கிலேயர் இல்லாவிட்டால், நாடு இரத்த வெள்ளமாகத்தானிருக்கும். இந்தியருக்கு பிரிட்டிஷார் கல்வி தந்தனர், கண்ணைத் திறந்து விட்டனர். காடு மேடுமாயிருந்தநாட்டைப் பிரிட்டிஷார் பண்படுத்தி ரயிலும் தந்தியும் போட்டு சௌகரியமாக்கினார்கள். இந்தியரை நாகரிகப் படுத்த ஆங்கிலேயர் பெருமுயற்சி செய்கிறார்கள். இந்தியர் ஒருவர் பார்த்து ஒருவர் சாப்பிடுவதில்லை. ஒருவரை ஒருவர் தொட்டாலும் தீட்டு என்பர். இந்தியரில் ஏழு கோடிப் பேர் தாழ்த்தப்பட்டவர். அவர் நிழல் பட்டாலும் தலை முழுகும் இந்தியர் பலர். இப்படிப்பட்ட தேசத்திற்குச் சுதந்திரம் எப்படித் தருவது? தந்தாலும் ஒற்றுமையாக நடக்கமாட்டார்கள். ஒன்று பட்டாலும் நாட்டை ஆளத்திறமை கிடையாது. ஜப்பான் இந்தியாவை விழுங்கி விடும்... அதற்காகத் தான் பிரிட்டிஷ்காரர் படிப்படியாக இந்தியரைச் சுயாட்சிக்குப் பழக்குகிறார்கள். அவர்கள் மேல் வஞ்சமேயில்லை. "ஒற்றுமையாக வாருங்கள்." உடனே கைமேல் மாகாண சுயாட்சி தருகிறோம்" என்கிறார்கள்.

கூட்டத்தில் பல இந்தியர் ஆத்திரங் கொண்டிருந்தனர். ஒருவர் "ஐயா, ஜலியன்வாலாபாகில் நடந்த வஞ்சமில்லாத கொடுமையை அமெரிக்காவுக்கு நீர் சொல்லுகிறீரா? நானே சொல்லட்டுமா?" என்றெழுந்து பொது ஜனங்

களே இவர்கள் பேசுவது சுத்தப் புரட்டு” என்று வீறிட்டார். கட்டடத்தில் “மஹாத்மா காந்திக்கு ஜேய்!” என்ற ஆரவாரம் எழுந்தது. பிரசங்கிகள் அதிகப் பிரசங்கத்தை ஒடுக்கிக் கொண்டு சட்டென்று மோட்டார் ஏறி வாஷிங்டன் ஓட்டல் இருபதாம் மாடிக்குத் தாவி விட்டனர். அவர்களைப் பார்க்க இயலவில்லை...

இச்சம்பவம் மணியின் சிந்தனையைத் தாய் நாட்டிற்குக் கொண்டு சென்றது. ஜெங்கின்ஸ் இந்தியச் செய்திகள் வரும் சில பத்திரிகைகளைத் தந்தார். இந்தியாவின பரிதாபத்தைக் கண்டு கண் கலங்கினான் மணி. அப்போது தான் மகாத்மாவின் சத்தியாக்கிரக இயக்கம் சென்னையிலிருந்து கிளம்பி நாடெங்கும் பரவியது. தலைவர்கள் அனைவரும் சிறையில் அடைபட்டனர். மஹாத்மாவும் எரவாடாச் சிறையில் நூல் நூற்றுக் கொண்டிருந்தார். காந்தி மகானைப் பற்றி அறிய மணியின் உள்ளம் துடித்தது... ஹாயிக்கு மகாத்மாவிடம் பற்றுதலுண்டு. அவர் ஹோம்ஸ் என்பவரிடம் மணியை அழைத்துச் சென்றார். ஹோம்ஸ் ஒரு பாதிரியார். அவர் தமது கோயில் பிரசங்கத்தில் அன்று மகாத்மாவைக் கிறிஸ்து வுடன் ஒப்பிட்டுப் பேசினார்:

“கிறிஸ்துவின் தியாகமும் அன்புப்பொறுமையும் மகாத்மாவிடம் காண்கிறோம். தென்னாப்பிரிக்காவில் ஏழைக் கூலிகளின் நன்மைக்காக அவர் தம் உயிரையே தியாகம் செய்து, சாந்தப் போர் புரிந்தார். தன் பல்லை உடைத்தவனைக் கூட அவர் தண்டிக்க விரும்பவில்லை. அவனுக்கும் அன்பே காட்டினார். விமானக் குண்டுகளால் வலிமை பெற்ற பிரிட்டிஷ் அரசாங்கத்தையே, அவர் சத்தியத்தாலும் அஹிம்ஸையினாலும் திருத்தி, மனித உரிமையைகாக்கப் போராடுகிறார். உலக சரித்திரத்தில், ஆயுதமில்லாத ஆத்ம சக்தியால் பெரிய சாம்ராஜ்யத்தை எதிர்த்து நிற்கும் அற்புதம் இந்தியாவிலே நடக்கிறது... மஹாத்மா காந்தி தான் இக்கால ஏசுநாதர்”

இப்படியே ஹோம்ஸ், நீண்ட நேரம் மகாத்மாவைப் புகழ்ந்து பேசக் கேட்ட மணி காந்தி பக்தனானான். எப்போது இந்தியா செல்வோம், எப்போது மகாத்மாவைத் தரிசிப்போம் என்று அவன் உள்ளம் துடித்தது. கலைக்கோயிலில் வெறும் காவியமும் ஓவியமும் இருந்தால் போதாது. நமது தேசத்தை உயர்த்தும் உணர்ச்சி பெற்ற எல்லாக்கலைகளையும் வளர்க்க வேண்டும். புதிய சமுதாயத்தையே சிருஷ்டிக்க வேண்டும் என்று அவர் ஆர்வங்கொண்டார்.

மணி சென்ற இடங்களிலெல்லாம் தமிழ்ப் பெரியார் வரலாறுகளையும் உபதேசங்களையும் பாட்டாகவும் உரையாகவும் சன்மார்க்க வகுப்புகளாகவும் நடத்தினான். காலை இனிய கீதம் பாடி மணி கோஷ்டி கடவுள் வணக்கம்நடத்துவார்கள். பிறகு திருக்குறள் அல்லது திருவாசகப் பாடம் நடக்கும். அதன் பிறகு மணியும் நண்பரும் அமர்ந்து தமிழ்ப் பெரியார் வரலாறுகளை ஆங்கிலத்தில் எழுதிப் பத்திரிகைகளுக்கனுப்புவார். பத்திரிகைகள் செழிப்பாகப் பணம் கொடுத்து வாங்கி மணியின் கட்டுரைகளை வெளியிட்டன. பைபிளும் வள்ளுவர் குறளும், எங்கள் பொதுமறை, தமிழ்ப் பெரியார் உலகிற்குக் காட்டும் வழி, சுத்த சன்மார்க்கம், சித்தாந்த கொள்கை, வேதாந்தமும் சித்தாந்தமும் ஆரிய திராவிட வேதங்கள், மெய்

கண்டான் சிவஞானதீபம்... தேவார முழக்கம், திருவாசகத்தேன், திருத்தொண்டர் பெருமை, காந்தியும் அப்பரும், ஞானசம்பந்தரும் அற்புதங்களும் ஏசுநாதர் செயல்களும் அருட்பாவின் உள்ளம். வள்ளலாரின் ஆன்மநேய சங்கம், வடலூர் சத்தியஞான சபை, தமிழர் யார்? உலக மொழிகளில் தமிழின் உரிமை, என்றும் இளந் தமிழ், தமிழர் நாகரிகம், கம்பன் கவிதை கம்பனும் ஷேக்ஸ்பியரும், தமிழின் எளிமையும் பெருமையும் முப்பதெழுத்துக்களில் முடிந்த ஒப்பில்லாத் தமிழ், தமிழிசையின் பம், மாணிக்க வாசகர் சரித்திரம். முத்தமிழ் வேந்தர், தமிழரசு, வீரத் தமிழர், எங்கள் நாடு, தற்கால நிலைமை, மேற்கும் கிழக்கும், மெய்கண்ட தத்துவம், உலக சமர சமும் சைவமும், கொல்லா நெறி, அன்பே கடவுள், அன்பே சமயம் இந்திய உள்ளம், உலக ஒற்றுமை, கடவுளும் கருணையும், அவதார வாதம், உண்மைத் துறவு, கலையும் கடவுளும், தேவாரசாரம், திருவாய் மொழி, நம்மாழ்வாரின் யோகம், திருமூலரின் பூரண யோகம், தாயுமானவர் உபநிஷத்துக்கள், பட்டினத்தார் துறவு, பன்னிரு திருமுறைகள், தமிழகம் —சன்மார்க்கக் கோயில், கிறிஸ்துவமும் தமிழும், — தேம்பாவணி, இஸ்லாமும் தமிழும் — சீருப்புராணம், தமிழர் உரிமை...

இப்படிப்பட்ட பல பொருள்களை மணி சொற்பொழிந்தான்... அறிவாளர் மெச்சிக் குறிப்பெடுத்துப் பத்திரிகைகளில் எழுதினர். மணியின் சொற் பெருக்கை வைத்துக்கொண்டு தமிழ் நாகரிகம், தென்கலை இருளில் மறைந்த மகான்கள் என்று நூல்கள் எழுதிச் சம்பாதித்தவர் பலராவார்.

சென்ற இடங்களிலெல்லாம் மணி அரைமணி நேரம் தமிழ் மொழி எழுத்துக்களையும் சுருக்க விளக்கமாக தமிழின் அழகையும் விளக்கி வந்தான். பிலடல்பியாவில் சிலர் தமிழை முறையாகவே படிக்க விரும்பினர். அவர்களுக்கென்று மணி பாடபுத்தகமும் எழுதினான். ஜாயி தமிழ் எழுத்துக்களை அச்சுவார்த்துத் தனது, கோப்பாளருக்குப் பயிற்றி ஒரு பாலபாடமும் வெளிவரச் செய்தான். பாடங்கள் முழுதும் அழகான நீதிவாக்கியங்களால் ஆவதால் எல்லாரும் விரும்பிப் படித்தார்கள்.

ஆனால் மணியின் பாதை மலர் மெத்தையல்ல. எதிர்ப்புகள் மிகப் பல. அபாயங்களும் இடையிடையே முளைத்தன. மக்வாடர் கொலைக்குப் பிறகு மணி கோஷ்டிக்குப் பின்னே உருத் தெரியாமல் சிலபேர் சுற்றிக் கொண்டிருந்தனர். கூட்டங்களிலெல்லாம் அவர்கள் தூண்டுதலால் தாறுமாறான கேள்விகளும், குடிகாரரின் கலாட்டாக்களும் அமைதியைக் கெடுத்தன. மணியின் பணப்பை இரண்டு முறை கொள்ளை போனது. சாமான்கள் திருட்டுப் போயின. நண்பர்போல் வந்து தப்புவழியில் இட்டு மோசம்செய்தவர்களும் உண்டு. பெண்களைக் கொண்டு மணியை மோசம் செய்யத் துணிந்தவர்களும் இருந்தனர். ஜெங்கின்னின் உதவியால் மணி எப்படியோ பல அபாயங்களைத் தப்ப முடிந்தது.

"தமிழ் எதற்கு? அதைக் கற்றுப் பயனென்ன? தமிழர் உலகிற்கு என்ன தர முடியும்? வங்காளத்தில் தாகூர் போலத் தமிழ் நாட்டில் யார் உண்டு? ஆங்கிலத்தில் உலக இலக்கியங் களெல்லாம் இருக்கையில் ஒரு மூலையில் ஒதுங்

கிய புராதனமான தமிழைக் கற்றென்ன? அது வீண் வேலையே. சமஸ்கிரதம் கற்றாலும் கீதை உபநிஷத்தைப் படிக்கலாமே. ஆனால் அவையும் ஆங்கிலத்தில் உள்ளன. இராம கிருஷ்ண சங்கம் எல்லா இந்திய நூல்களையும் ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டிருக்கிறது. இனித் தமிழில் நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம் என்ன இருக்கிறது? கட்டும் மூட்டையை. தமிழிசை என்ன பிரமாதம். எங்கள் பாண்டு வாத்தியமும், பியானோவும் கிளம்பினால் ஊர் அதிருமே" என்றெல்லாம் குறும்பர் கேள்வி யம்புகளை வீசினர்.

இவர்கள் வாயை அடக்க நல்ல கருவி நூல்கள் கைவசமில்லாத குறையை மணி உணர்ந்தான். தமிழ் நூல்களெல்லாம் உலக மொழிகளிற் பரவியிருந்தால், இப்பொழுது பயனாகுமே என நினைத்தான். வாஷிங்டன், நியூயார்க் நூலகங்களில் துருவிப் பார்த்துப் பல நண்பர்களைக் கேட்டுப் பார்த்து முடிவில் அவனுக்குக் கிடைத்தவை போப்பின் திருவாசக மொழி பெயர்ப்பும், ஐயரின் குறள் மொழி பெயர்ப்புமே. இவற்றைக் கொண்டு அவன் தமிழின் அருட் பெருமையைக் காட்டினான். எங்கள் ஐரோப்பிய மொழிகளில் மலை மலையாகக் குவிந்து கிடக்கும் அரிய நூல்களைப் பாரும், உங்கள் தமிழ் நூல்கள் எல்லாம் சேர்ந்தாலும நூறுக்கு மேலிராவே தமிழ் வளர வேயில்லையே. அதில் ஸயன்ஸ் நூல்கள் உண்டா? என்று தாக்கினர் பலர்.

ஐயா, ஆங்கிலத்தில் ராகி மலையைப் போல் நூற்குவை யுண்டு. ஆனாலும் ஒரு பைபளும் ஷேக்ஸ்பியரும் போதும் வாழ்வுக்கு. அதுபோல் எங்கள் நாட்டிலும் ஏராளமான நூல்கள் உண்டு. காலத்தால் பல மறைந்தன. இருக்கும் நூல்களில் திருக்குறளுக்கு இணையான நூல் எங்கும் இல்லை. உலகிற்கெல்லாம் அது பொதுமறை. கம்பனுக்கிணையான கவியில்லை. கேளும் கம்தின் கலை நயத்தை. தேவாரம் திருவாசகம் திருவாய்மொழி அருட்பாக்களுக்கு இணைய பாசுரங்கள் எங்கே உண்டு? கேளும் ஒரு தாயுமானர் பாடல். எவ்வளவு உருக்கமாயிக்கிறது? தமிழர் நாகரிகம் என்ற எனது நூலையும் படியுங்கள். தமிழர் பதினாயிரம் ஆண்டுகளாக உலகில் நாகரிகமாக வாழ்கிறார்கள். தமிழர் வீரசூரர், கலைச் செல்வர், அருட் பெரியாரின் சந்ததிகள். தாந்தேக்காக இத்தாலியம், கெத்தேக்காக ஜெர்மன், ஷேக்ஷ்பியருக்காக ஆங்கிலம் படிக்கிறீர்கள். வள்ளுவருக்காவும் கம்பனுக்காகவும் நீங்கள் தமிழ் படிக்க வேண்டும். கீதையை ஆரியத்திலேயே அறிவது சிறப்பு. வள்ளுவரையும், அருட்பாவையும் தமிழிலேதான் நன்றாய் அறிய முடியும். உலகிலுள்ள அருள் நூல்களை யெல்லாம் சேர்த்தாலும் ஒரு தாயுமானருக்கும் அருட்பாவுக்கும் இணைகட்ட முடியாது. இவ்வளவு பெருமையுள்ள தமிழ் மொழியை உலகம் இன்றும் அறியா திருப்பது கலைக்கே நஷ்டமாகும்" என்று மணி அமைதியாக அழுத்தமுடன் பதிற் சொன்னான்.

"இருக்கட்டுமையா, உங்கள் தமிழரை தென்னாப்ரிக்காவிலும், பிஜிவியிலும் பார்க்கிறோமே. இந்தக் கூலிப் படைகளா உலக சமுதாயத்தில் மதிக்கத் தக்கவர்கள்?" என்றொரு குறும்புக்

கூட்டம் விஷமப் பிரசாரம் செய்தது. தமிழ்மணி உலக சமுதாயத்தில் தமிழர் என்றொரு கட்டுரை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டு வம்பர் வாயை அடக்கினுன். ஐயா ஜார்ஜ் வாஷிங்டன் இதே நாட்டுக்கு விடுதலை தருமுன்பு, நீங்கள் ஆங்கிலக் கப்பல்களில் தேயிலைக் கூலியாயிருந்த நாளை மறந்தீர்களா? எங்களுக்கும் சுதந்திரம் கிடைத்தால் எங்கள் நாட்டிலும் எடிசனும், ராக்பெல்லர்களும், லிங்கன்களும் விளங்குவார்கள். எங்கள் நாட்டின் பொருளெல்லாம் கப்பலேறிச் செல்கின்றன. உங்களுக்கு எங்கள் நாடு சந்தையாயிருக்கிறது. ஆதலால் பரம ஏழைகளாகிய எங்கள் நாட்டினர் பிழைக்க வெளிநாடு செல்கிருர்கள். உங்கள் ரப்பர், தேயிலை, கரும்புத் தோட்டங்களையும், சுரங்கங்களையும் இன்று செழிப்பாக்கியவர்கள் இந்த ஏழைகளே என்பதை மறக்காதீர்கள். அவர்களை மாடு போல் வேலை வாங்கி, பலிக்கடாய்கள் போல் வதைக்காதீர்கள்'' என்று காரமாக மணி திட்டி விட்டான். அவனுக்கு யாரும் பதிற் சொல்ல முடியவில்லை.

தமிழ்மணி கலிபோர்னியாவில் சுற்றுப் பிரயாணம் செய்து ஸான் பிரான்ஸிஸ்கோவில் சிலநாள் தங்கி திருக்குறளும், பைபிளும் என்ற தலைப்பில் பல சொற்பொழிவுகள் ஆற்றினுன். இதற்கு எதிர்ப்புகள் இருந்தன. கிறிஸ்துமஸ் பண்டிகை வந்தது. அப்போது பாதிரிமார் சிலுவை தொண்டிற்காகப் பல திசைகளிலும் டாலர் வசூலித்தனர். ஸான்பிரான்ஸிஸ்கோவில் சில பாதிரிகள் வந்து படக்காட்சிகளுடன் பிரசாரம் செய்தனர். ஒருநாள் ஜெங்கின்ஸ் மணியை இந்தியத்தாய் என்ற படக்காட்சிக்கு அழைத்துச் சென்ருர்.

அத்தியாயம் இருபத்து ஒன்பது

ஆத்திரம் வந்தது

ஸான்பிரான்ஸிஸ்கோ சித்திரச் சாலை மிகப் பெரிது. சுமார் எண்ணுயிரம்பேர் தாராளமாக அதில் உட்காரலாம். அத்தனை பேருக்கும் காற்ருேட்ட வசதியுண்டு. எங்கே திரும்பினுலும் கலைக்காட்சிதான். நவநாகரிகம் அங்கே களியாட்டமாடுகிறது. கணகணவென்று மணியடித்ததும், ஐம்பது பாதிரிமார் சிலுவை தாங்கிக்கொண்டு வந்து சுவிசேஷ கீதம் பாடினர். பிறகு ஒருவர் இந்தியாவில் தாங்கள் செய்துள்ள பெருஞ் செயல்களைப் பறை சாற்றினுர். இந்தியருக்குக் கண் திறந்து மூடப் பழக்கங்களை ஒழித்து, கல்விதந்து நாகரிகப்படுத்த அவர்கள் செய்த தியாக வர்ணனையைக் கேட்டதுமே கலகலவென்று உண்டில்களிற் பொன்மாரி பொழிந்தது. பிறகு படவிளக்கக் காட்சிகளை மட்டும் குறிப்போம்.

1. ஒரு ஜோதி வெடித்தெழுகிறது. ஏசுநாதர் தோன்றுகிருர். சில நிர்வாணக் காட்டு மிராண்டிகள் வருகிருர்கள். அவர்களை ஏசுநாதர் ஆசீர்வதித்து, வலது பக்கம் பார்க்கிருர்; ஒரு பாதிரிக் கூட்டம் வருகிறது. அவர்கள் கையில் சிலுவையுடன் அனுதைகளையும் தந்து "உலகெல்லாம்

தொண்டு செய்யுங்கள், பைபிளைப் பரப்புங்கள்" என்று ஏசுநாதர் ஒளி மயமாக வான் செல்கிறார்.

2. பாதிரிமார் இந்தியாவுக்கு வருதல். இந்தியா காடு மேடு மாகக் காட்சி யளிக்கிறது. இந்தியர் கந்தையும், வேப்பங் குழையும் கட்டிக் கொண்டு கிழங்கு வெட்டித் தின்பதும், வேட்டையாடுவதும், பிச்சை வாங்குவதுமாகக் காட்சியளித்தல். நொண்டிகள், கபோதிகள், திருப்பதிப் பந்தம் ஏந்துவோர், குடுகுடுப்பைகள், பெருமாள் மாடு காட்டுவோர், கல்லுளிமங்கன்கள், பாம்பாட்டிகள், தொம்பக் கூத்தாடிகள், வயல் வரப்புகளில் கோவணத்துடன் வேலை செய்வோர், பஞ்சைப் பரதேசிகள், பக்கிரிகள், ஆண்டிகள், காவடிகள், கோடாங்கிகள் இவர்களே அசல் இந்தியராகக் காட்சி யளிக்கிறார்கள். கல்லுளிமங்கத்தைக் கண்டதும் "ஹாரிபிள் இந்தியா" என்று சபை முகம் சுழித்தது. இவர்களுக்கு ஒரு பாதிரியார் பைபிள் படித்துக் காட்டி உபதேசம் செய்தல்.

3. மாரியம்மன் கோயில். 'டிங்கு டிங்கு' என்று பறை முழங்குகிறது. வேப்பிலை கட்டிக் கொண்டு ஆண்களுடன் பெண்கள் ஆபாசமாகக் குதிக்கின்றனர். பூசாரி ஆவேசம் நடிக்கிறான், ஆடு கோழிகள் வருகின்றன. அவற்றை வெட்டிக் கல்லாகிய மாரியம்மனுக்கு நிவேதிக்கிறான். கசாயிக்கடை சாயிபுகள் வெட்டுத் துண்டுகளை வாங்கிச் செல்கிறார்கள். அம்மன் மகாகோரம், விழி பிதுங்கி கோரப் பல்லுடன் பயங்கரமாகக் காண்கிறது. திடீரென்று ஒருதாய் வேப்பிலை கட்டிக் கூத்தாடிக் கொண்டே தன் மகளைப் பலி கொடுக்க அம்மன் முன் வைக்கிறாள், பூசாரி அருள் நடித்து வெட்டப் போகிறான். அச்சமயம் ஒரு பாதிரி வந்து குழந்தையைக் காத்து, தாயாருக்கும் ஏசுநாதர் பெருமை சொல்லி அழைத்துச் சென்று, ஞான ஸ்நானம் செய்கிறான். தாய் நல்ல ஆடை யணிந்து பைபிள் படித்து நாகரிகமாக வாழ்கிறாள். பிறகு அவளே மாரியம்மனைக் காலால் எற்றி சம்மட்டியால் உடைக்கிறாள்.

4. ஒருதாய் தன் பெண் குழந்தையை முதலை வாயில் கொடுக்கிறாள். ஒரு பாதிரி முதலையைச் சுட்டுக் குழந்தையைக் காத்து வளர்க்கிறான். ஒரு கலியாணப் பந்தல், ஐந்து வயது பெண்ணுக்கும் நாற்பது வயது ஆணுக்கும் கலியாணமாம். ஆண் மகன் பெண்ணை அடிமை போல நடத்துகிறான். பெண் பெரியவளாகிறாள். அதற்குள் அவன் கிழவனாகிறான். காசம் வருகிறது. அதைப் போக்கக் கோடாங்கி பார்க்கிறான், சோதிடம் பார்க்கிறான். முடிவில் இறக்கிறான். இளம் மனைவியை உறவினர் கணவன் ஜதையில் வைத்தெரிக்க முயல்கின்றனர். பெண் அலறிக்கொண்டு ஒரு கன்னிமடத்திற்கு ஓடுகிறாள். ஒரு பரிசுத்தக் கன்னி ஞான ஸ்நானம் தந்து பெண்ணை நல்ல முறையில் நாகரிகமாக வளர்க்கிறாள். ஒரு வீடு; அதில் இளம் விதவையைக் கட்டி அழுது தலையைச் சிரைத்து முக்காடு போட்டு மூலையில் அடைத்து, நாய்க்குப் போடுவது போல் தோசை போடுகிறார்கள். அவள் அப்புறம் இப்புறம் திரும்பினால் தடியால் அடிக்கிறார்கள். தண்ணீர் சுமந்து அவள் இடுப்பொடிந்தாலும் மருந்து கிடையாது.

மேன்மேலும் வேலை வாங்குகிறார்கள். ஒருநாள் குளத்தங்கரையில் பெண்ணை ஒரு வாலிபன் காதலிக்கிறான். பெண் கர்ப்பமாகிறாள். வீட்டில் அவளை வைது விரட்டியடிக்கிறார்கள். அவள் குளத்தில் விழப்போகிறாள். அப்போது ஒரு பாதிரியார் வந்து அவளை அன்புடன் ஆதரித்து, மதம் மாற்றி, ஆஸ்பத்திரியில் பிரசவம் பார்த்து, உதவி, தாயையும் குழந்தையையும் பேணி வருகிறார். பெண் பைபிள் பிரசாரம் செய்கிறாள். பாலிய விதவைகளை யெல்லாம் கிருஸ்து மதத்திற் சேர்த்து வாழத் தூண்டுகிறாள்.

5. கோயில் காட்சிகளின் அலங்கோலங்கள் பல. சங்கீதக் கேலிகள் பல. சிவன் கோயில். லிங்கத்தில் காட்சி. உருவம் ஆபாசம். எல்லாரும் கை கொட்டிச் சிரித்தல். இந்த லிங்கத்தையும் மேற்சாதியே கிட்ட வந்து கும்பிடுகின்றனர். ஹரிஜனங்களை அவர்கள் விரட்டியடிக்கின்றனர். ஹரிஜனங்களை ஒரு பாதிரி அழைத்துச் சென்று ஞானஸ்நானம் செய்து கல்வி தருகிறார்.

6. கோயில் திருவிழா; நடராசா எங்கோ வெளியே போய் வருகிறார். சிவகாமி "நீ தாசி வீடு சென்றாய்" என்று பிணங்குகிறாள். இயற்பகை நாயனார் சரித்திரம் ஆபாசமான முறையில் வருகிறது. பிறகு தாருகாவன லீலைகள்.

7. கடைசியில் கிருஷ்ணன் கோபிகைகளுடன் ஆடுதல். கோபிகைகள் குளிக்கும் போது புடவை ஒளித்தல். ராஸலீலைகளின் காட்சி.

இவையெல்லாம் முடிந்ததும் அனாகரிக இந்தியருக்குப் பாதிரிமார் கல்வி தருவதும் தொழில் பயிற்றுவதும் நல்ல ஆடையணிகள் தந்து, ஆதரிப்பதும் வைத்தியசாலை, பிரசவசாலை, குழந்தையில்லம், தொழிற்சாலைகள், சர்ச்சுகள், கன்னிமடங்கள், முதலியவற்றின் காட்சிகளும் வருகின்றன. மதம் மாறிய கன்னிகளும் பாதிரிகளும் அழகான ஆடைகளணிந்து அணியணியாக ஒரு தோட்டத்திற் கூடி, பிரார்த்தனை செய்தல். பளிச்சென்று ஒளி; ஏசு நாதர் தோன்றுகிறார். அடியார்களையெல்லாம் ஆசீர்வதித்து மலையுபதேசத்தைப் பாடிப் பரமபிதாவிடம் செல்கிறார்.

காட்சி முடிந்ததும் ஒரு பாதிரியார் இந்தியாவில் தாங்கள் செய்து வரும் நாகரிகவேலையைச் சொல்லி இப்போது மூன்று கோடி இந்தியரே கிறிஸ்துவர். இன்னும் முப்பத்தைந்து கோடி ஞானஸ்நானம் பெற ஏராளமான பிரசாரமும் பணமும் வேண்டும் என்கிறார். பொன்மாரி பொழிகிறது. ஒரு செல்வர் பள்ளிக்கூடம், ஒருவர் ஆஸ்பத்திரி, ஒருவர் கன்னிமடம் ஒருத்தி சர்ச்சு கட்டப் பணம் அள்ளித் தருகின்றனர். இடையிடையே அநாகரிக இந்தியாவுக்குச் சிலுவையே கதி என்று சிலர் கூச்சலிடுகின்றனர்.

மணியின் உள்ளம் கொதித்தது. மக்வாடரின் விஷமம் இங்கே படமாடுகிறதே.... இதென்ன கொடுமை, பொய்ப் பிரசாரம். இதை எதிர்ப்பேன் என்று எழுந்தான் மணி.

இக்காட்சிகளால் ஜெங்கின்ஸ் மனங்கூட மாறிப்போய் "மணி உன் இந்தியத் தாய் இப்படியா இருக்கிறாள்?" என்று நகையாடினார். "ஐயா இதில் உண்மை இல்லை. இதெல்லாம் சாக்கடை மேஸ்திரி வேலை என்று தைரிய

மாக மணி மேடையில் ஏறி "நண்பர்காள்" என்று தொடங்கினன். 'இந்தியன் இந்தியன்!' என்று எல்லாரும் கைகொட்டிக் கேலி செய்தனர். மணி விடவில்லை. வாணியுடன் சேர்ந்து ஒரு திருப்புகழ் பாடத் தொடங்கினன். கூட்டத்தில் அமைதி மேவியது. சிலர் இந்தியப் பாட்டா என்று வியந்தனர். பாதிரிமார் "இவன் பேசக் கூடாது." என்றனர். "ஐயா எனது தேசத்தைக் கேலி செய்ய உமக்கு அதிகாரம் உண்டு; பொய்ப் பிரசாரம் செய்ய நெஞ்சுரம் உண்டு. எங்கள் தேசத்தின் உண்மையைச் சொல்ல எனக்கு உரிமையில்லையா? எனது தாய் நாட்டை நீர் இகழ்வது நான் வேடிக்கை பார்த்துச் செல்வதோ? கேளும் சற்றே" என்று ஒரு போடுபோட்டான். சபையிற் சிலர் 'கோவான் கோவான்' என்று உற்சாகப் படுத்தினர். பலர் "ஔட் ஔட்" என்றனர். சிலர் கல்லெறிந்தனர், சிலர் சோடாப்புட்டியை எறிந்தனர். வாணி முன்னே நின்று எல்லாம் தடுத்தாள். மணி எல்லாம் பொறுத்துப் பேசியே தீர்த்தான். அதன் சுருக்கத்தையே இங்கே சொலலுகிறேன்.

அமெரிக்கத் துரைமார்களே, இப்போது நீங்கள் கண்ட படங்கள் பாதிரிமார் உங்களிடம் பணம் பறிக்க ஜோடித்த தந்திர வேலைகள். இங்கே நீங்கள் கண்டது இந்தியாவன்று... பொய்மாயப்பணம் பிடுங்கி நாடகத்தையே கண்டீர்கள். இந்தியா காடுமேடாயில்லை. இந்தியாவில் தாஜ்மகால் உண்டு. அற்புதமான சிற்பச் செல்வங்கள் உண்டு. அழகான கோயில்கள் உண்டு... இந்தியர்கள் அம்மணக் காட்டுமிராண்டிகள் அல்லர்... இந்தியர் பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே நாகரிகம் பெற்றவர்கள். ஸீஸர் இங்கிலாந்தைப் படையெடுக்கும் முன்பே இந்தியாவில் அசோகர் சந்திர குப்தன் ஹர்ஷன் போன்ற சக்கரவர்த்திகள் இருந்தார்கள். இந்தியர் பஞ்சைப் பரதேசிகளாய் வேப்பிலைக் கட்டிக்கொண்டு கூத்தாடுவதில்லை. இந்தியா டேகா மஸ்லின் நூற்ற நாடு. அக்காலம் நாங்கள் செய்த மஸ்லின் இன்றும் எகிப்துப் பிணங்கோபுரங்களில் உள்ளன. ஐரோப்பியர் பருத்திச் செடியை மயிர் முளைக்கும் மரம் என்ற போது, இந்தியர் அழகான மதுரைச் சல்லாவும் பட்டும் கம்பளங்களும் சால்வைகளும் நெய்தனர். நீங்கள் இந்தப் பாதிரிகள் மதம் மாற்றும் மதுரைக்கு வந்து பார்த்தால், உண்மை விளங்கும்.

திருமலை நாய்க்கன் மகாலையும் ஆயிரக்கால் மண்டபத்தையும் பார்த்தால் மூக்கில் விரல் வைப்பீர்கள். இந்தியா பெண் குழந்தைகளை முதலை வாயில் கொடுப்பதில்லை, உடன்கட்டையேற்றுவதுமில்லை. எங்கள் பெண்களை நாங்கள் சக்தியாக வணங்குகிறோம். பத்தினிகளுக்கு நாங்கள் கோயில் கட்டுகிறோம். எங்கள் பெண்கள் கற்பரசிகள். ஒரு கணவனையே நம்பி அன்பு செய்பவர்கள். ஒருவனை மணந்த பிறகு, வேறு ஆடவரைக் கனவிலும் கருதாத உத்தமிகள். நாங்கள் மடையர்களல்லோம். எங்கள் நாடு கீதை குறள் பாரதம், உபநிடதம் போன்ற பெருநூல்களைத் தந்தது. எங்கள் ஏடுகளை அள்ளிச் சென்றே அலெக்சாந்தர் ஆட்கள் கிரேக்கக் கலையை வளர்த்தனர். கிரேக்கிலிருந்து ஐரோப்பாவிற்குக் கலை பரவியது. கடைசியாக நாங்கள் யாரிடமும் ஞானஸ்நானம் பெற அவசியமில்லை. எங்கள் புண்ணிய

பூமி புத்தர், மகாவீரர், வள்ளுவர், அப்பர், தாயுமானவர், வள்ளலார் காந்தி போன்ற மகான்களைத் தந்த நாடு... எங்களுக்கு மலை மலையாக அறநூல்கள் உண்டு. உலகில் ஆத்ம விழிப்படைந்த நாடு இந்தியாவே. அதனிடமே நீங்கள் ஞானஸ்நானம் பெற வேண்டும். இந்தியா அடிமை நாடாகி வறுமையுற்றது. இந்தியாவில் பஞ்சமும் பட்டினியும் தாண்டவமாடுகின்றன. உங்களுக்கு இரக்கமுண்டானால் நீங்கள் ஏழைகளுக்கே வாழ்ந்த ஏசு நாதரின் உண்மைச் சீடர்களானால் வறுமை மடமை அடிமைத்தளை நீங்கி இந்தியா உரிமையுடன் செழித்து வாழ விடுங்கள்... ஏனெனில் நாட்டை நாடு அடிமை செய்வது கிறிஸ்தோபதேசமன்று. விமானங்களும் குண்டு பீரங்கிகளும் கொண்ட ராக்ஷச சேனைகளைக் கொண்டு எங்களை அடக்கி வைத்து இப்படி வெளி நாடுகளில் இந்தியர் அநாகரிகர் என்று பேசுகிறீர்கள். நாடகமாடுகிறீர்கள். சுதந்திர இந்தியா உங்களுக்கு விரைவில் பதிற் சொல்லும்... அதற்கு முன்பே இதோ எங்கள் நாகரிகத்தைக் குறித்த நூல்... இதை இன்னும் ஒரே வாரத்தில் அச்சிட்டு இதே நகரில் வழங்குவோம்... படித்துப் பாருங்கள்.

பொது ஜனங்களே, நான் கிறிஸ்து ஜீவனை மதிக்கிறேன். பைபிளை நானும் படிக்கிறேன். அமெரிக்காவின் சிறப்பையும் செழிப்பையும் வியக்கிறேன். நான் இது தான் அமெரிக்கா என்ற சிகாகோ ஒட்டலில் நடந்த மக்வாடர் – வில்லி கொலையையும் க்ளுக்ளக்ஸ் க்ளன் கூட்டத்தையும் சர்ச்சுகளின் முன்னிருக்கும் பஞ்சைகளையும் படம் பிடித்துக் காட்டினால், இது தான் அமெரிக்கப் பெண்மை என்று உங்கள் விவாகரத்து நாடகங்களை ஜோடித்துக் காட்டினால் உங்களுக்கு கோபம் வராமல் இருக்குமா? ஒரு நாள் நானும் உங்களுக்கு என் கலைக் கோயிலிலிருந்து அழகான படங்களைக் கொண்டு வருவேன். அதில் இந்திய நாகரிகத்தைப் பார்க்கலாம். நண்பர்களே பொய்ப் பிரசாரங்களை நம்பாதீர்கள். பாதிரிமார் பள்ளிக்கூடமும் ஆஸ்பத்திரியும் வைத்துப் பொது ஜனசேவை செய்யப் பணம் வசூலிக்கலாம். அதற்கு நான்கூட இயன்றதைத் தருவேன். ஆனால் இந்தியர் என்று பஞ்சைப் பரதேசிகளையெல்லாம் உங்களுக்குப் படம் பிடித்துக் காட்டுவதா? தாகூர், ஸி. வி. ராமன், பி ஸி ரே, மகாத்மா காந்தி, தாஸ், நேரு, ஐயர் போன்ற மகத்தான தீரர்களைப் பெற்ற நாடு எம்மதே. அந்த இந்திய மணிகளை இந்தப் பாதிரிமார் படத்தில் ஏன் காணோம்...?

கூட்டத்தில் 'நியாயம் நியாயம்' என்ற ஆரவாரம் பிறந்தது... ஜெங்கின்ஸ் எழுந்து "சபையோர்களே! உண்மையைச் சொன்னார் நண்பர் மணி. உணருங்கள். அவர் பெரிய கலைக்கோயில் கட்டி அதில் மேற்கும் கிழக்கும் சேர்ந்து வாழ அரியபணி செய்வார். அவருக்கு உதவி செய்யுங்கள்......" என்றார். கலைக்கோயில் துண்டுப் பிரசுரம் வழங்கப் பெற்றது.

சட்டென்று விளக்கணைந்தது... ஜெங்கின்ஸ் மணி, வாணி முதலியோரைப் பரபரப்புடன் அழைத்துக் கொண்டு தந்திரமான வழியில் வெளியேறி விரைவாக மோட்டாரை முடுக்கித் தப்பினர்...

(தொடரும்)

பேலூர் சிற்பம்

எஸ். பாலசுந்தரம்

நாம் பிறரைப் பார்த்தோ அல்லது பிறர் நம்மைப் பார்த்தோ "என்ன, கல்லுப்போல் நிற்கிறாயே" என்று சில சந்தர்ப்பங்களில் கூறுவதுண்டு. என்னைப் பொறுத்த வரையில் நான் கல்லாக மாறி விடுவதற்கு முழு மனத்தோடு சம்மதிக்கிறேன்! ஆனால் ஒரு நிபந்தனை! என்னைக் கல்லாகச் சபிக்கக்கூடிய ஒருவரிருந்து, அக்கல்லில், பேலூர் கோவிலை நிர்மாணித்த சிற்பி, தன் கைத்திறனைக் காட்டுவதாயிருந்தால் இந்த நிமிஷமே கல்லாக உரு மாறுவதற்கு நான் தயாராயிருக்கிறேன். ஏன்! நான் மட்டுமல்ல, பேலூர் கோவிலின் சிற்பத் திறனைக் காணும் ஒவ்வொரு உண்மை ரசிகனும் என்னைப் போலவே எண்ணுவான் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

எல்லோரா சிற்பங்கள் உலகப் பிரசித்தி பெற்றவை. அதற்கடுத்த படியாக மைசூர் ராஜ்யத்திலுள்ள சோமநாதபுரம், பேலூர், ஹலிபிட் முதலிய கோவில் சிற்பங்களைத்தான் சொல்ல வேண்டும். இம் மூன்றிலும் எது மிகச் சிறந்ததென்று சொல்லமுடியாது. ஒன்றைவிட மற்றொன்று எந்த அம்சத்திலும் குறைந்ததல்ல.

எல்லோரா சிற்பங்களையும், அஜந்தா ஓவியங்களையும் பார்ப்பதற்கு ஆசைப்படாத ரசிகர்களும் உண்டா? சமீபத்தில் பம்பாய்க்கு போயிருந்தேன். ரயில் பாதையில் பம்பாய் பெங்களூர் இடையே கடூர் (Kadur) என்னும் ஸ்டேஷனில் இறங்கி, அங்கிருந்து பஸ்ஸில் இருபத்தைந்து மைல் தூரத்திலிருக்கும் சிக்மகளூருக்குப் போகவேண்டும். இங்கிருந்து பேலூர் பதினைந்து மைல். சௌகரியமாக அடிக்கடி பஸ் போக்குவரவு உண்டு. 'சார்ஜ்' எட்டணா! முக்கால்மணி நேரம் பிரயாணத்தில் பேலூர் போய்விடலாம். அல்லது தென்னிந்தியாவிலுள்ளவர்கள் மைசூர் சென்று, அங்கிருந்து அரிசிக் கரைக்குப் போகும் பாதையில் ஹாஸன் என்ற இடத்தில் இறங்கினால் அங்கிருந்து பேலூர் இருபத்தைந்து மைல் தூரத்தில் இருக்கிறது. பஸ் அல்லது ரயில் இரண்டிலும் ஹாஸனுக்குப் போக பிரயாணவசதி உண்டு.

பஸ்ஸில் பேலூருக்குப்போகும் வழியின் இருபுறங்களிலும் நெற்பயிர்களும், கரும்புப் பயிர்களும் கண்ணுக்கெட்டியதூரம் ஒரே பசுமையாக தோன்றியது. அதற்குப் புறம்பே பின்னணிக் காக்ஷியாக சிறு சிறு குன்றுகள் தொடர்ச்சியாக இருக்கும். மனோரம்மியமான காக்ஷியானது மைசூர் ராஜ்யத்தின் செழுமைக்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்கிற்று.

பேலூர் கோவிலின் சிற்ப அற்புதங்களைக் கூறுவதற்கு முன்,

அதன் சரித்திர வரலாற்றை இங்கு சுருக்கிச் சொல்ல வேண்டியது அவசியம் ஏற்படுகிறது.

பேலூர் தற்சமயம் ஒரு சிறிய ஊர். இரண்டு, மூன்று ஓட்டல்கள், நாலைந்து துணிக் கடைகள், சில மளிகைக் கடைகள் இவைகளைக்கொண்ட ஒரு கடைத் தெருவும் இருக்கிறது. சுமார் அறுநூறு வீடுகளிருக்கின்றன.

ஆனால் 800 வருஷங்களுக்கு முன்பு "ஹொய்சல" வம்சம் என்று கூறப்படும் யாதவ அரசர்கள் ஆண்ட ஒரு பெரிய ராஜ்யத்

சாளுக்கிய அரசர்களின் ஆதிக்கத்திலிருந்து விடுதலையடைந்து தனியரசு செலுத்திய முதல் அரசரான விஷ்ணு வர்த்தனன் என்பவரே இக்கோவிலின் பிரதான பாகத்தை அக்காலத்திய திறம் படைத்த சிற்பிகளைக் கொண்டு 1117-ம் வருஷத்தில் கட்டி முடித்தார். ஜைன மதஸ்தரான விஷ்ணு வர்த்தனர் ஸ்ரீமத் ராமானுஜரால் வைஷ்ணவ மதத்தைத் தழுவினார்.

அதன் ஞாபகார்த்தமாகவே அவர் இக்கோவிலைக் கட்டியதாகக் கூறப்படுகிறது. அளவற்ற கலையார்வம் கொண்ட விஷ்ணு வர்த்த



கோவிலின் முழுத்தோற்றம்

தின் தலை நகராக பேலூர் மிகவும் சிறப்புடன் விளங்கியது. இந்த அரச பரம்பரையானது முதன் முதலில் சாளுக்கிய அரசர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்து பின்பு சுயாட்சி பெற்று, அக்காலத்தில் தென்னிந்தியாவை ஆண்ட சோழ பாண்டிய மன்னர்களையும் தனது கண்காணிப்பின் கீழ் வைத்திருந்தது.

னரின் ரசிகத்தன்மைக்குச் சான்றாக இக்கோவில் சிற்பங்கள் எண்ணூறு ஆண்டுகளுக்கு மேலாகியும் கம்பீரமாக விளங்குகின்றன.

சரித்திரப் பிரசித்தி பெற்ற சோமனாதபுர ஆலயத்தை நிர்மாணித்த சிற்பிகளுள் ஒருவரான ஜகணச்சாரி என்னும் சிற்பியே

இக்கோவில் சிற்பங்களைச் செதுக்கியதாகச் சொல்லப்படுகிறது.

விஷ்ணுவர்த்தனரின் ராணியாகிய சாந்தலா தேவி, மற்றொரு சிறிய கோவிலைக் கட்டிவைத்தார். இதனுள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் சுவாமிக்கு சென்னிகராயர் என்று பெயர்.

விஷ்ணு வர்த்தனருக்குப் பிறகு அரசாட்சி செலுத்திய ஒவ்வொரு அரசரும் பேலூர் கோவிலை விஸ்தரித்துக்கொண்டே வந்தார்கள். விஷ்ணுவர்த்தனின் புதல்வரான முதலாவது நரசிம்மன், இரண்டாவது பல்லாலா, மூன்ருவது வீர பல்லாலா, முதலியவர்கள் இக் கோவிலுக்கு எராளமான மான்யங்கள் கொடுத்தும், 1180-ம் வருஷத்தில் கோவிலின் வட கிழக்குப் பக்கத்திலுள்ள வாசுதேவ தீர்த்தம் என்னும் குளத்தை வெட்டியும், கீழ்ப்பக்கத்திலுள்ள உக்கிராண அறை, மதில் சுவர் முதலியவற்றைக் கட்டினார்கள்.

துக்ளக் வம்சத்து அரசர்களில் ஒருவன் தக்ஷிணத்தில் உத்தேசமாக 1378-ம் வருஷத்தில் படையெடுத்து வந்தபொழுது கங்கு சாலர் என்னும் சேனைத்தலைவன் பேலூரை முற்றுகை யிட்டதின் பயனாக இக்கோவிலின் கோபுர வாயில் தீக்கிரை யாகிவிட்டது. நல்ல காலமாக கோவில் சிற்பங்களுக்கு எவ்வித சேதமும் எற்படவில்லை. உயிருள்ளவைபோல் தோன்றும் அச்சிற்பங்களையும், அவற்றின் அபூர்வ கலைப் பண்பு நிறைந்த வேலைப்பாட்டையும் கண்டு அவனே ஆச்சரியத்தால் மயங்கி அவைகளை நாசமாக்கவில்லை போலும்.

இக்காலத்திய பயங்கரப் போர் முனையில் உபயோகிப்பது போன்ற வெடி குண்டுகளையும் 'வி-1', 'வி-2' போன்ற ஆயுதங்களையும் அக்காலத்தில் கண்டு பிடிக்காமற் போனது எவ்வளவோ நல்லதாயிற்று.

1381-ல் இரண்டாவது ஹரிஹரன் காலத்தில்,மந்திரி கம்பண்ண என்பவர் பிளவுகண்ட மேல்தளத்தை செப்பனிட்டு, சித்திர வேலைப்பாடமைந்த நான்கு அழகிய கற்தூண்களை நிறுத்திவைத்தார்.

1387-ல் மலக ராஜா என்பவர் கோபுரத்தின் மீது தங்கமுலாம் பூசிய கலசத்தைச் செய்து வைத்தார்.

1397-ல் குண்டா என்னும் தலைவர் எழு அடுக்கு கோபுரத்தைக் கட்டினர்.

இவ்வாறே பேலூரை ஆண்ட பல தலைவர்கள் தொடர்ச்சியாக சௌமிய நாயகி அம்மன் கோவில் மேற்குப் பக்கத்திலுள்ள பெரிய மண்டபம், ஆண்டாள் கோவில் முதலியவற்றை பிரதான கோவிலுக்குப்பின்புறத்தில் கட்டினார்கள்.

அதன் பிறகு விஜயநகர அரசர்களின் காலத்தில் தீபஸ்தம்பம், உய்யாளி மண்டபம், ராமர் கோவில், யாகசாலை, நரசிம்மர் கோவில் முதலியவைகள் கட்டப்பட்டதுடன், சில பழுதுற்ற இடங்களும் செப்பனிடப் பட்டது. கோவிலுக்கு எதிரிலுள்ள நாக நாயக மண்டபம் பதினைந்தாம் நூற்றுண்டில் கட்டப்பட்டதாகும். இதைக் கட்டியவர் விஜய நகர அரசர் சாளுவ நரசிங்கனின் மந்திரியாகிய நாகநாயகன் என்பராவர். பேலூரில் ஆட்சி செலுத்திய நாயக்கர்கள் என்று அழைக்கப்பட்ட பல சிற்றரசர்கள் பல

சிறு கோபுரங்கள் கட்டியும், பழுது பார்த்தும் கோவிலைப் பாது காத்தார்கள்.

மைசூர் அரசர்கள் பதினெட்டாம் நூற்றுண்டின் ஆரம்பத்திலிருந்து இக் கோவிலின் மீது கவனஞ் செலுத்தி பல திருப்பணிகள் செய்ய ஆரம்பித்தார்கள்.

இரண்டாது கிருஷ்ணராஜா அவர்கள் காலத்தில் 1709-ம் வருஷத்தில், வடக்கேயுள்ள கலியாண மண்டபமும், 1717-ம் வருஷத்தில் மற்ருெரு மண்டபமும் கட்டப்பட்டன. பேலூர் தலைவரான வெங்கட்டா என்பவர் 1736-ம் வருஷத்தில் கோபுரத்தைப் புதுப்பித்தார். பதினெட்டாம் நூற்ருண்டின் இறுதியில் விமான கோபுரம் மிகவும் கீலமடைந்து விழும் தருவாயில் இருந்ததால் கோவிலைப் பாதுகாக்கும் பொருட்டு அக்கோபுரம் அப்புறப் படுத்தப்பட்டது.

1929-ம் வருஷம் புராதனப் பொருளாராய்ச்சி இலாக்காவின் தூண்டுதலின் மீது மைசூர் அரசாங்கத்தார் இக்கோவிலின் பின் பாகத்தையும் இதர பாகங்களையும் புதுப்பிக்கும் பொறுப்பை மனமுவந்து ஏற்றுக் கொண்டார்கள். பிறகு கேட்பானேன். பேலூர் கோவிலுக்கு அடித்தது யோகம்!

பேலூர் கோவில் புனருத்தாரணக் கழகம் 1935-ல் ஏற்படுத்தப்பட்டு இக்கழகத்தார் படிப்படியாக சீர்திருத்த வேலைகளைச் செய்ய ஆரம்பித்தார்கள். கோவிலுக்குப் பின்புறத்தில் குவிந்து கிடந்த, பழுதடைந்த விக்கிரகங்களும், தூண்களும், பாழடைந்த உபயோகமில்லாத பல பொருள்களும் அப்புறப் படுத்தப்பட்டன.

வட கிழக்குச் சுவரும் அதைச் சார்ந்த சென்னிகராயர் சுவாமியின் சிறு கோவிலும், சுகநாசி என்றழைக்கப் படும் பிரகாரத்தின் மேல் தளமும் புதுப்பிக்கப் பட்டன. கோவிலைச் சுற்றியுள்ள மதில் சுவர்கள் பழுது பார்க்கப்பட்டு, கோவிலுக்கு எதிராக ஒரு தேர் நிலையமும் புதிதாகக் கட்டப்பட்டது. கூடுமானவரை கோவிலின் புராதன அமைப்பிலும் தோற்றத்திலும் மாறுதல் உண்டாகாமல் சிறு சிறு சீர்திருத்தங்களைச் செய்தார்கள்.

பிரதானக் கோவிலின் அற்புத சிற்பங்களின்மீது பல வருஷங்களாகப் படிந்திருந்த ஒட்டடை, தூசு, அழுக்கு, எண்ணெய்ப் பிசுக்கு ஆகியவைகளை நீக்கி, பழைய அழகு கெடாதபடி ஒவ்

வொரு பாகமும் மிக்க கவனத்துடன் தகுந்த மேற் பார்வையில் சுத்தப்படுத்தப்பட்டது.

இக்கோவிலின் புனருத்தாரண வேலைக்கு ஏற்பட்ட செலவு ஆறு லட்சம் ரூபாய்களை மைசூர் அரசாங்கம் தாராளமாகக் கொடுத்துதவியது.

காலஞ் சென்ற மைசூர் மகாராஜா நான்காவது கிருஷ்ணராஜ உடையார், கலைப்பொக்கிஷமாகிய இக்கோவிலைப் பாதுகாக்கும் பொருட்டு தானுகவே பிரத்தியேக முயற்சி எடுத்துக்கொண்டதற்காக, இவரது வெண்கல உரு



வச்சிலை யொன்றை இக்கோவிலை 800 வருஷங்களுக்கு முன் நிர்மாணித்த விஷ்ணுவர்த்தனரின் சிலைக்கருகிலேயே வைத்திருக்கிறார்கள்.

பேலூர் கோவிலின் சிற்பங்களின் மகத்துவம் உலகத்தின் பல பாகங்களிலுள்ள ரசிகர்களின் உள்ளங்களைக் கவர்ந்து வருகிறது. இந்தியாவிலிருந்தும், அயல் நாடுகளிலிருந்தும் ஏராளமாக ஜனங்கள் கூட்டம் கூட்டமாக அடிக்கடி இங்கே வந்து போகிறார்கள். நான் சென்றிருந்த சமயத்திலும், இங்கிலாந்தை சேர்ந்த ஒருராணுவ உத்தியோகஸ்தரும், அமெரிக்கப் போர் வீரர் ஒருவரும் சிற்பங்களைக் காண்பதற்கென்றே, பெங்களூரிலுள்ள தங்கள் முகாமிலிருந்து பேலூருக்கு வந்திருந்தனர். அவர்களைப் படத்தில் பாருங்கள். அவர்களுடைய பாதங்களில் பாதரட்சை காணுமே என்று ஆச்சரியப் படுகிறீர்களா? அவைகளைக் கோவிலுக்கு வெளியே விட்டு விட்டுத்தான் வந்திருக்கிறார்கள். அவர்களுடனிருக்கும் தமிழன் யார் என்றறிய விரும்புகிறீர்களா? அந்தத் தமிழன் நானேதான்!

எனக்கு அவர்களுடன் பரிச்சிய மேற்பட்டபிறகு நம் நாட்டுப் புராதனக் கலைச் செல்வங்களைப் பற்றியும் நம் நாட்டிற்கே உரித்தான சிற்பம், ஓவியம், இவைகளைப் பற்றிய பண்பாட்டையும் எடுத்துக் கூறினேன்.

அவர்கள், தாங்கள் தாய் நாட்டை விட்டுவந்து நான்கு வருஷங்கள் ஆகிறதென்றும், இந்த இடைக்காலத்தில், உலகத்தின் பல பாகத்திலுள்ள இடங்களைச் சுற்றிப் பார்த்ததாகவும், தென்னிந்தியாவிலுள்ளது போன்ற சிற்பக்கலை நிறைந்த பாகம் உலகத்திலேயே எங்கும் கிடையாதென்றும், எவ்

வளவு சிறிய சிற்பமானாலும் அத னுள் அமைந்திருக்கும் நுணுக்க மான வேலைப்பாடுகள் ரொம்ப வும் அபூர்வமாக யிருக்கிறதென்று வியந்து கூறினார்கள்.

"திறமான புலமையெனில் பிறநாட்டார்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்"

என்னும் பாரதியாரின் வாக்கிற் கிணங்க, இக்கோவிலின் சிற்ப அதிசயத்தைக் கண்டு பிரமித்துப் போன இந்தியாவின் சிற்பக்கலை யின் பிரபல ஆராய்ச்சி யாளரும், மேல்நாட்டு நிபுணரும், மேதாவி யுமான பர்கூசன் (Fergusson) என்பவர் தனது கட்டுரைகளில் மிகவும புகழ்ந்து எழுதியிருக்கிறார்

வெள்ளைக் கல்லினலான இக் கோவிலின் மகத்தான சிற்பங் களையும், அழகிய சித்திர வேலைப் பாட்டையும், நுட்பமும் மென் மையும் கொண்ட சிற்பத்திறனை யும் ஒவ்வொரு பாகத்திலும் காண லாம்.

கீழிருந்து படிப்படியாக மேல் நோக்கிச்செல்லும் ஒவ்வொரு அடுக்கிலும் உயிர்க் களையுடன் விளங்கும் பறவைகள், மிருகங் கள், சிறு சிறு ஜந்துக்கள், புரா தன யுத்தக்காக்ஷிகள், நடன மாதர்கள். பண்டைய சரித்திரங் களையும் புராண இதிகாச வரலாறு களையும் சித்திரிக்கும் உருவங்கள் இவைகளின் சிற்ப எழிலை வைத்த கண் வாங்காமல் பார்க்கும்படி ஒவ்வொருவரின் மனதையும் கவர்ந்து விடுகிறது.

இக்கோவிலில், அழகிய வேலைப் பாடுகளைக் கொண்ட பல துவாரங் களுள்ள வலை ஜன்னல்கள், மொத் தம் இருபது இருக்கின்றன. இவை ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு சம்ப வத்தைக் குறிக்கும் சிற்பம் உள் ளது. இவற்றுள் முக்கியமாக, இக்கோவிலைக் கட்டிய விஷ்ணு வர்த்தனர் தன் பிரதானிகள் புடைசூழ கொலு வீற்றிருக்கும் காக்ஷி குறிப்பிடத் தக்கது.

இவ் வலை ஜன்னல்களின் பக்க வாட்டில் இருக்கும் முப்பத் தெட்டு அழகிய தூண்கள் ஒவ் வொன்றின் மேலும் ஒவ்வொரு உயிர்ச்சிற்பம் இருக்கிறது. இவற் றில் துர்கா தேவி சிலைகள் இரண்டு அம்பு எய்யும் வேடுவப் பெண்க ளின் சிலைகள் மூன்று: மற்றவை நாட்டிய மாதர்கள், பலவித சங் கீதக் கருவிகளை வாசிக்கும் மங்கை கள், உடையணிந்து கொள்ளும் யுவதிகள், அலங்கரித்துக் கொள் ளும் அணங்குகள், குளிக்கும் பாவைகள், நீர்க்குட மேந்திய மடந்தைகள் முதலியவைகளாகும் ஒவ்வொரு சிலையின் பாவமும் ஒப்புயர் வற்றது!

இவற்றைத் தவிர்த்து, ரதி-மன் மத நாட்டியம், இந்திர சபை நட னம், சிவ-பார்வதி நடனம், ராவ ணன் கைலாச பர்வதத்தை தூக்கு தல், தர்மரின் சூதாட்டம், அர் ஜுனன் வில் யுத்தம் முதலிய சிற் பங்களின் பாவம் ரசிக்கத்தகுந் தவை.

இவ்வாறு ஒவ்வொன்ருகப் பார்த்துக்கொண்டுவந்த நான், ஒரு சிற்பத்தருகில் வந்து நின்ற தும் என் மூச்சே சிறிது நேரம் நின்றுவிட்டது! எல்லாச் சிற்பங் களும் நன்ருக இருக்க இதுமட் டும் தலை, முகம், தோள், கைகள் மார்பு, வயிறு, தொடை, கணுக் கால் பாதம் முதலிய வற்றில் குழி கள் விழுந்து, சப்பைதட்டி உச்சி முதல் உள்ளங்கால்வரை பழு தடைந்திருக்கிறது! காரணம் கேட்டதற்கு "இச்சிற்பத்தின் ஒவ்வொரு பாகத்தையும் கல்லி ஞல் தட்டினல் ஒவ்வொரு வித

மான சப்தம் கேட்கிறது. அதனல் தான் இவ்வதிசய சிலைக்கு இக்கதி நேர்ந்து விட்டது'' என 'விளக்கிக் கூறுபவர்' சொன்னர். உடனே சுற்றிப்பார்த்து ஒரு கல்லைக் கை யில் எடுத்ததும், அவர் என்னைத் தடுத்து "சார், உங்கள் பையில் இப்பொழுது ஐம்பது ரூபாய்கள் இருக்கிறதா?'' என்று கேட்டார்.

''ஏன்,'' என்றேன் ஆச்சரியத் துடன்.

''இச்சிலையைக் கல்லால் தட்டி ஞல் ரூ. 50 அபராதம் செலுத்த வேண்டும். தவிர ஒருவாரம் தங் கள் விருந்தினராகவும் இருக்க வேண்டும்'' என்பது கடுமையான அரசாங்கச் சட்டம் என்று கூறி ஞர். இதைக் கேட்டதும் கையி லிருந்த கல் என்னை அறியாமலே நழுவி விட்டது!

நல்லகாலமாக இந்தச் சட்டத்தின் பயனைத் தான், அந்த பழுதுற்ற சிலையை யாவது பார்க்க முடிகிறது இல்லா விட்டால், இவ்வளவு காலத் திற்குள் அது அடி பட்டு, அடிபட்டு இருந்த சுவடே தெரியாமல்மறைந் திருக்கும்.



ஒரு எழில் மிகுந்த மங்கை, தன் முகத்தின் எதிரே கண்ணடியை கையிலேந்தி நிற்கிருள். உடல் வஞ்சிக்கொடிபோல் வளைந்து கொடுக்கிறது. அவள் முகம் கண் ணடியில் தெரியவேண்டுமல்லவா? அதுவோ நிஜக் கண்ணடியில்லை வெறும் கல்தானே. இந்த இடத் தில்தான் சிற்பியின் கற்பனைத் திறனும், மனேபாவமும் சிகரத் தை அடைந்திருக்கிறது. வட்ட வடிவமான கண்ணடி ரூபமுள்ள அக்கல்லின் மேல்பரப்பிலே, அம் மங்கையின் முகம், மேல் கவிழ்ந்த வாறு செதுக்கியிருப்பது, முக ஜாடை சிறிதும் மாருமல் பிரதி பலிக்கும் பிம்பம் போலவே தோன்றுகிறது!

ஒரு பெண் தன் புடவையை வாரிச் சுருட்டி இருகைகளிலும் பிடித்துக்கொண்டு பதட்டத் துடன் நிற்கிருள். முகம் பீதி யடைந்து, கண்விழிகள் மருண்டு வெலவெலத்துப்போன பாவம் அற்புதமாய் காணப் படுகிறது. அவ்வளவு அலங்கோலத்திற்குக் காரணம் எதுவாயிருக்கும் என்று நாம் சிந்தித்து பார்க்கும் முன்பே அவள் கால்களுக்கிடையில் கரு மணிபோன்ற இரு கண்களுடன் மணி மணியான நீண்ட கொடுக் கை மேலே வளைத்துக் கொண்டு ஒரு தேள் விரைந்தோடுகிறது! இம்மங்கையின் மனே உணர்ச்

சியை இவ்வளவு லாகவமாக எடுத்துக்காட்டிய சிற்பியின் திறமையை எவ்வாறு புகழ்வது?

பலாப் பழத்தின் மீது ஒரு ஈ உட்கார்ந்திருக்கிறது. சாதாரணமாக நாம் சிறிது தூரத்திலுள்ள ஈயைப்பார்த்தால் அதை ஒரு சிறிய கல்லென்று நினைத்து விடுகிறோம். ஆனால் கற்சிற்பமாகிய இந்த ஈயைக் கண்டதும் உயிருள்ள ஈ போன்றே தோன்றுகிறது! அவ்வளவு நுட்பமான வேலைத்திறன்!

கோவிலுக்கு உள்ளே சென்றால், அங்கும் எங்கு பார்த்தாலும் ஒரே சிற்பக்காக்ஷிதான்! நடுவில் நிறுத்தப் பட்டிருக்கும் வேலைப் பாடமைந்த நான்கு தூண்களிலும் நான்கு ஒப்பற்ற சிலைகள் இருக்கின்றன.

ஒன்று தலையை அலங்கரித்துக் கொள்ளும் பெண், இவள் நெற்றியில் தொங்கும் ஆபரணம் இரு பக்கமும் அசைந்தாடக்கூடியது!

மற்றொன்று, கையில் கிளியை ஏந்தியிருக்கும் பெண், இவள் கைகளில் அணிந்திருக்கும் ஆபரணங்கள் மேலும் கீழும் நகர்த்தக் கூடியதாக அமைந்திருக்கிறது. 'கல கல' வென்னும் சப்தத்தையும் உண்டாக்குகின்றன!

இன்னொன்று வீணை வாசிக்கும் சரஸ்வதி.

மற்றுமொன்று, ஒரு நடனமாதின் நிருத்திய பாவம். இவைகள் ஒவ்வொன்றிலும் அற்புதத்திற்குக் குறைவில்லை!

இன்னும் இவை போன்ற ஆயிரக் கணக்கிலிருக்கும் சிற்பங்கள் ஒவ்வொன்றையும் வர்ணிப்பதென்பது என் சக்திக்கு மீறியது.

இக் கோவிலில் ஒரு அங்குலஇடம் கூட வீணாக்கப்படவில்லை. அவ்வளவும் சிற்பமயம்.

கோவிலின் வெளிப்புறத்திலுள்ள சிற்பங்களையெல்லாம் பார்த்த பிறகு உள்ளுக்குச் சென்று பிரகாரத்தை யடைந்ததும் போதுமான வெளிச்ச மில்லாது இருளடைந் திருந்ததால் ரசிக்க முடியாமற் போகுமே என்றெண்ணி மனச்சோர்வு அடைய ஆரம்பித்தேன். ஆயினும் எதிர்பார்த்த அளவு நான் ஏமாற்றமடையவில்லை. ஏனெனில் இக் கோவிலைப் பாதுகாப்பதற்காகச் செய்த அவ்வளவு முயற்சிகளுக்கும் சிகரம் வைத்தாற்போல், மின்சார விளக்குகளும் போட்டிருக்கிறார்கள்!

இருள் சூழ்ந்திருக்கும் இடங்களிலுள்ள சிற்பங்களை நன்றாகப் பார்த்து மகிழ்வதற்கென்றே பிரத்தியேகமாக அதிக சக்தி வாய்ந்த சில மின்சார விளக்குகள் பொருத்தப் பட்டிருக்கின்றன. ரசிகர்களின் உற்சாகத்தை அதிகப் படுத்துவதற்கு இதைவிட வேறு என்ன செய்யவேண்டும்!

புராதன சிற்ப ஜாலங்களிடையே, நவீன ஒளி ஜாலங்களையும் வீசி, நம்மை ஒரு மாயாஜால உலகத்திலே நடமாடும்படி செய்து விடுகிறார்கள்!

தூரத்துப் பார்வைக்கு இக் கோவில் சாதாரணமாகத் தோற்றமளிக்கிறது. ஆனால் அருகில் சென்று, எவ்வளவுக் கெவ்வளவு கூர்மையாகவும், ஊன்றிய கவனத்துடனும் சிற்பங்களை உற்றுப் பார்க்கிறோமோ, அவ்வளவுக் கவ்வளவு நமது வியப்பும் ஆர்வமும் வளர்ந்து கொண்டே போகும்.

இவ்வாறாக, இந்தியாவின் கலைப் பொக்கிஷங்களுள் ஒன்றாகிய பேலூர் கோவிலை மிக அருமையாகப் பாதுகாத்துவரும் மைசூர் அரசர்களின் சந்ததி நீடூழி வாழ்க!

மகேந்திரவர்மன்

அ. கிருஷ்ணமூர்த்தி

கிறிஸ்து பிறந்து நானூறு ஆண்டுகள் வரையில் நான்கு திசையிலும் புகழ் படைத்து விளங்கிய தமிழகத்தின் சரித்திரத்தை, அதன் பிறகு இருண்ட மேகங்கள் வந்து கவிந்து கொண்டன. அதிலிருந்து 200 ஆண்டுகள் சிக்கலும் குழப்பமும் மிகுந்து பல காரணங்களால் நாட்டின் நிலை சிதைந்து போயிற்று.

இக்காலத்தில் தெற்கே பாண்டிய தேசத்தில் பாண்டியர்கள் மிகவும் வலுவிழந்து போனார்கள். சோழர்கள் இருந்த இடமே தெரியாமல் மறைய வேண்டியதாயிற்று. சேரர்களின் சேதி தெரிவதற்கே வழியில்லை.

ஆறாம் நூற்றாண்டின் கடைசியில் பாண்டியர்கள் மட்டும் சிறிது தலை தூக்கினார்கள். அவர்கள் தங்கள் பலத்தைப் பெருக்கிக் கொள்வதற்குள், வடக்கே அதாவது தொண்டை நாட்டில் காஞ்சீபுரத்தைத் தலை நகராகக் கொண்டு ஒரு புதிய அரசு, மிக வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தது. இருநூறு வருடமாக ஒண்டியிருந்து சிறிது சிறிதாக வளர்ந்து ஒரு உன்னத நிலைக்கு வரக்கூடிய அறிகுறிகளோடு அது வெளிப்பட்டது. அதுதான் பல்லவ அரசு.

பல்லவர்கள் யார்? இந்நாட்டிலேயே பரம்பரையாக இருந்தவர்களா? அல்லது இந்தியாவிற்கு வெளியிலிருந்து இங்கு வந்து குடியேறினவரா? இங்கேயே இருந்தவர் என்பது ஒரு சாரார் கொள்கை. இன்னொருவர் கொள்கைப்படி, அவர்கள் வட இந்தியா வழியே வந்த சக பார்த்திபர் என்ற கூட்டத்தாரின் குடி வழியில் தோன்றியவர். இந்த இரண்டு கருத்துகளும் சரிவர இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை.

இருந்தாலும், இது பற்றி இன்று ஆராய்ச்சி செய்யும் அறிஞர்களின் கருத்தை உற்றுக் கவனித்தால், அதன் போக்கு, பல்லவர்கள் தமிழ் நாட்டிலேயே பரம்பரையாக இருந்தவர்களே; குடியேறியவர்கள் அல்ல என்ற முடிவுக்குக் கொண்டு போகிறது. அதன்படித் தொண்டை நாட்டில் ஆட்சி செய்த அரச குடும்பத்தார் வழியில் அவர்கள் தோன்றிப் பரவியிருக்க வேண்டும் என்று ஏற்படுகிறது.

இந்த அரச குடும்பத்தை உயர்த்தி முன்னேற்றியவன் சிம்ம விஷ்ணு. இவனது ஆட்சி கி. பி. 600 க்குப் பக்கமாக முடிவடைந்தது. இவனைத் தொடர்ந்து பல்லவ அரசைத் தெற்கே காவேரி யாறு வரையிலும், வடக்கே திருப்பதி, நெல்லூர் வரையிலும் பரவச் செய்து பெரும் புகழோடு

அரசாண்டது அவன் மகன் மகேந்திரன்.

மகேந்திரன் இசையிலும் நாடகத்திலும் ஓவியத்திலும் சிற்பத்திலும் அடங்காத காதல் கொண்டவன். அவனே ஓவியம் வரைவதிலும், நாடகம் எழுதுவதிலும் சிறந்து விளங்கினான். அவன் எழுதிய சில நூல்கள், அவனுடைய கல் வெட்டுகள், கோவில்கள், அவன் கோயிற் சிற்பங்கள் இதற்குச் சாட்சிகள்.

இவன் ஆண்டது ஒரு 30 வருஷம். இவன் மகன் அரசாண்டது ஒரு 25 வருஷம். இந்த 55 வருஷத்தில் பல்லவர்களின் ஆட்சி உச்சத்தை யடைந்து விட்டது. இவன் மகன் நரசிம்மன்.

நரசிம்மன் வீரருக்கு வீரன். அவனுடைய வெற்றிகளால்தான் பல்லவராஜ்யம் நிலைத்ததோடு, அது உச்ச நிலையையும் அடைய முடிந்தது. இதை விளக்குவதற்கு இவன் தந்தை மகேந்திரன் காலத்திலிருந்து தொடர்ந்து வந்த சில போர்களை அறிய வேண்டும்.

மகேந்திரன் காலத்தில் நடந்தது என்ன?

பம்பாய் மாகாணத்தில் பீஜப்பூரிலுள்ள பாதாமியைத் தலை நகராகக் கொண்டு, மேலைச் சாளுக்கியர்கள் ஒரு வல்லரசாக வளர்ந்து கொண்டு வந்தார்கள். இந்த வமிசத்து மன்னன் இரண்டாம் புலிகேசி அப்பொழுது நான்கு திசையிலும் வெற்றிக் கொடி நாட்டி வந்தான். இவனது ராச்சியம் இருப்பது தக்ஷிணத்தில், மேலைக்கடல் ஓரமாக, கீழ்க்கடல் ஓரமாகவுள்ள கிருஷ்ணா கோதாவரி ஜில்லாக்கள் அடங்கிய நாடு அப்பொழுது வேங்கிநாடு என்று அழைக்கப் பட்டது. வேங்கி நாட்டைக் கைப்பற்றுவதற்காகத் தக்காணத்தை நெடுங் குறுக்காகப் படையெடுத்தான் புலிகேசி. வேங்கிநாடு அவனுக்கு அடிபணிந்தது. அங்குத் தன் தம்பி குப்ஜ விஷ்ணு என்பவனை அரசனாக்கி அவனுக்கு முடி சூட்டினான். இது நடந்தது கி. பி. 611.ல். இது முதல் தக்காணத்தின் கிழக்குக் கரையில் கீழைச் சாளுக்கிய வமிசம் தழைக்கத் தொடங்கிற்று.

புலிகேசி தன் வமிசத்தின் ஒரு கிளையைக் கிழக்குக் கரையில் நிலை நாட்டியதோடு நிற்கவில்லை. பிறகு, கரையோரமாகத் தெற்கு நோக்கிப் படையெடுத்தான். தெற்கே காஞ்சிபுரத்தைக் கைப்பற்றி மகேந்திரனைத் தோற்கடிக்க வேண்டும்; தோற்கடித்து அவனுக்கு உட்பட்ட சோழதேசம் முதலான இடங்களையும் பிடித்து விந்தியம் முதல் குமரி வரையில் ஒரு தென்னிந்திய ஏகாதிபத்தியத்தை ஏற்படுத்த வேண்டும் என்பது அவனுடைய திட்டம்.

வெற்றி முழக்கத்தோடு வருகின்ற புலிகேசியை எதிர்த்து நிற்க மாட்டாமல், பல்லவன் — மகேந்திரன் தன் காஞ்சிமா நகரத்தின் மதிலுக்குள் ஓடி ஒளிந்து கொண்டான். பிரம்மாண்டமான மதிலைக் கடந்து உள்ளே நுழைய முடியாமல் சாளுக்கியன் சலித்துப் போய்த் தன் நகருக்குத் திரும்பி விட்டான்; மகேந்திரன் தப்பினான். இது முதல் சாளுக்கியருடைய முன்னேற்றம் பல்லவருக்குத் தீராத ஒரு தலைவலியாக இருந்து வந்தது.

மகேந்திரன், வயசானவன், கி. பி. 630 வாக்கில் இறந்து போனான். புலிகேசியின் வலிமை இன்னும் குறையவில்லை. வட

க்கே இமயமலை முதல் தெற்கே விந்தியமலை வரையிலும்; கிழக்கே காமரூபம் (அஸ்ஸாம்) முதல் மேற்கே காஷ்மீரம் வரையிலும் பரந்து கிடந்த வட தேசம் முழுவதையும் ஒரு குடைக் கீழாண்ட ஹர்ஷவர்த்தனனை, நருமதை நதிக் கரையில் தோற்கடித்து, அவனைப் பிறகு போர்க்களத்திலேயே தலை காட்டாதபடிச் செய்து விட்டான் புலிகேசி.

மகேந்திரன் மகன் நரசிம்மன் முடிசூடிக் கொண்டு இன்னும் சில வருஷங்கள் ஆகவில்லை. இவனை முளையிலேயே கிள்ளிவிட எண்ணிக் காஞ்சி நகரை நோக்கி புலிகேசி மறுபடியும் தெற்கே வந்தான். தன் தந்தை காலத்தில் ஏற்பட்ட ஆபத்து, தான் அரசியலுக்கு வந்த கொஞ்ச காலத்தில் மீண்டும் ஏற்படக்கண்டு, சாளுக்கியப் படைகளை மிக்க தீரத்துடனும், ஆத்திரத்தோடும் எதிர்த்து நின்றான் நரசிம்மன். மணி மங்கலம், பரியளம், சூரமாரம் — இந்த மூன்று இடத்திலும் நடந்த சண்டைகளில் புலிகேசி தோல்வியடைந்து பழைய மாதிரியே பயனில்லாமல் திரும்ப வேண்டியதாயிற்று. வடக்கே ஹர்ஷனைத் தோற்கடித்த புலிகேசிக்குத் தெற்கே பல்லவனால் வந்தது அவமானந்தான்!

சாளுக்கியனை விரட்டி விட்டதால், நரசிம்மன் குதூகலங் கொண்டாட வில்லை. தன் தலைமுறையில் தன் தலை நகரில் இரண்டு முறை வந்து துன்புறுத்திய சாளுக்கியனைப் பதிலுக்குப் பதில் அவன் தலை நகரில் படையெடுப்பதற்கு, விரைந்து பல ஏற்பாடுகள் செய்தான் நரசிம்மன். மேற்கே விருந்து கொண்டு, வடக்கிலும், கிழக்கிலும் வெற்றித் தூண் நாட்டித் தெற்கிலும் அடிக்கடி வந்து கொண்டிருக்கிற புலிகேசியைத் தட்டி நிறுத்தா விட்டால், பல்லவர்களுடைய ஆட்சிக்கு முற்றுப் புள்ளி ஏற்படுவது ஒரு பெரிதல்ல.

பல ஆண்டுகள் செய்த தீவிரமான ஏற்பாடுகளுக்குப் பிறகு ஆயிரக் கணக்கான யானைகளும், குதிரைகளும், வீரர்களும் கொண்ட பெரும்படைகள் புறப்பட்டன சாளுக்கியனின் தலை நகரை நோக்கி. இந்தப் படையெடுப்பில் இலங்கையரசன் மானவம்மன் என்பவன் பல்லவனுக்குத் துணையாகப் போனான். படைகளை நடத்திச் சென்றது பரஞ்சோதி என்ற படைத்தலைவன். அப்பொழுது நாலு திசையிலும் போர்களை நடத்திச் சலித்துப் போயிருந்தான் புலிகேசி. கிழப் பருவமுங்கூட. கி. பி. 642 ல் வாதாவித் தலை நகரத்தைப் பல்லவன் படைகள் முற்றுகையிட்டன. படைகளை எதிர்த்து நிற்க மாட்டாமல் புலிகேசி போர்க்களத்தில் கொல்லப்பட்டான். சாளுக்கியன் படைகளைச் சிதறவடித்துத் தலை நகரத்தை இடித்துத் தூளாக்கி விட்டு மீண்டது பல்லவன் சேனை.

இந்தச் சேனையை நடத்திச் சென்ற பரஞ்சோதிதான், பிறகு சிறுத்தொண்ட நாயனார் என்ற சிவனடியாராக மாறியவர். பெரிய புராணத்தில் இவர் சரித்திரம் சொல்லப்படும் போது, இவர் வாதாவித் தலை நகரத்தைப் படையெடுத்து அழித்த சேதி, தெளிவாகப் பாடப்பட்டிருக்கிறது: இதை உறுதிப் படுத்துவதற்கு வாதாவியில் அகப்பட்ட ஒரு கல் வெட்டின் குறிப்புகள் நல்ல சான்றாக விளங்குகின்றன.

இப்படி யழிந்துபோன வாதா விப் போர்க்களத்தில் பொன்னும் மணியும், யானையும் குதிரையுமாக நரசிம்மனுக்கு அகப்பட்டவை ஏராளம்!

நாலு திசையிலும் வெற்றி கொண்டு, சக்கரவர்த்தி ஹர்ஷனை யும் தோற்கடித்த புலிகேசியை அவன் தலை நகரத்திலேயே புகுந்து பல்லவன் நரசிம்மன் சின்னு பின் னப் படுத்தியது, பல்லவர் புகழை யும், செல்வாக்கையும் வானளாவ உயர்த்தி விட்டது.

இனி, இதனல் பல்லவனுக்கு என்னென்ன விதமான சாதகங் கள் ஏற்பட்டன என்பதைப் பார்ப்போம். இந்தப் படை யெடுப்பால் புலிகேசி இறந்த பின் கிட்டத்தட்ட பதின்மூன்று ஆண்டுகள் வரையில் சாளுக்கிய நாட்டில் அரசு என்பதே இல்லா மல் போயிற்று; அதாவது அராஜ கம் நடந்தது. இதன் விளைவாக சாளுக்கியனின் சுற்றத்தார் — வேங்கி நாட்டில் புலிகேசிக்கு அடங்கி நடந்தவர்கள் — இப் பொழுது விடுதலை பெற்றனர். அவர்கள் தங்கள் நிலைமையைச் சீர்படுத்துவதிலேயே கருத்தாயி ருந்தார்கள். பல்லவனை வெல்ல வேண்டும் என்ற எண்ணமும் துணிவும் இல்லாத சிற்றரசுகள் அவர்கள். வடதேசத்தில் ஹர் ஷன் இறந்த பிற்பாடு, ஹர்ஷனு டைய குடும்பமும், மௌரிய சாம்ராஜ்யமும் விழுந்து விட்டன. ஹர்ஷன் ராச்சியத்தை அவன் மந்திரி பிடித்துக் கொண்டு, சபைக்கு வந்த சீனத் தூதுவர் களைக் கொலை செய்தான்; பிறகு சீனர்களால் சைனுவுக்கு அவன் கைதியாகப் பிடித்துக் கொண்டு போகப்பட்டான். ஹர்ஷராச்சி யம் சீர்குலைந்தது. தெற்கே பாண் டியர்கள் இப்பொழுதுதான் கொஞ்சங் கொஞ்சமாக முன் னேறிக் கொண்டிருந்தார்கள். இன்னும் கொஞ்சந் தெற்கே போவோம். தன் நண்பன் மான வம்மன் என்ற சிங்கள அரசனுக் காகத் தன்படைகளைச் சிலோ னுக்கு அனுப்பி, அவன் இழந்த அரசை மீட்டுத் தந்து, அவன் ஆட்சியை அங்கு நிலை நிறுத்து வதற்கு உதவி செய்தான் நரசிம் மன். இவ்வாறு சிலோன் முத லாகத் தென்னிந்தியா முழுவதும், தக்காணத்திலும், அதற்கு வடக் கிலும் தன்னை எதிர்த்து வரக் கூடிய பலம் பொருந்திய முடி யரசு ஒன்றுமில்லை என்று ஏற் பட்டதால், பல்லவ தேசத்தில் எங்கும் சமாதானமும் அமைதி யும் பரவலாயின.

பல்லவன் சிங்கள அரசனுக்கு உதவிப் படைகள் அனுப்பியது பற்றி மகாவமிசம் என்ற சிங் களக் காவியம் பின் வரும் கதை யைச் சொல்லுகிறது. அது கொஞ்சம் வேடிக்கையானதுங் கூட:

இலங்கையில் ஹட்டதத்தன், மானவம்மன் என்ற இரண்டு மன்னர்களுக்கும் அரசுரிமை பற் றிப் பகை மூண்டு, மானவம்மனை ஹட்டதத்தன் துரத்தி விட்டான். இழந்த அரசு கட்டிலை மறுபடியும் எந்த விதத்திலும் பெறவேண்டு மென்று உறுதி கொண்ட மான வம்மன் பல்லவனிடம் சரண டைந்தான். நாளடைவில் பல்ல வனும், மானவம்மனும் நெருங் கிய நண்பர்களானர்கள். வாதா விப் படையெடுப்பு நடந்தபோது மானவம்மனின் நடத்தையை ஆராய்வதற்காக அவனைத் தன் தலை நகரத்தைப் பாதுகாக்கும்படி விட்டுப் போனன் பல்லவன்.

சிங்கள அரசனுக்கு இது பிடிக்கவில்லை. தன் நண்பன் போர்க்களம் போகும்போது, தான் மட்டும் இங்குத் தங்கியிருப்பது மனதுக்குச் சம்மதமில்லை; பிறகுத் தானும் புறப்பட்டுப் போர்க்களம் போய்ச் சேர்ந்தான். பல்லவனுக்கு இவன்மேல் நிரம்பிய அன்பு ஏற்பட்டது.

இழந்த இவன் அரசை மீட்டுத் தருவதற்காகப் பல்லவன் இவனுடன் ஒரு பெரும்படையைச் சிங்களத்துக்கு அனுப்பினான். முதலில் வெற்றி கிடைத்து அரசைக் கைப்பற்றிய கொஞ்ச காலத்தில், மானவம்மன் மறுபடியும் அரசை இழந்து விட்டான். பிறகு மேலும் பெரிய படைகளையனுப்பித் தானே நேரில்கூட வருவதாகப் பாசாங்கு செய்து, பல்லவன் — நரசிம்மன், தானும் படைகளோடு சிங்களத்துக்குக் கப்பல் ஏறுவதாகப் போனான். மன்னனும் வருகிறான் என்ற குதூகலத்தில் படைகள் வெகு ஆரவாரமாகப் புறப்பட்டன. காஞ்சிபுரத்தையடுத்த மாமல்லபுரத்தில் எல்லாரும் கப்பலேறினார்கள். படைகளைத் தாங்கிக் கொண்டு போர் பறை முழக்கிக் கொண்டு கப்பல்கள் மட்டும் மிதந்து செல்லுகின்றன. ஆனால் பல்லவன் கரையிலேயே நின்று விட்டான். இதையறியாமல் படைகள் பெரிய குதூகலத்தோடு போர் செய்தன; வெற்றி வந்தது; மீண்டும் மானவம்மன் அரசனானான். பல்லவனுடைய உதவியால், அவன் ஆட்சி முடியும் வரையில் மானவம்மனுக்கு வேறு இடையூறுகள் எதுவும் பிறகு ஏற்படவில்லை; அமைதி நிலவியது – என்று சொல்லுகிறது சிங்களக்கதை.

இவ்வாறு தன்னை எதிர்ப்பார் இல்லாமையால் பல்லவன் தன் நாட்டு வளங்களில் கருத்தைச் செலுத்தினான். நாட்டில் அமைதி நிலவியது. வாணிகம் செழித்தது கலைகள் ஓங்கின.

இவன் தலை நகர் காஞ்சிமா நகரத்தைச் சுற்றி ஆழமான அகழிகளும், வானளாவிய மதில்களும் நகரத்தைக் காவல் செய்தன. அகன்று பரந்த தெருக்களும், மாடங்களும், கோவில்களும் கட்டப்பட்டன. நீர்ப்பாசனமும், நிலவளமும் பெருகுவதற்குக் கால்வாய்கள் வெட்டப்பெற்று நாட்டு வளம் பெருகியது. காஞ்சிமா நகரம் உள்நாட்டிலிருந்து கடற்கரை வரையில் 20 மைல் தூரம் நீண்டு விரிந்து கிடந்தது துறைமுகம். மாமல்லபுரத்தில் நடந்த வியாபாரம் பல மடங்கு செழித்து விளங்கியது. யானைகளையும், இரத்தினங்களையும் சுமந்து கொண்டு கப்பல்கள் அசைந்து அசைந்து செல்லும் அழகிய துறைமுகம் மாமல்லபுரம் என்று 40 ஆண்டுக்குப் பிறகு வாழ்ந்த வைணவப் பெரியார் திருமங்கை யாழ்வார் பாடுகின்றார்.

இப்படி வளர்ந்த கடல் வியாபாரம் சீன தேசத்தோடு அடுத்த அடுத்த தலை முறைகளில் அரசியல் விவகாரங்களிலும் தொடர்பை உண்டு பண்ணிற்று. இவனுடைய பேரன் இராசசிம்மன் சீன வேந்தனின் இராசசபைக்குத் தூதுகள் அனுப்பியும் அரபுதேசம் திபேத்துநாடு — இவற்றின் மேல் படையெடுக்கவும் ஒருவர்க்கொருவர் நேசப்பான்மையில் ஒத்தாசை செய்து கொள்ள உடன் பட்டனர்.

"காஞ்சிமா நகரமும். அதைச் சேர்ந்த நிலங்களும் மிகவும் செழிப்பானவை. அங்குள்ள

சோலைகளில் பூவும் கனியும் வித விதமாகக் கிடைக்கும். தேசத்தில் மிகவும் விலையுயர்ந்த பொருள்கள் அகப்படுகின்றன. மக்கள் மிகுந்த தைரியமும், பொது நலத்தை நாடும் குணமும் உள்ளவர்கள். பிறரால் நம்பத்தகுந்தவர்கள். நிரம்பிய கல்வியறிவைப் புகழ்ந்து பாராட்டும் பெருங்குணமுள்ளவர்கள். அவர்கள் பேசும் பாஷை, மத்திய இந்தியாவின் பாஷையைவிட வேறுபட்டது'' ''காஞ்சீபுரத்திலிருந்து சிலோனுக்குக் கப்பல்கள் இடைவிடாமல் போய் வருகின்றன'' — என்று 'ஹியூவன் சாங்' என்ற சீன யாத்திரிகன், தான் காஞ்சீபுரத்தில் கண்டவைகளை எழுதிப் போயிருக்கிறான்.

காஞ்சீபுரம் அக்காலத்தில் கல்வியிலும் புலமையிலும் சிறந்து விளங்கிற்று. பல்லவர்கள் வடமொழிக் கல்லூரிகளை வைத்து அங்கு வட நாட்டுக் கலையும் கருத்தும் பரவுதற்குக் காரணமானார்கள்.

அக்காலத்தில் படித்தவர்கள் என்போர், மத சம்பந்தமான தருக்கங்களையும், தத்துவ ஆராய்ச்சியையும் செய்வதிலேயே முனைந்து நின்றார்கள். தருக்கத்தில் பௌத்தர்களை வெல்ல முடியாமல் எவ்வளவோ மதவாதிகள் பின் வாங்கியிருக்கிறார்கள். காஞ்சீபுரம் பல நூற்றாண்டுகளாகவே தென்னிந்தியாவில் பௌத்த மதத்தின் தலை நகராக இருந்து வந்தது. காஞ்சீபுரத்தின் எல்லையில் அசோகன் தனது பௌத்தமதத் தத்துவங்களைத் தூண்களில் வெட்டுவித்ததும்; மணிமேகலை காஞ்சீபுரத்தில் சென்று புத்த தருமங்களைப் பரப்பியதும்; குமார குப்தனால் ஏற்படுத்தப்பட்டு, ஹார்ஷன் காலத்தில் தழைத்தோங்கிய நாளந்தாப் பல்கலைக்கழகத்தின் தலைமைப் பதவிக்குக் காஞ்சீபுரம் தன்மபாலன் என்ற பௌத்த ஞானியை வழங்கியதும் ஏறக்குறைய 1000 வருஷத்துச் சரித்திரத்தை நினைவுக்குக் கொண்டு வருகின்றன.

1000 ஆண்டுகள் வரையில் இந்தியாவில் மட்டுமல்லாமல், இந்தியாவுக்கு வெளியிலும், பெரும்பாலும் ஆசியக் கண்டத்தின் எல்லா நாகரிக நாடுகளிலும், இரத்தஞ் சிந்தாமல் பரவி — இரத்தஞ் சிந்தாமல் மங்கி மறைந்து விட்ட பௌத்த மதத்தின் பெரிய ஞானிகளைக் காஞ்சீபுரம் தோற்றுவித்திருக்கிறது. பழங்காலத்து இந்தியாவில் தக்கசீலம், வல்லபி, விக்கிரமசீலம் முதலான பல்கலைக் கழகங்கள் விளங்கிய இடங்களில் காஞ்சீபுரமும் ஒன்று.

''காஞ்சீபுரத்தில் 100 பௌத்த மடங்களும், 80 பெரிய புத்தக் கோயில்களும், 10,000 துறவிகளும் இருந்தனர்'' ''நாளந்தாப் பல்கலைக் கழகத்தின் ஞானாசிரியனாக விளங்கிய தன்மபாலன் பல்லவனாட்சியில் இருந்த ஒரு பெரிய உத்தியோகஸ்தரின் மூத்த மகனாவன்'' ''தலை நகரத்தின் தெற்கே அருகாமையில், தேசத்தின் பேரறிஞர் எல்லாரும் கூடித் தருக்கம் செய்யும் பெரிய பட்டி மண்டபம் ஒன்று இருந்தது. அதையொட்டி நூறடிக்குமேல் உயரமான அசோகனுடைய தூண் ஒன்று ஓங்கி நின்றது'' — என்று ஹியூவன் சாங், தன் குறிப்புகளில் எழுதியிருக்கின்றான்.

இப்படி நிலைத்து நின்ற புத்த மதத்தோடு, சமணமதம் போட்டியிட்டு, அப்பொழுது தளர்ந்திருந்தது. இதற்குக் காரணம், இந்த

இரண்டு மதங்களையும் ஒழிப்பதற்கு ஆரம்ப முதல் முனைந்து நின்ற வைதிக மதங்களான சைவமும், வைணவமும் செல்வாக்குப் பெற்றதுதான். பௌத்த மதத்துக்கு அசோகன் முதல் ஹர்ஷன் ஈருக எப்படிப் பல பெரிய அரசர்கள் அரசாங்கவுதவிகளை அளித்தார்களோ, அப்படியே சைவ வைணவ மதங்களுக்கும் பல்லவர் காலத்தில் அரண்மனைச் செல்வாக்கு அதிகரித்தது.

பல்லவர்களில் மகேந்திரன் சமண மதத்தை விட்டுத் திருநாவுக்கரசருடைய சக்தியால் சைவனுக மாறினன். சைவனுக மாறி, சமண பௌத்தக் கோயில்களையும் ஸ்தாபனங்களையும் ஒடுக்கினன். இவன் மகன் நரசிம்மன் வைணவன். இவனுல் வைணவம் அதிகம் பரவிற்று. சமண, பௌத்த மதங்களை ஒடுக்குவதிலேயே கருத்தாக இருந்ததால், சைவம், வைணவம் என்ற இவ்விரு மதங்களும் ஒன்ருேடொன்று மிகவும் ஒத்துழைத்தன. சைவனுக மாறினுலும் மகேந்திரன் வைணவக் கோயில் களையும் கட்டினன். வைணவனுக இருந்தாலும், நரசிம்மன் சைவர்களுக்கும் உதவி செய்தான்.

நரசிம்மன் காலத்தில் பாண்டிய தேசத்தை யாண்டவன் நின்றசீர் நெடுமாறன் என்பவன். இவனைக் கூன்பாண்டியன் என்றும் சொல்வார்கள். இவனுக்கு வந்த சுரத்தைத் தீர்ப்பதில் சைவரும், சமணரும் போட்டியிட்டனர். திருஞான சம்பந்தர் மதுரையில் சமணர்களை வென்றதும், தோற்ற சமணர்கள் கழுவேற்றப் பட்டார்கள் என்று சொல்லப்படுவதும் சரித்திரம், புராணம் இரண்டிலும் காணப்படுகின்றன. ஹியூவன் சாங் தான் பாண்டியநாடு போன போது அங்குப் புத்த மதம் அழிந்து விட்டதென்றும், அதன் சின்னங்களே மிஞ்சியுள்ளன வென்றும் ஹியூவன் சாங் குறிப்பிடுகிருன்.

இசை, நாடகம் முதலான இன்பக் கலைகளை, அவை உலக இச்சையை வளர்க்கும் என்று குற்றஞ்சாட்டிச் சமணரும் பௌத்தரும் வெறுத்து ஒதுக்கினர்கள். இதைச் சைவரும், வைணவரும் தமக்குச் சாதகமாக்கிக் கொண்டு தாங்கள் இறைவனைப் பற்றிப் பாடிய பாடல்களை யெல்லாம், இசை, தாளம் எதற்கும் ஒத்து வரும்படிப் பாடினர்கள். சமணர், பௌத்தர் எல்லாரும் காதலின்பம், பொருளாசை இவற்றைக் கண்டித்தார்கள். சைவரும் வைணவரும் தங்கள் கடவுளையே காதல் வடிவமாகவும், பெருத்த செல்வந்தராகவும் பார்க்கவும் நினைக்கவும் சுகமான காட்சிகளில் கற்பனை செய்தார்கள். இதே முறையை ஒட்டிச் சென்ருல், மக்கள் எந்தப் பக்கம் சேர்வார்? அதிலும் அரசர்களின் ஆசை எத்திசையில் திரும்பும்? என்பதை எளிதில் ஊகிக்கலாம். அரசன் துணை இருக்கும்போது தேசத்தில் எது பரவாது? எது நடக்காது?

எங்கும் சமண பௌத்த மதங்கள் ஒரு பக்கம்; சைவ வைணவம் இன்னெரு பக்கம் — இந்த மதச் சச்சரவு எவ்வளவோ கொடுரங்களையும், இரத்தக் களரியையும் தென்னுட்டில் கிளறி விட்டது. இறுதியில் சைவ வைணவமாகிய வேதமதங்களே மேலோங்கி விட்டன.

தன் தந்தை மலைகளைக் குடைந்து கோயில் வடிவமாக ஆக்கி அதில்

சிற்பங்களைச் செதுக்கியதுபோல், நரசிம்மனும் குகைக் கோயில்கள் கட்ட ஆரம்பித்தான். இவன் தந்தை ஒரு பாணியாகக் கட்டினான். இவன் இன்னொரு பாணியில் கட்டினான். தென்னிந்தியாவில் கற்களால் கட்டப்பட்ட கோயில்களில் இன்று இவர்களுடைய கோயில்கள்தாம் மிகவும் பழைமையுடையனவாய்க் காணப்படுகின்றன. இவற்றிற்கு முந்திய கோயில்கள் எங்குமில்லை.

நரசிம்மனுடைய கோயில்களைப் புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி முதலான இடங்களில் காணலாம். இவன் எடுத்த கோயில்களில் தூண்களை, அடியில் சிம்மங்கள் இருந்து தாங்கி நிற்கும். சிம்மத்தின் தலையின்மேல் உள்ள தூண் நன்கு கரவு சரவாக எட்டுப் பட்டையாகச் செதுக்கப்பட்டு, அதன் மேற்பொதிகை உருண்டை வட்டமாக இருக்கும். மகேந்திரன் பாணியைவிட இவன் மேற்கொண்ட கட்டிடத்தில் சிற்ப வேலைகள் அதிக நுட்பமாக அமைந்திருக்கும். மகாபலிபுரத்தில் ஏழு ரதங்களைச் செதுக்கியிருக்கிறான் நரசிம்மன். இந்த ரதங்கள் எல்லாம் ஒவ்வொரு பெரிய பாறையும் ரத வடிவமாகச் செதுக்கி அதில் சித்திர வேலைகள் செய்யப்பட்டவை. இவைகளைத் தொடங்கி முன்மாதிரி காட்டியவன் நரசிம்மன் என்றும், அவனைத் தொடர்ந்து மற்றவர்கள் மீதி ரதங்களைப் பிறகு செதுக்கினார்கள் என்றும்; இவ்வளவும் முடிய நெடுங்காலமாகுமாதலால் நரசிம்மனே எல்லா ரதங்களையும் செதுக்கினான் என்பது பொருந்தாது என்றும் சிற்ப சரித்திரத்தில் வல்ல ஆசிரியர் கருதுகிறார்கள். சிற்பம், ஓவியம், இசை, நாடகம், கல்வி எல்லாம் மத சம்பந்தமாக நாடெங்கும் மாறிவிட்டன. பல்லவரிடத்தில் வடமொழிக் கலைகள், இலக்கியங்கள் மிகவும் ஆதரவு பெற்றது போல், தமிழ் இலக்கியங்கள் அவ்வளவாகப் பெறவில்லை. குறிப்பாகச் சொன்னால், சைவம், வைணவம் சம்பந்தமாகக் கடவுளைத் துதித்துப் பாடிய தேவார, திவ்யப் பிரபந்தங்களைத் தவிர வேறு இலக்கியங்கள் இவ்வுலக நிகழ்ச்சிகளைச் சித்திரித்து எதுவும் எழுதப்படவில்லை.

நரசிம்மன் வாதாவிமேல் படையெடுத்த போது படைத்தலைமை தாங்கிப் படையை நடத்திய பரஞ்சோதி இப்பொழுது சிவனடியாராகி, நாயன்மாராகி விட்டார். அப்பர் கிழப்பருவத்தில் இருக்கிறார். சம்பந்தர் சமணர்களை வென்று வெற்றியோடு விளங்குகிறார். நாயன்மார்களும், மற்றவர்களும் தேவாரப் பாட்டுகளைப் பாடினார்கள். இந்தச் சைவ வைணவ ஒற்றுமை, புத்த சமண மதங்கள் ஒடுங்கிய பிறகு, கொஞ்சங் கொஞ்சமாகச் சிதைய ஆரம்பித்தது. சைவம் பெரிதா? வைணவம் பெரிதா? இந்தக்கேள்வி அடுத்த தலைமுறையில் வந்தவர் மண்டையைக் கலக்கி விட்டது.

சுருக்கமாக: புலிகேசியை வென்றது; இலங்கை அரசனுக்கு படைத்துணை யனுப்பியது; ஹியூவன் சாங் காஞ்சியில் பலமாதம் தங்கியது; சைவ வைணவ — புத்த சமண போர்கள் நடந்தது; குகைக் கோவிலும், கல்லால் தேர்களும் செதுக்கியது; பல்லவ தேசத்தின் செல்வம், வாணிபம், நாகரிகம், கல்வி எல்லாம் ஓங்கிச் சமாதானம் பரவியது — ஆகியவை நரசிம்மன் காலத்து முக்கிய நிகழ்ச்சிகள்.

தந்தியும் நாதமும்

'சிலம்பு'

உடல்:

நீவிய மேகக் கருங்குழற் கற்றையும்
நெற்றி மயிர்ச் சுருளும் — செங்
காவிமி னுக்கிடும் செவ்விதழும் கனிக்
கன்னக் கதுப் பெழிலும் — மலர்
தூவிய பஞ்சணை மீதினிலே நறும்
தூபவெ றியினிலே — எனைத்
தாவியணைந்திட வாவென் றழைக்கையில்
தாமதம் செய்குவ தேன்?

உள்ளம்:

பிஞ்சுக் கனியென வெம்பி யுதிர்ந்திடும்
பீழைச் சதைப் பசியை — மலர்
மஞ்சந் தனில் முகம் கொஞ்சித் தணிக்கவோ
மனதைப் படைத் தானே? — மதுச்
செஞ்சொல் மகளொடு நெஞ்சக் கலவியில்
சேர்ந்திடல் நீதியடா! — அட்,
நெஞ்சமி ரண்டும் ஒன்றிய பின் னெரு
நேசமும் வேண்டுவதோ ?

நான்:

தந்தியும் நாதமும் சேர்ந்தலவோ இசைச்
சந்தம்பி றக்க வேணும் — என்
சிந்தையும் ஊனும் சேர்ந்தலவோ புலச்
சேர்க்கை மலர வேணும்.
தந்தியும் நாதமும் சேர்ந்திடுமோ? என்னில்
சாந்தம் மலர்ந் திடுமோ?
தந்தனத்தோம் தனத் தாளத்தொடு இசைச்
சந்தம் ஒலித்திடுமோ?

கட்டுரைகள் வேண்டும்

ரா. நா.

தமிழ் நாட்டு வாசகர்கள் பெரிதும் சிறு கதைகளையும் நவீனங்களையுமே படிக்க விரும்புகின்றனர்; அதுவும் காதற் கதைகளையே படிக்க விரும்புகின்றனர் என்று இலக்கிய நிபுணர்கள் எனத் தங்களைக் கருதிக் கொள்பவர்கள் கூறுகின்றனர். ரஸமான கட்டுரைகள் எழுதினல் அதைப் படிக்கத் தயாராகத் தானிருக்கிறார்கள். எழுத்தாளர்கள் கட்டுரைகளை எழுதிப் பார்க்காமல் வாசகர்கள் மீது அபவாதம் கூறுவது அவ்வளவு ஒழுங்கல்ல. கட்டுரைஎன்ருல் 'பொய் சொல்லாமை,' 'திருடாமை,' 'கற்பு' என்பன போன்ற விஷயங்களைப்பற்றி பண்டைத் தமிழ் நூல் ஆசிரியர்கள் கூறியுள்ளதை மேற்கோள்களாகக் காட்டி எழுதி விட்டால் வாசகர்கள் படிக்கத்தான் மாட்டார்கள். அடிப்படையான ஒழுக்கங்களைப் பற்றி நாம் சொல்லித் தெரிந்து கொள்ளும் நிலையில் வாசகர்கள் இல்லை. புது விஷயங்களைச் சொல்ல வேண்டும், பழைய விஷயங்களைப் பற்றிப் புது வியாக்யானம் செய்ய வேண்டும்; ஹாஸ்ய சம்பவங்களை விவரிக்க வேண்டும், அசாதாரண அனுபவங்களைச் சித்திரிக்க வேண்டும். இம் மாதிரி விஷயங்களைப் பற்றி எழுதினல் அதுவும் கவர்ச்சியாக எழுதினல் வாசகர்கள் விரும்பிப் படிப்பார்கள். அப்புறம் அம்மாதிரி கட்டுரைகளுக்குத் தேவை அதிகமாகும். கதைக்குச் சமமான இலக்கிய அந்தஸ்து கட்டுரைக்கும் ஏற்படும்.

ஆங்கில நாட்டில் கட்டுரை பிராபல்ய மடைந்திருக்கிறது. ஆங்கில இலக்கிய சரித்திரத்தைப் படித்தால் கட்டுரைதான் கதை வளர்ச்சிக்கு அஸ்திவாரம் என்பதை உணர்ந்து கொள்ளலாம். பதினெட்டாம் நூற்ருண்டில் இங்கிலாந்தில் அடிஸன், ஸடீல் என்று இரு ஆசிரியர்கள் இருந்தனர். சில பாத்திரங்களை கற்பனை செய்து கொண்டு அவர்களுடைய அனுபவங்களைப் பற்றி வாரா வாரம் எழுதி வந்தனர். அந்தக் கட்டுரைத் தொகுதிக்குப் பெயர் "கவர்லியேபர்ஸ்." அவைகளைத் தொகுத்து வெளியிட்டுப் பார்த்தால் ஸர்ரோஜர் கவர்லி என்பவருடைய சரித்

திரம் உருவாயிருந்தது தெரிந்தது. அக்கட்டுரைகள் ஹாஸ்யமாக இருந்தன. அவைகள் மூலம் ஆசிரியர்களின் ஆழ்ந்த அனுபவம் வெளியாயிற்று.

நடக்கும் நூற்றாண்டில் நாம் திறமை என்று கருதும் விஷயங்களை வைத்துக் கொண்டு அற்புதமான கட்டுரைகள் எழுதியிருக்கின்றனர் செஸ்டர்ட்டன், ஹில்லேரி பெல்லாக் போன்ற ஆசிரியர்கள். "பிரமாதமான கற்பனை" விஷயங்கள் எனும் தலைப்பில் செஸ்டர்டனும், "ஒன்றுமில்லாத விஷயங்கள்" என்னும் தலைப்பில் பெல்லாக்கும் அருமையான கட்டுரைச் சித்திரங்கள் எழுதியிருக்கின்றனர்.

பொய் சொல்வது, சண்டை எப்படிப் பிடிப்பது, விழித்துக் கொண்டே படுக்கையில் படுத்திருப்பது போன்ற விஷயங்களைப் பற்றி ரஸமான கட்டுரைகள் எழுதியிருக்கின்றனர். உதாரணமாக சண்டை ஆரம்பிப்பதைப் பற்றி எழுதியிருப்பதைப் பாருங்கள். தெருவிலே போய்க் கொண்டிருப்பவனுடன் சண்டை தொடங்க வேண்டுமானால் "என்ன ஐயா என்னை முறைத்துப் பார்க்கிறாய்" என்றால் "நான் பார்க்கவில்லையே" என்பான். "நீ முறைத்தாய்" என்று நாம் சொல்ல வேண்டும். இப்படி வார்த்தை தடித்து சண்டை முற்றிவிடும் என்று சொல்லி சண்டை இழுக்கும் உபாயங்களைச் சொல்லி இருக்கிறார்.

சமீபத்தில் காலஞ் சென்ற ஏ. ஜி. ஜி. கொசு, மூட்டைப் பூச்சி, ரயில் பிரயாணம் முதலியவைகளைப் பற்றி மிகமிக ரஸமான கட்டுரைகள் எழுதியிருக்கிறார். தற்கால ஆங்கில சஞ்சிகைகளைப் புரட்டினால் அற்ப விஷயங்களைப் பற்றி அபாரமான கட்டுரைகள் வெளிவருவதைப் பார்க்கலாம்.

ஆங்கிலத்தில் புத்தக விமர்சனத்திற் கென்றே 'ஜானோ லண்டன்' என்று ஒரு வாரப் பத்திரிகை நடக்கிறது. பழம் புஸ்தகங்களிலிருந்தும் புதிதாக வெளிவரும் புஸ்தகங்களிலிருந்தும் பல ருசிகரமான சம்பவங்களை வெளியிட்டு வாசகர்களை மகிழ்விக்கிறார்கள். புது புஸ்தகங்களில் எதை வாங்கலாம் என்பதற்கு அந்த வாரப் பத்திரிகையைப் பார்த்தால் போதும். நம் நாட்டில் ஒரு விமர்சனப் பத்திரிகை நடந்தால் அதை யாராவது வாங்குவார்களா என்பது சந்தேகம்தான். ஆனால் ருசிகரமான விமர்சனம் எழுதுவது ஒரு கலை என்பதை உணராதவர்கள் மலிந்திருக்கையில் புது முயற்சிகள் எப்படி பலிக்கும்?

மேதையுள்ளவர் புது வழிகளைக் காட்டாமலிருந்து விட்டு வாசகர்கள் மீது பழி சுமத்துவதை விட்டுவிட வேண்டும். கட்டுரைகள் ஏராளமாக வேண்டும்; புதிய முறையில் எழுதுபவர்கள் வேண்டும். சிரத்தையுடன் எதைச் செய்தாலும் அதற்குப் பலனின்றிப் போகாது.

ஆசிரியர்: சரத் சந்திர சட்டர்ஜி

சாவித்திரி

மொழிபெயர்ப்பு: ஆர். ஷண்முகசுந்தரம்

உபேந்திரன் அவைகளைப்பற்றி சிந்திக்கவில்லை. அவன் அர்த்தமற்று வெளியே பார்த்துக் கொண்டிருந்தான். சாவித்திரியின் காதல், சுரபாலாவின் அந்திம காலத்து கருணை விழிகள் போல அவன் மனதில் பதிந்து விட்டது.

புவன முகோபாத்தியாயாவின் குரல் கேட்டு அவன் சிந்தனை கலைந்தது. "என்னைக் கூப்பிட்டீர்களா?" என்றான்.

"உட்காருங்கள். உங்களுக்குச் சாவித்திரியைத் தெரியுமா?"

"ஓ! தெரியும்!"

"அவளைப் பற்றி உங்களுக்குத் தெரிந்ததைச் சொல்ல முடியுமா?"

"சொல்லாமல் என்ன"? என்று கூறிவிட்டு அந்த வெட்கங்கெட்டவன் தனது குற்றத்தை ஒவ்வொன்றாக வெளிப்படுத்தினான். கடைசியாக, "நானும் ஒரு பெரிய வீட்டுப் பிள்ளைதான். ஆனால் முதலில் அவளைத் தெரிந்திருந்தால் இந்த வழியில் கால் எடுத்து வைத்திருக்க மாட்டேன். நானும் அயலூரில் ஓட்டல் வைத்துக் காலம் தள்ள மாட்டேன். அவளை உயிருடன் யாரும் கெடுக்க முடியாது" என்றான்.

"நீங்கள் இப்படி நினைப்பதால் அவளுக்கென்ன லாபம்?"

"பரலோகத்திலாவது அவள் கெடவில்லை என்று சொல்லுவேன்."

அவனை அனுப்பி விட்டு உபேந்திரன் பழயபடியே சிலைபோல் உட்கார்ந்து கொண்டிருந்தான். அவன் மனம் அடிக்கடி, 'நீ செய்தது சரியல்ல உபேந்திரா! ஒரு திக்கற்ற பேதைப் பெண்ணை அவமானப் படுத்த உனக்கு அதிகாரமில்லை' என்று கூறியது.

அன்று சாயங்காலமே புவன முகோபாத்யாயா ஓட்டலை விட்டு வேறு இடத்திற்குச் சென்று விட்டான்.

சமுத்திரக் காற்று அவன் உடலைக் குணப்படுத்தவில்லை. நாள் ஆக ஆக தேகம் மெலிந்து ஜுரம் அடிக்க ஆரம்பித்தது. ஒவ்வொரு நாளும் அவன் சுரபாலாவை நெருங்கிக் கொண்டிருந்தான். இது அவனுக்கே நன்குதெரிந்தது.

இவ்விதம் சமுத்திரக் கரையில் உலர்ந்து கொண்டிருக்கும்போது பிஹாரி கடிதம் ஊர் சென்று விட்டு இவனிடம் திரும்பி வந்தது.

நினைத்தாலே வருத்தத்தை அளிக்கும் பாவிய நண்பனை சதீஷின் பயங்கரநோய்க் கடிதத்தைப் பார்த்து இத்தனை நாளைக்குப்பிறகு உபேந்திரன் சிரித்தான். 'அந்த அப்பாவிக்கு நானும் நாளை எண்ணிக் கொண்டிருப்பது தெரியவில்லை' என்று எண்ணினன். உபேந்திரன் அன்று மாலையே சாமான்களை மூட்டை கட்டிக் கொண்டு பூரியிலிருந்து புறப்பட்டு விட்டான்.

அத்தியாயம் நாற்பத்து இரண்டு

சஷாங்க மோகனும், சரோஜினியும் எதிர் எதிராக நாற்காலியில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பதைக் கச்சேரியிலிருந்து திரும்பிவந்த ஜோதிஷ் கண்டான்.

சஷாங்கன் எழுந்து "இன்று வேலைகளெல்லாம் முடிந்து விட்டது. இங்கு டீ குடித்து விட்டு இப்படியே கிளப்பிற்குப் போகலாம் என வந்தேன்" என்முன்.

"ரொம்ப சரி!" என்று கூறி விட்டுச் சிரிப்பை அடக்கிக் கொண்டு ஜோதிஷ் வீட்டிற்குள் சென்று விட்டான்.

சரோஜினி தமையனுடன் உள்ளே போக எழுந்தாள். இதைக் கண்டு ஜோதிஷ் வழிமறித்துக்கொண்டு, "அதிதியைத் தனியாக விட்டு விட்டா? உனக்கு எப்படி இருக்கிறது சரோஜினி?" என்முன்.

சரோஜினி திரும்பவும் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டாள். அவள் முகம் வெட்கத்தால் சிவந்து விட்டது.

தாயாரின் விருப்பப்படி அவன் கச்சேரியிலிருந்து திரும்பியதும் உடுப்புகளைக் களைந்து விட்டு கை கால்களைச் சுத்தம் செய்து கொள்ள வேண்டும். தாயாரிடம், "அம்மா, சஷாங்கன் வந்திருக்கிமுன். இன்று காபியை வெளியிலேயே அனுப்பிவிடு" என்முன்.

"சரோஜினி, வெளியில்தான் இருப்பாள்."

ஜோதிஷ் தலையை ஆட்டிக் கொண்டு, "ஆம்" என்முன். பிறகு சிறிது நேரம் கழித்து, "ஏனம்மா! குற்றமே இல்லாமல் குணம் நிறைந்த மனிதன் எங்கே அம்மா இருக்கிமுன்?" என்முன்.

ஜகத்தாரணிக்கு இக்கேள்வி பிடிக்கவில்லை. "இதை ஏன் என்னிடம் அடிக்கடி கேட்டுக் கொண்டிருக்கிமுய், ஜோதிஷ்? எனக்கு ஒன்றும் ஆட்சேபணை கிடையாது என்று பலதடவை சொல்லிவிட்டேனே! உனக்குச் சரி என்று பட்டால் சரோஜினியை அவனுக்கே விவாகம் செய்து கொடுத்துவிடு" என்முள்.

"குற்றமில்லாத மனிதனே உலகத்தில் கிடையாது, அம்மா! நான் நன்கு யோசித்துப் பார்த்தேன்.

இந்த விவாகத்தால் சரோஜினி துக்கப்படமாட்டாள். அவள் வயது வந்த பெண்; அவள் இஷ்டத்திற்கு மாருக நாம் ஒன்றும் செய்யக்கூடாது'' என்ருன். அப்போது சரோஜினியும் அங்குவந்து கொண்டிருந்தாள்.

தாயார் சமையல் அறைக்குள் இருந்து பேசிக்கொண்டிருந்ததால் சரோஜினி வந்தது தெரியாது. ஜோதிஷிற்குப் பதிலளிக்க வேண்டி கோபத்துடன், "இந்த பெண் இஷ்டத்திற்கு மாருகக் கலியாணம் செய்துவை என்று நான் சொல்லவில்லையே! நான் எண்ணிக்கொண்டிருந்ததை இருவரும் சேர்ந்து பாழ்படுத்தி விட்டீர்கள். நான் அப்போதே பெண்ணின் மனதைத் தெரிந்து கொண்டேனே! அப்பா! எனக்கு எல்லாம் தெரியும். தெரிந்துதான் வாயை மூடிக் கொண்டிருக்கிறேன். நீ என்னைக் குற்றம் கூறி........'' என்று சொல்லிக் கொண்டு காபி தட்டை எடுத்துக் கொண்டு வெளியில் வந்தாள்.

சரோஜினி வெட்கத்தால் குன்றிப்போயிருந்தாள். ஆனல் தாயார் கவனிக்காமல், "யாரை அடைந்தால் உனது தங்கை சந்தோஷமடைவாளோ, அவனையே தேடிக்கொடு அப்பா! என்னிடம் ஒன்றும் கேட்டுக் கொள்ள வேண்டாம். இதுதான் நான் சொல்வது'' என்ருள்.

ஜோதிஷ் மனதை வெளிக்குக் காட்டாமல், "கோபத்துடன் இணங்க வேண்டாம், அம்மா'' என்ருன்.

"சந்தோஷத்துடன் அனுமதி கொடுக்கிறேன். இனிமேல் என்னிடம் கேட்டுக்கொள்ளாதே''

ஜோதிஷ் இன்று இவ்விஷயத்திற்கு முடிவு கட்டிவிட வேண்டுமெனத் தீர்மானித்தான். கிளப்பிலும் வாசக சாலையிலும் இப்போது இதுதான் பேச்சாக இருந்து வருகிறது. முடிவு என்ன என்பது தெரிய வேண்டாமா? வீட்டில் இந்தப் பேச்சு எழுந்தாலும் தடை பட்டு விடுகிறது. சஷாங்கனையும் இம்மாதிரி இரண்டுங் கெட்டான் நிலையில் வைத்துக் கொண்டிருப்பது நன்ருயில்லை. ஆகையால் இன்று இதற்கு ஒருமுடிவு கட்டிவிட வேண்டி, "சரி, அப்படியானல் அடுத்த ஞாயிற்றுக்கிழமை பத்துப் பேருக்கு முன்னல் நிச்சயம் செய்து விடலாமா? என்ன சொல்லுகிருய்?'' என்ருன்.

"அப்படியே செய்'' என்று தாயார் சொன்னள். சரோஜினி மெதுவாகத் தனது அறைக்குள் சென்றுவிட்டாள்.

ஞாயிறு அன்று ஜோதிஷ் வீட்டில் பந்துக்களும், நண்பர்களும் குழுமியிருந்தார்கள். நிச்சயத்திற்குப் பிறகு விருந்திற்கும் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. இன்று சஷாங்கன் தடபுடலாக ஆடை அணிந்து கொண்டிருந்தான். முகத்தில் புன் சிரிப்புத் தாண்டவ மாடியது. அநேக பெண்கள் நிறைந்திருந்தார்கள். ஆனல் சரோஜினி அங்கில்லாதது ஆச்சரியமாக இருந்தது. ஜோதிஷும் அவள் அறைக்குச் சென்று கதவைத் தட்டி சீக்கிரம் வரும்படி கூறி வந்தான். வேறுநாளாக இருந்தால் குற்றமாகப் பாவிக்கலாம். ஆகையால் நண்பர்கள் ஜோதிஷை கேலி செய்து கொண்டிருந்தார்கள்.

பல தடவை அழைத்ததிற்குப் பிறகு ஒன்பது மணி சுமாருக்கு

சரோஜினி வந்து சேர்ந்தாள். அவள் முகத்தைக் கண்டு அனைவரும் ஆச்சரியமடைந்தார்கள். கண்கள் சிவந்து சோர்ந்து போயிருந்தன. இரவு முழுதும் தூங்காதவளைப் போலிருந்தாள். தங்கையின் முகத்தைப் பார்த்து ஜோதிஷ் திகைத்துப் போனான்.

இதைவிட நூறு மடங்கு திகைக்கவேண்டியது சில நிமிஷங்களுக்குப் பின்னால் இருக்கிறது என்பது அப்போது அவனுக்குத் தெரியாது. அந்தப் பெரும் திகைப்பு உபேந்திரன் ரூபத்தில் வீட்டிற்குள் நுழைந்தது. ஜோதிஷ் திடுக்கிட்டு, "யார்? உபேந்திரனா?" என்றான்.

"உபேந்திர பாபு!" என்று சரோஜினி கூவினாள்.

இரவு நேரமாயிருந்தால் உபேந்திரனை அவர்கள் அடையாளம் கண்டு பிடித்திருக்க முடியாது. மனித உருவம் இவ்வளவு விசித்திரமாக மாறிவிடுமா என்று யாரும் யோசிக்கத்தான் செய்வார்கள். உபேந்திரன் ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, "உடம்புக்கு சுகமில்லை. பூரியிலிருந்து வருகிறேன். இன்று என்ன விசேஷம்?" என்றான்.

சரோஜினி அருகில் வந்து உபேந்திரனது கையைப் பிடித்துக் கொண்டு, "நோயில் படுத்திருந்தீர்களா?" என்று கேட்பதற்குள் கண்களில் நீர் நிறைந்தது. உபேந்திரன் தனது வாடி வறண்டு போன முகத்தில் புன்னகையை வரவழைத்துக்கொண்டு, "நோய் மாத்திரம் அல்ல அம்மா!" என்றான்.

சரோஜினி அவசரமாகக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, "வாருங்கள், அடுத்த அறைக்குச் சென்று உட்காரலாம்" என்று கூறி அவர் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு சென்றாள். அந்த வீட்டில் நிறைந்திருந்த உற்சாகமும் தடைபட்டது. ஜோதிஷ் சரோஜினியிடம் வந்து, "உபேந்திரன் சிறிது நேரம் இளைப்பாறட்டும். நீ இங்குவா" என்றான்.

சரோஜினி தலையை அசைத்து, "இன்று நிறுத்திவிடு" என்றாள்.

ஜோதிஷ் ஆச்சரியத்துடன், "எப்படி நிறுத்துவது?" என்றான்.

"முடியாது அண்ணா; இன்று நிறுத்தி விடு"

ஜகத்தாரணி தகவல் தெரிந்து அங்குவந்து, "எப்படி அப்பா உடம்பு இப்படி ஆயிற்று? நீ வேறெங்கும் இருக்கவேண்டாம். என்னிடம் இருந்து கொண்டு டாக்டரிடம் உடம்பைப் பார்த்துக்கொள். இல்லாவிட்டால் உடம்பு குணமடையாது" என்றாள்.

"ஆமாம், உபேந்திர அண்ணா! நீ எங்களோடுதான் இருக்க வேண்டும்" என்று சரோஜினி கூறினாள். உபேந்திரன் சிகிச்சை பெறுவதற்குத்தான் பூரியிலிருந்து வந்திருக்கிறான் என்று அனைவரும் நினைத்தார்கள்.

உபேந்திரன் சிரித்துக் கொண்டு, "இனித் திரும்பிப் போக வேண்டிய அவசியமில்லாதிருந்தால் இங்கேயே இருந்து கொள்வேன். ஆனால் இன்னும் சிறிது நேரத்திற்குள் போக வேண்டுமே" என்றான்.

ஜகத்தாரணி திடுக்கிட்டு, "இன்றா? இப்பொழுதா?" என்றாள்.

உபேந்திரன், சதீஷின் நிலைமை முழுவதையும் விளக்கிக் கூறி

விட்டு பிஹாரி எழுதியிருந்த கடிதத்தை சரோஜினியிடம் கொடுத்து, "பதினொன்றரை மணி வண்டி கிடைக்கும். திரும்பிவர முடிந்தால் உங்களோடே இருக்கிறேன்" என்றான்.

ஜகத்தாரணி துக்கத்தால் விம்மினாள். சதீஷிடம் மிகுந்த அன்பு கொண்டிருந்தாள். அந்த சதீஷ் இன்று நோய்வாய்ப் பட்டிருக்கிறான். உபேந்திர பாபு இங்கிலையில் அவனுக்கு உதவி செய்யப் போகிறார். இதை எண்ணவும் அவள் நெஞ்சு பிளந்துவிடும் போலிருந்தது. அவள் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு சாப்பாட்டிற்கு ஏற்பாடு செய்ய அங்கிருந்து சென்று விட்டாள்.

சரோஜினி கடிதத்தை இரண்டு மூன்றுதரம் முதலிலிருந்து கடைசிவரையிலும் படித்தாள். பிறகு அதைத் திருப்பிக் கொடுத்துவிட்டு சிறிது நேரம் மௌனமாக உட்கார்ந்து கொண்டிருந்தாள். அதற்கப்புறம், "அண்ணா, உங்களோடு நானும் வருகிறேன்" என்றாள்.

"இந்நேரத்தில் வீணை ஸ்டேஷனுக்கு வந்து என்ன செய்யப் போகிறாய்?"

"ஸ்டேஷனுக்கல்ல. சதீஷ்பாபு வீட்டிற்கு! என்னையும் கூட அழைத்துப் போங்கள் அண்ணா!'

"உனக்குப் பைத்தியமா? நீ எப்படி வரலாம்?"

"உங்களோடு வருகிறேன்"

"ச்சீ! இது நல்லதா? இவர்கள் எப்படி உன்னை விடுவார்கள்? நீ தான் வரலாமா?"

"முடியாது! நான் நிச்சயமாக வருவேன்" என்று உரக்கக் கூறி விட்டுப் போய் விட்டாள்.

ஜோதிஷ் ஆபீஸ் அறையில் உட்கார்ந்து சஷாங்கனிடம் தனியாகப் பேசிக் கொண்டிருந்தான். அந்தச் சமயத்தில் சரோஜினி மெதுவாக அங்கு வந்து ஜோதிஷின் முதுகில் கையை வைத்தாள். அவன் திரும்பிப்பார்த்து, "என்ன சரோஜினி?" என்றான். சரோஜினி தமையனின் காதருகில்வந்து மெள்ள, "சதீஷ் பாபு படுத்த படுக்கையாக இருக்கிறார்" என்றாள்.

"ஆம் நான்கூட இப்போது கேள்விப்பட்டேன். உபேந்திரன் இதே வண்டிக்குப் போகிறானா?"

"ஆமாம் நானும் அவரோடு போகிறேன்?"

"நீ போகிறாயா? எங்கே போகிறாய்?"

"அங்கேதான்."

ஜோதிஷ், சரோஜினி பக்கம் திரும்பி உட்கார்ந்தான். சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு "அங்கே என்றால்? சதீஷ் வீட்டிற்கா?" என்றான்.

"ஆம்."

சஷாங்கன் திகைப்படைந்து அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். ஜோதிஷ் கோபத்துடன், "உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா? அவர் உடம்புக்குக் குணமில்லாதிருந்தால் உனக்கென்ன? நீ எதற்காகப் போகவேண்டும்?" என்றான்.

சரோஜினி சாந்தமாக, "நான் போகாமல் வேறு யார் போவார்கள்? இல்லை அண்ணா, அவர் ரொம்பக் குணமில்லா திருக்கிறாராம். நான் போகத்தான்......" அதற்கு மேல் அவளால் பேசமுடியவில்லை. அவள் தமையனின் தோள்மேல்

தலையை வைத்துக் கொண்டு விக்கி விக்கி அழத் தொடங்கினள்.

ஜோதிஷிற்கு விஷயம் தெளிவாக விளங்கியது. சித்தப்பிரமை பிடித்தவன் போல சிறிது நேரம் மௌனமாக இருந்தான். பிறகு சகோதரியின் தலைமீது கையை வைத்து தடவிக் கொடுத்துக் கொண்டு, "சரி போ, ஒரு வேலைக் காரனையும், வேலைக் காரியையும் கூட அழைத்துக் கொண்டு போ" என்று கூறி எழுந்து அவள் எதிரில் நிற்க முயன்ருன். சரோஜினி வெட்கத்தால் கையை வைத்து முகத்தைப் பொத்திக் கொண்டு அங்கிருந்து வேகமாகச் சென்று விட்டாள்.

சஷாங்கன் விபரம் தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தவன், "சதீஷ்பாபு நோயாக இருந்தால் சரோஜினி எதற்காகப் போக வேண்டும்? எனக்குப் புரியவில்லையே?" என்ருன்.

ஜோதிஷ் காதில் இவன் கூறியது விழுந்ததோ என்னவோ! கனவிலிருந்து விழித்துக் கொண்டவன் போல திடுக்கிட்டு, "அவருக்காக இவ்வளவு வியாகூலப் படுவாள் என்று எனக்குத் தெரியாமல் போச்சு! இவள் சொல்வது ஒன்று செய்வது ஒன்று. இவைகளொன்றும் எனக்குப் புரியவில்லை" என்று சொல்லிக்கொண்டு வெளியில் போய் விட்டான்.

உபேந்திரன் ரயிலை விட்டிறங்கியதும் சதீஷ் கிராமத்திற்குப் போவதற்கு அங்கு எதிர்ப்பட்ட ஒரு வாலிபனை வழி கேட்டான். அந்த வாலிபன் சதீஷ் டிஸ்பென்சரியில் வேலை பார்க்கும் கம்பௌண்டர். தனது எஜமானன் வீட்டிற்குப் போகிறவர்கள் என்று தெரிந்ததும், "அதோ! மகேஷ்பூர் தெரிகிறது. பேசிக் கொண்டே அரைமணிக்குள் போய்விடலாம். மாட்டு வண்டியைத்தவிர வேறு ஒன்றும் கிடைக்காது. அது போவதற்கு ரொம்ப நேரம் ஆகும்" என்ருன்.

உபேந்திரன் நடந்து போகக் கூடிய நிலையில் இல்லை. இருந்தாலும் மாட்டு வண்டியில் போவதிற்கு இஷ்டப்பட வில்லை.

அந்த வாலிபனுக்கு பதினறு, பதினேழு வயதிருக்கலாம். நல்ல ஒழுக்க முடையவனுகக் காணப்பட்டான். அவன் பெயர் ராம்தீன். ஒரு இரண்டு வருஷம் டாக்டருடன் பயிற்சி பெற்றுவிட்டு பிறகு தனியாக தொழில் நடத்த விரும்பினன். "வைத்தியம் ஒன்றும் பிரமாதமில்லை, கைராசிதான் வேண்டும். பிழைக்கக் கூடியவன் பிழைத்துக் கொள்வான். இறக்கவேண்டியவன் இறந்தே தீருவான். அவன் எவ்விதமும் பிழைக்க மாட்டான்" என்று வெளிப் படுத்தினன்.

உபேந்திரன் இதை ஒன்றும் மறுத்துக் கூறவில்லை. "உனது எஜமானருக்கு உடம்பு எப்படி இருக்கிறது?" என்ருன் உபேந்திரன்.

"எஜமானருக்கா? இன்ருேடு இருபத்தியொரு நாளாகிறது; இப்போது குணமடைந்து விட்டார். நான்தான் மருந்து கொடுத்தேன்" என்று பலதடவை கூறிக் கொண்டான்.

உபேந்திரன் திருப்தியுடன் "நோய் கடுமையாக இருந்ததா?" என்று கேட்டான்.

"ஆமாம், ரொம்பக் கடுமையாகத்தானிருந்தது. செத்துப் பிழைத்தார் என்றே சொல்ல

வேண்டும். நல்ல சந்தர்ப்பத்தில் அம்மா வராமலிருந்திருந்தால்குண மடைவது சிரமம்தான். இரவு பகல் எந்நேரமும் குருஜியோடு சாராயமும், கஞ்சாவும் குடித்துக் கொண்டிருந்தால் ஜுரம் என் வராது? இதிலே சக்திபூஜை வேறு! நாங்கள் இதை எல்லாம் நம்பு வோமா? அம்மா வந்தவுடன் குரு வின் ஆசனங்கள், திரிசூலங்கள், எல்லா வற்றையும் அகற்றி விட் டார். அந்தக் கெட்டநாய் கொஞ்ச நாளைக்குள் எவ்வளவு சிரமத்தைக் கொடுத்தான். அவன் தான் வீட்டு எஜமானன்! இவனை அடிப்பது, அவனை உதைப்பது, ஒருவனைத் திட்டுவது, சதா இதே வேலைதான். ஒருநாள் சிறிய விஷயத்திற்காக என்னிடம் எப் படிக் கோபித்துக் கொண்டான் தெரியுமா? நான் சண்டை சச்ச ரவுக்குத் தகுந்தவன் அல்ல. வே ருெருவனுக இருந்தால் அவன் மண்டையைப் பிளந்திருப்பான்'' என்ருன்.

''அம்மா என்பது யார்?'' என்று உபேந்திரன் கேட்டான்.

''அது எனக்குத் தெரியாது. எல்லோரும் அம்மா என்று அழைக்கிருர்கள். நானும் அப் படியே அழைப்பது வழக்கம்''

''நீ பார்த்திருக்கிருயா''?

''ஓ! சிலசமயங்களில் பார்த் திருக்கிறேன்''

''வயது எவ்வளவிருக்கும்? சொல்லமுடியுமா?''

ராம்தீன் சிறிது யோசித்துப் பார்த்துவிட்டு, ''நாற்பது ஐம்பது வயதிருக்கலாம். அவர் வராதிருந் தால் பாபுக்கு ஆபத்துத்தான் என்று டாக்டர் சொல்கிருர்'' என்ருன்.

உபேந்திரன் வீடுபோய்ச் சேரு வதற்குள் சூரியோதயம் ஆகிவிட் டது. சரோஜினி வண்டிமுன்பே போயிருந்தது. வீட்டின் முன் புறம்தான் நோயாளிகளுக்கு மருந்து கொடுக்குமிடம் இருந்தது அங்கு கூட்டம் ஏராளமாக இருந் தது.

ராம்தீன் இவர்களை அழைத்துக் கொண்டுபோய் கூடத்தில் உட் கார வைத்து விட்டு பிஹாரியைத் தேடிச்சென்ருன். ஆனல் பிஹாரி கிடைக்கவில்லை. டாக்டர் நோயாளிகளைப் பார்ப்பதற்கு வெளியே சென்றிருந்தார், அங்கு கூடியிருந்தவர்கள் டாக்டரை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார் கள்.

உபேந்திரன் இந்த அம்மாவைப் பற்றி அதிக சந்தேகப்பட்டான். ஆகையால் சரோஜினியை அங்கே யே இருக்கச் சொல்லிவிட்டு மாடிப்படிஏறி மேலே போனுன்.

சதீஷ் கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தான். அவன் தலை மாட்டில் சாவித்திரி உட்கார்ந்து கொண்டிருந்தாள். உதய சூரிய னின் செங்கிரணங்கள் ஜன்னல் வழியாக சுவரில் விழுந்து கொண் டிருந்தன.

அப்போது கதவுக்குப் பக்கத் தில் அறிமுகமில்லாத ஒரு மனிதர் நிற்பதைப் பார்த்தாள்.

அவள் உடனே முக்காடு போட்டுக்கொண்டு எழுந்திருக்க முயன்ருள். ஆனல் வந்தவர் எதிரில்வந்து ''எழுந்திருக்க வேண் டாம். நான்தான் உபேந்திரன் நீங்கள் சாவித்திரி தானே?'' என்ருன்.

சாவித்திரி ''ஆம்'' என்று கூறி ஞள். ஆனல் பயத்தாலும் வெட் கத்தாலும் உடல் குறுகிப்போ ஞள்.

"சதீஷ் தூங்குகிறனு? இப்போது உடம்பு எப்படி இருக்கிறது?"

"நன்ருயிருக்கிறது"

உபேந்திரன் கட்டிலின் ஓரத்தில் உட்கார்ந்துகொண்டான். தனது கடமை என்னஎன்பது அவனுக்கு நன்கு விளங்கியது. "எனக்கு அந்தக்கடிதம் எழுதியது நீங்கள் தான் என்று இப்பொழுதுதான் எனக்குத் தெரிகிறது. என்னே வரச்சொல்லி எழுதிவிட்டு உங்களுடைய சுகதுக்கத்தை எவ்வளவு துச்சமாக மதித்தீர்கள் என்பது எனக்குத் தெரியாததல்ல. இது தான் உசிதமானது. இதுதான் உண்மை அன்பின் அடையாளம்" என்ருன்.

சாவித்திரிக்கு இது கனவில் நடப்பது போலிருந்தது. இது உபேந்திரன் அல்ல என்றுகூட எண்ணும்படியாயிற்று.

உபேந்திரன் சிறிது நேரம் பேசாமலிருந்துவிட்டு "உன்னே விட நான் வயதில் பெரியவன் நான் உன்னே சாவித்திரி என்று அழைக்கிறேன், நீ என்னே அண்ணு என்று அழை. இன்றிலிருந்து நீ என்சொந்த தங்கை" என்ருன்.

சாவித்திரி மௌனமாக எழுந்து உபேந்திரன் காலில் விழுந்து வணங்கினுள். பிறகு "நீங்கள் வருவதற்கு என் தாமதமாயிற்று? கடிதம் உரிய காலத்தில் கிடைக்கவில்லேயா?" என்ருள்.

"ஆமாம் முந்தாநாள்தான் பூரியில் உனது கடிதம் கிடைத்ததும் புறப்பட்டு வருகிறேன். இனி நீ ஒரு கடினமான காரியம் செய்ய வேண்டியது பாக்கி இருக்கிறது" என்ருன்.

"என்ன காரியம்?" என்று சாவித்திரி கேட்டாள்.

ஆனுல் உபேந்திரன் வாய்திறக்கவில்லே. சிறது நேரத்திற்கப்புறம், "உன்னேத் தவிர வேறு யாரும் அக்காரியத்தைச் செய்யமுடியாது சுரபாலாஎன்று ஒருத்தி இருந்தாள் அவளால் செய்ய முடியும்" என்ருன்.

சாவித்திரி மௌனமாக நின்றுகொண்டு அவன் கூறுவதைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

"சரோஜினியைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிருயா?"

"கேள்விப்பட்டிருக்கிறேன்."

"ஒரு சமயம் இப்போது கேள்விப்பட்டிருப்பாய்?"

சாவித்திரிக்கு சகலமும் தெரியுமென்று தலேயை ஆட்டினுள்.

"சதீஷிற்கு உடம்புக்குச் சரியில்லே என்று கேள்விப்பட்டவுடன் என்னேடு வந்திருக்கிருள். அவளே எவ்வளவோ தடுத்தும் நிற்கவில்லே. கீழ் அறையில் உட்கார்ந்து கொண்டிருக்கிருள். அவளுக்கு எதாவது ஒருவழி செய்யம்மா!"

"அவர் வந்திருக்கிருரா? நான் இப்போதே போய்.........ஆனுல் நான் அவரை அணுகக்கூடுமா?"

சாவித்திரி கூறியதின் கருத்தை உபேந்திரன் உணர்ந்து கொண்டான். "நீ போகக்கூடாதா? எனது உடன் பிறப்பு வேறு ஒரு பெண்முன் போவதற்கு வெட்கப்படுவானேன்? என்னே அண்ணுவாக அடைவது சுலபமான காரியமா?"

இதைக் கேட்கவும் சாவித்திரிக்கு உண்டான துக்கத்தைத் தாங்க முடியவில்லே. அப்படியே அவன் காலின் கீழ் சுருண்டு விழுந்தாள். அவனது மெலிந்த

பாதங்களைக் கண்களில் ஒத்திக் கொண்டாள். தலையில் இட்டிருந்த முக்காடு நழுவியது. கண்ணி லிருந்து கண்ணீர் அருவிபோல வழிந்தோடியது.

கண்ணீரால் நனைந்திருந்த அந்த முகமண்டலத்தையே உபேந்திரன் பார்த்துக்கொண்டிருந்தான்.

கண்ணைத் துடைத்துக்கொண்டு சாவித்திரி அறையை விட்டு வெளிக் கிளம்பினள். அப்போது உபேந்திரன் பின்னுலிருந்து கொண்டு, "போய்வா அம்மா! போய் அவளிடம் நாங்கள் அண் ணன் தங்கைகள் இதுவரையிலும் இந்த உலகத்தில் ஒரு கீழான காரி யமும் செய்ததில்லை என்று சொல்" என்ருன்.

சாவித்திரி போய்விட்டாள். உபேந்திரன் தூங்கிக் கொண் டிருந்த சதீஷை, "சதீஷ்! ஓ சதீஷ்!!" என்று கூப்பிட்டான்.

சதீஷிற்கு தூக்கம் கலைந்தது. அவன் அவசரமாக எழுந்து உட் கார்ந்து கண்ணைத் துடைத்துப் பார்த்தான்.

"உனது உபேந்திர அண்ணு தான் நான். என்னை அடையாளம் தெரியவில்லையா?"

"உபேந்திர அண்ணு!" என்று கூறிக்கொண்டு உற்று நோக்கி ஞன்.

"இன்னும் என்னைத் தெரியவில் லையா?"

சதீஷிற்கு இன்னும் தூக் கக் கலக்கம் நீங்கவில்லை. "தெரிந்து கொண்டேன். நீ வந்து விட்டாயா உபேந்திர அண்ணு?"

"ஆமாமப்பா! நான்தான் வந் திருக்கிறேன்"

"உனது பாதங்களை எடுத்து மேலே வை. வெகுநாளாயிற்று அவைகளைத் தொட்டு வணங்கி"

உபேந்திரன் இரு கைகளாலும் தனது பால்ய நண்பனைத் தழுவிக் கொண்டான். சிறிது நேரம் இரு வரும் அந்தத் தழுவலிலேயே தம்மை மறந்து இருந்தார்கள்.

உபேந்திரன் அடிக்கடி, "நேரம் செய்யாதே சதீஷ். எனக்கு நிறைய வேலைகள் இருக்கின்றன. உனக்காகக் காத்துக் கொண் டிருக்கிறேன்" என்ருன்.

"என்ன வேலை அண்ணு?", என்று சதீஷ் கூறிவிட்டு காலடி ஓசை கேட்டு பின்புறம் திரும்பிப் பார்த்தான். பார்த்தவன் அப்ப டியே திகைத்துப்போனுன். சாவித்திரியின் கையைப் பிடித்துக் கொண்டு சரோஜினி வந்து கொண்டிருந்தாள்.

உபேந்திரனை ஒருமுறை பார்த்து விட்டுப் பிறகு கண்களை நன்கு துடைத்துக்கொண்டு அந்த இரு பெண்களையுமே உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தான். சதீஷ் தன் கண்களையே நம்பவில்லை என்பதை உபேந்திரனும் சாவித்திரியும் அறி வார்கள்.

சரோஜினி சிறிதுநேரம் சதீ ஷின் மெலிந்த முகத்தைப்பார்த்து விட்டு துக்கம் தாளாமல் சதீஷின் காலடியில் விரிப்பின்மேல் தலை யைக் குப்புற வைத்துக் கொண் டாள். யாரும் ஒன்றும் பேச வில்லை. இந்தக் கண்ணீர் இதய பூர்வமான மன்னிப்பின் வேண்டு கோளாயிருந்தது. சதீஷ் மௌன மாக உட்கார்ந்து கொண்டிருந் தான். அவன் உள்ளம் இன்ப துன்பத்தால் மாறிமாறி மோதுண் டது. வெகு நேரம் வரையிலும் யாரும் பேசவில்லை. நேரம் ஆக ஆக சரோஜினியின் விக்கலும் விம்மலும்தான் அதிகரித்தது.

உபேந்திரன் தனது வலதுகையை சரோஜினியின் சிரசின்மேல் மெதுவாக வைத்துக்கொண்டு, "குற்றம் யாருடையதாயிருந்தாலும் அதைப்பற்றிக் கவலைப்படாதே சதீஷ்! இன்று எனது இந்த சகோதரியை மன்னித்து விடு.

"இவள் மனதில் இத்தனைநாளும் மண்டிக் கிடந்த துக்கம் இன்று என்னுடன் இவளை உனது சேவைக்காக அனுப்பி யிருக்கிறது. அம்மா சாவித்திரி, நீ இப்படி நின்று கொண்டிருந்தால் ஒன்றும் நடக்காது. இறக்கும் தருவாயிலிருக்கும் இந்த தமையனுடைய பயங்கரமான பொறுப்புகளை இன்றிலிருந்து உனது தலையில்தான் போட்டுக் கொள்ள வேண்டும். வா அம்மா! என் அருகில் வந்து உட்கார்" என்றான்.

சாவித்திரி பெயரைக் கேட்டதும் வெட்க துக்கம் அனைத்தையும் விட்டு சரோஜினி எழுந்து நின்று கொண்டாள். இவ்வளவு நேரமாக சாவித்திரியை, உபேந்திரனது பந்துவாக இருக்கலாமென சரோஜினி எண்ணிக் கொண்டிருந்தாள்.

சாவித்திரி பேசாமல் உபேந்திரன் பாதத்தருகில் வந்து உட்கார்ந்து கொண்டாள். "உன்னிடம் மன்னிப்புப் பெற்றுக்கொண்டு உன்னை அவமதிக்கிறேன் என்று எண்ணாதே குழந்தாய்! ஆனல், அப்பா சதீஷ் என்னை மன்னித்து விடு. நான் உன்னிடம் அவமதிப்பாக நடந்ததை எல்லாம் மறந்து விடு" என்றான்.

சதீஷ் என்ன சொல்வான்? அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவன் ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான்.

உபேந்திரன் அலட்சியமாகச் சிரித்துக்கொண்டு, "நீங்கள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பது எனக்குத்தெரியும் உபேந்திர அண்ணா என்ன டா குழந்தையைப்போல உளறிக் கொண்டிருக்கிறான் என்று நினைக்கிறீர்கள். உங்கள் உபேந்திர அண்ணாவின் அந்த கம்பீரமான பேச்சு எப்போது அடைபட்டது என்பது உங்களுக்குத் தெரியாது. இத்தனைநாளும் மனதில் குவிந்திருந்தது இன்று வெளிப்படுகிறது எதை நிறுத்துவது? எதைத் தடுப்பது?" என்றான்.

உபேந்திரனது வார்த்தையைக் கேட்டு சதீஷ் மிகவும் பயந்து போனன். ஒரு விஷயம் கேட்க வேண்டுமென விரும்பினன். ஆனல் எப்படிக் கேட்பது என்று புரியவில்லை. சதீஷ் பழயபடியே விடாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

உபேந்திரன், சரோஜினி முகத்தைப் பார்த்துக்கொண்டு சதீஷிடம், "நீ சந்தோஷமாக வாழ்வாய். உன்னை நான் ஆசீர்வதிக்கிறேன். நான் எனது இந்த தங்கையை அழைத்துக் கொண்டு போய் விடுகிறேன்." என்று கூறி சாவித்திரியின் சிரசை விரல்களினல் தடவினன். மறுமடியும் "உன்னைத் தவிர எனது பாரத்தை ஏற்றுக் கொள்ளுவதற்கு வேறு யாருமில்லை. வேறு யாரையும் அழைப்பதும் உசிதம் அல்ல. பிறருக்காக வாழும் உன்னைப்போன்ற சகோதரியிடம்தான் என்னை ஒப்புவிக்க முடியும். என்னேடு வருவாயா? சதீஷைப் பிரிவது கஷ்டமாகத் தான் இருக்கும். எத்தனை கஷ்டங்களை அளித்து மனிதனை ஆண்டவன் ஞானியாக்குகிருன் தெரியுமா?" என்றுன் உபேந்திரன்.

சதீஷின் மனதில் இதுவரையிலும் புறப்படாத கேள்வி இப்போது வெளிப்பட்டது. அவன் உடனே, "உபேந்திர அண்ணு, மன்னி சுகமாக இருக்கிருர்களா? அவர் உடம்புக்கு குணமில்லாதிருந்த போது நான் அங்கு வந்திருந்தேன்" என்ருன்.

உபேந்திரன் சிறிதுநேரம் உதட்டைக் கடித்துக்கொண்டு இருந்தான். அதற்கப்புறம் மேலே பார்த்துக்கொண்டு, "இல்லே, அவள் இப்போது இல்லே. அவள் இறந்து விட்டாள்" என்ருன்.

"சுரபாலா மன்னி இல்லேயா?' என்று சரோஜினி கூவினுள்.

"இல்லே" என்ருன் உபேந்திரன் சதீஷ் தலேயணேயில் மூர்ச்சையடைந்தவன்போலச் சாய்ந்துகொண்டிருந்தான்.

"சுரபாலா இல்லே. அவள் இறந்துவிட்டாள்!" என்று உபேந்திரன் சுலபமாகச் சொல்லிவிட்டான். ஆனுல் அவள் இறந்துவிட்டாள் என்பது எவ்வளவு கொடியது என்று சதீஷைத் தவிர வேறு யாருக்குத் தெரியும்? சரோஜினியைத் தவிர வேறுயார் அவனே அதிகமாகப் பார்த்திருக்கிருர்கள்? சாவித்திரியைத் தவிர வேறுயார் அவனேப்பற்றி அதிகமாகக் கேள்விப் பட்டிருக்கிருர்கள்?

எப்படியோ சுரபாலா இல்லே அவள் இறந்து விட்டாள். சதீஷைப் பார்த்து; உபேந்திரன் சிரித்துக்கொண்டு, "ஆண்டவனே எடுத்துக்கொண்ட பிறகு அதைப் பற்றிக் கவலேப்படுவானேன்? ஆனுல் இப்போது திவாகராவது அருகில் இருக்கக்கூடாதா! அவனுக்குத் தாய் தந்தையர் கிடையாது குழந்தையிலிருந்து நானேதான் வளர்த்திேனேன். அவனும் எங்கோ போய்விட்டான். இறப்பதற்கு முன்பு ஒரு தரமாவது பார்க்க முடியுமோ முடியாதோ!" என்ருன்.

"திவாகருக்கு என்ன நேர்ந்தது அண்ணு!" என்று சதீஷ் கேட்டான்.

"அவனுக்கு என்ன நேர்ந்தது என்பது யாருக்குத் தெரியும்! கல்கத்தாவில் ஆரான் வீட்டில் படிப்பதற்காக விட்டிருந்தேன். அந்த வெட்கம் கெட்ட பேச்சை யாரிடமும் சொல்லக்கூட முடியாது – சொல்வதற்கு விருப்பமும் இல்லே. வீட்டில் எல்லோரும் அவன் கல்கத்தாவில்தான் படித்துக் கொண்டிருக்கிருன் என்று நினைத்துக் கொண்டிருக்கிருர்கள். சுரபாலா அவனிடம் மிகுந்த அன்பு கொண்டிருந்தாள். ஆனுல் அவள் இறப்பதற்குமுன் அவனேப் பார்க்க முடியவில்லே. அதோடு அவள் விருப்பத்தையும் பூர்த்தி செய்ய முடியாது. ஆரான் பாபுவின் மனேவியுடன் எங்கேயோ போய்விட்டான். எங்கே என்று தெரியவில்லே."

மூன்று பேரும் ஒரேசமயத்தில் என்னமோ உரக்கக் கேட்டார்கள். ஆனுல் என்னவென்று விளங்கவில்லே.

அதற்கப்புறம் அனேவரும் மௌனமாக இருந்தார்கள். அறைக்குள் மயான அமைதி நிலவியது.

உபேந்திரன் முகத்தை ஒருவரும் பார்க்க விரும்பவில்லே. அவனுடைய துக்கத்திற்குமுன் தங்களுடைய துக்கமெல்லாம் மிக அற்பமாகப் பட்டது அவர்களுக்கு.

சாவித்திரி, சதீஷிடமிருந்து சகல விஷயங்களேயும் கேள்விப் பட்டிருந்தாள். 'இந்த மனிதன்

இவ்வளவு துக்கத்தையும் பொறுத்துக்கொண்டு எவ்விதம் வாழ்ந்து கொண்டிருக்கிருன்! மனம் வெந்து கொண்டிருந்தாலும் வெளியில் ஒன்றும் தெரியவில்லையே! இவர் இதயம் எதால் செய்யப் பட்டிருக்கிறது! இவருடைய துன்பங்களைப் பொறுத்துக் கொள்ள வேண்டி படைப்பிலேயே கடினமாக செய்யப்பட்டதா?' என்று சாவித்திரி நினைத்தாள்.

சாவித்திரி உபேந்திரனது பாதங்களைப் பிடித்துக் கொண்டு "அண்ணு, இம்மாதிரி நிலையில் உங்களுக்கு மலைக் காற்றுத்தான் நல்லது என்று எனக்குத் தெரியும்" என்ருள்.

"ஆமாம், குழந்தாய்! டாக்டர்களும் அப்படித்தான் கூறுகிருர்கள். ஆனல் ஆண்டவன் அழைப்புக் கிடைத்தவனுக்கு ஒன்ருலும் லாபமில்லை."

"எப்படியோ இருக்கட்டும். நாம் மலைப் பக்கத்தில் போய் இருக்கலாம்."

உபேந்திரன் சிரித்துக்கொண்டு "சரி அப்படியே செய்யலாம்" என்ருன்.

வங்காளிகளுக்கு மிக முக்கியமான பகவதி பூஜையும் வந்து போய்விட்டது. இன்னும் சில நாள் இங்கேயே தங்கலாம் என அனைவரும் விருப்பினர்கள். ஆனல் உபேந்திரனது நிலையைக் கண்டு சாவித்திரி திரியோதசி அன்று புறப்பட ஏற்பாடு செய்தாள். உபேந்திரன் தடுத்தான். ஆனல் சாவித்திரி, "அண்ணு, அது முடியாது. சதீஷ் பாபுக்கு குணமாகி விட்டது. அவர் தேகம் இன்னும் பலமாகும் வரையிலும் காத்திருந்தீர்களானல் உங்கள் தேகத்தை அப்புறம் கண்டுபிடிக்க முடியாது. நாளானன்று நாம் புறப்பட்டுத்தான் ஆக வேணும். அதை தடுக்காதீர்கள் அண்ணு!" என்ருள்.

உபேந்திரன் சிரித்துக் கொண்டு, "சரி, பார்க்கலாம். அப்படித் தான் நேர்ந்து விட்டது என்று வைத்துக் கொள். நீ என்னைத் தடுத்து விட முடியுமா?" என்ருன்.

சாவித்திரி வேறுஒன்றும் பேசாமல் போய் விட்டாள். உபேந்திரனுக்கு இங்கு வாழ்க்கை அமைதியாகக் கழிந்தது. ஆகையால் போவதிற்கு அவசரப் படவில்லை. புறப்பட வேண்டிய நாள் இவ்வளவு சமீபத்தில் இருப்பதைக் கூட அவன் நம்பவில்லை. ஆனல் சதீஷ் மிகவும் கவலை அடைந்தான். சாவித்திரியின் பிடிவாதம் அவனுக்குத் தெரியும். யார் சொன்னலும் கேட்க மாட்டாள். ஆகையால் அவன் ஒன்றும் சொல்லவில்லை. அடுத்தநாளும் அதைப் பற்றி ஒன்றும் பேசவில்லை. அவன் எதிரிலேயே பிஹாரி, சாவித்திரியிடம், "இனி எப்போது தரிசனம் கிடைக்கும் அம்மா?" என்ருன். அப்போதும் சதீஷ் பேசாமலிருந்தான்.

சாவித்திரி கடைக்கண்ணல் சதீஷை பார்த்துக்கொண்டு, "பிஹாரி, உனது பாபுக்கு கலியாணம் நடக்கும் போது சந்திக்கலாம். உனது பாபு மனம் வைத்து அழைத்தால்........."

பத்துநாளைக்குமுன் சரோஜினியை அழைத்துப்போக ஜோதிஷ் வந்திருந்தான். அப்போது உபேந்திரன் முன்னிலையில் விவாகப் பேச்சு உறுதியாயிற்று.

(தொடரும்)

எண்ணெய்களும், உபயோகங்களும்

[கே. நாராயணசாமி எம். எஸ்ஸி]

நம் நாட்டில் தொழில்களுக்கு தேவையான மூலப் பொருள்கள் ஏராளமாக இருக்கின்றன. பல தொழில்கள் முதன்மையாகவும், செழிப்பாகவும் வளர இயற்கையான வசதியுண்டு. அவ்வகைத் தொழில்களில் தாவர எண்ணெய்கள் சம்பந்தமான தொழிலும் ஒன்று. நம் நாடு எண்ணெய் உற்பத்தியில் முதன்மை பெற்றிருந்தாலும் அது சம்பந்தப்பட்ட தொழில்கள் மிகக் குறைவே.

1815-ம் வருஷமே பிரஞ்சுதேசத்தவரான ஷெவ்ரூல் என்பவர் எண்ணெய் என்பது என்ன, அதனுடைய பாகுபாடுகள் யாவை என்று ஆராய்ந்து கூறிய போதிலும் இந்நூற்றுண்டு முதற்கொண்டு தான் தீவிரமான ஆராய்ச்சிகள் செய்யப்பட்டன. அதன் விளைவாக இப்போது எண்ணெய்த் தொழில் ஒரு முக்கிய ஸ்தானம் பெற்றிருப்பதுடன் நூற்றுக்கணக்கானவர் இதன் ஆராய்ச்சியில் இன்னும் ஈடுபட்டிருக்கின்றனர். இவ்வாராய்ச்சியால் எண்ணெய்களின் பலவித பாகுபாடுகளும், அப்பாகுபாடுகளின் பலவித குணங்களும் தெரிய வந்தன. இக்குணங்களை அடிப்படையாகக் கொண்டே பலவித எண்ணெய்களை பலவித தொழில்களுக்கு உபயோகிக்கின்றனர்.

நம் நாட்டில் முக்கியமாக தேங்காய், எள்ளு, பருத்திக் கொட்டை, ஆளிவிதை ஆமணக்கு, நிலக்கடலை, மஹீவா அல்லது இலுப்பை முதலிய எண்ணெய்கள் ஏராளமாக உற்பத்தி செய்யப்பட்டு, வெளிநாடுகளுக்கும் வருஷந்தோறும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இன்னும் வேப்பம், கடுகு பனே, சால்மூக்ரா, பொங்கம் முதலிய எண்ணெய்கள் உற்பத்தி செய்யப்பட்டாலும், அவைகள் மிகக் குறைவே. அன்னிய நாடுகளில் கோகோவெண்ணெய் (வெண்ணெய்யல்ல, உண்மையாக எண்ணெய்தான்,) ஒலிவ் எண்ணெய், சோளஎண்ணெய், சோயாபீன் எண்ணெய், துங் எண்ணெய் முதலியவைகள் ஏராளமாக செய்யப்படுகின்றன. நம் நாட்டில் ஏராளமாக எண்ணெய்கள் செய்யப்பட்டாலும், நூதன முறைகளில் எண்ணெயை பிழிந்தெடுக்கும் ஆலைகள் சொற்பந்தான். அம்மாதிரி ஆலைகளில் அநேகமாக யந்திரங்கள் மூலம் பிழிந்தெடுக்கும் முறையே கையாளப்படுவதால், பிண்ணாக்கில் 100க்கு 4-7 வீதம் எண்ணெய் மிச்சமாகின்றது. இம்மாதிரியான பிண்ணாக்கு ஏராளமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றது. அன்னிய நாடுகளில், முக்கியமாக அமெரிக்காவில், திராவகங்கள் மூலம் பெட்ரோலியம், ஸ்பிரிட், ட்ரைக்ளோர், எதிலின் முதலிய எண்ணெய்கள் கரைத்து எடுக்கப்படுகின்றன. அநேகமாக 100க்கு 100பங்கு கரைத்து எடுக்கப்பட்

டாலும், இம்முறைகள் நம் நாட்டுக்கு உசிதமல்ல. கரைத்தெடுக்கும் திராவகங்கள் கிடைப்பது அரிது; மேலும் பலவிதங்களில் யந்திரங்கள் மூலம் பிழிந்தெடுக்கும் எண்ணெயே சிறந்தது. எண்ணெய்களை பிழிந்தோ அல்லது கரைத்தோ எடுத்த பிற்பாடு அவைகளை பல ரஸாயன முறைகளில் சுத்தப்படுத்துகிறார்கள்.

க்ளிசிரின் கொழுப்பு அமிலங்கள் சேர்ந்ததே எண்ணெய். இதில் க்ளிசிரின் 100க்கு 9 – 13 பங்கு தான்; மற்றவை கொழுப்பு அமிலங்கள். இவைகளில் முக்கியமானவை ஸ்டியரிக், பாமிடிக், ஓலிக், லினோலிக், லீனோலெனிக் முதலியன. எண்ணெய்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

(1) சீக்கிரம் உலரும் எண்ணெய்.

உதாரணம்: ஆளிவிதை எண்ணெய், துங் எண்ணெய்.

(2) மத்திமமாக உலரும் எண்ணெய்

உதாரணம்: நல்லெண்ணெய், பருத்திக்கொட்டை எண்ணெய்.

(3) உலராத எண்ணெய்கள்.

உதாரணம்: ஆமணக்கு, ஓலிவ், கடலை, முதலியன.

இப்பிரிவை அடிப்படையாகக் கொண்டு தான் எண்ணெய்களை பல்வேறு தொழில்களில் உபயோகிக்கின்றனர்.

க்ளிசிரின் என்பது முக்கியமான பொருள். வருஷத்துக்கு சுமார் 100,000 — 150,000. டன்கள் உலகில் உற்பத்தி செய்யப்படுகின்றன. 1779ம் ஆண்டு ஷீல் என்பவரால் கண்டு பிடிக்கப் பட்டிருந்தது. அதனுடைய முக்கிய உபயோகம் 1863 – ம் ஆண்டு ஆல்ப்ரெட் நோபல் என்பவரால் தான் கண்டு பிடிக்கப்பட்டது. நைட்ரோ – கிளிசிரின் என்று அவர் கண்டு பிடித்த பொருள் வெடிகுண்டுகளின் மூலபொருள். டைனமைட், கார்டைட், நாசகாரியான குண்டுகள் முதலியவைகள் இப்பொருளால் தான் செய்யப்படுகின்றன. ஆதலால், யுத்த காலங்களில் இது ஒரு மிக முக்கிய பொருள். இன்னும் க்ளிசிரின் மருந்து வகைகளிலும், ரேயான் என்னும் செயற்கை ஸில்க் தொழில்களிலும், புகையிலை தொழிலிலும்; பலவகை மிஷின்களிலும், உபயோகப்படுகின்றன. கிருமிகள் தடுக்கும் பொருளாகவும் உபயோகப்படுகின்றன. எண்ணெய்களிலிருந்து க்ளிசிரின் எடுக்கப்படுவது மல்லாமல், சர்க்கரை அல்லது மற்ற மாவு பொருள்களிலிருந்தும், ப்ரோப்பிலின் என்னும் வாயுவிலிருந்தும் செய்யலாம். ஆனால் இம்முறைகள் அயல் நாடுகளில் தான் முக்கியமாக கையாளப்படுகின்றன.

எண்ணெய்களின் உபயோகங்களுள் முக்கியமானது அவைகளை ஆகாரமாக உட்கொள்ளுவதே அப்படியே சாப்பிடுகின்றோம். வனஸ்பதியாகவும் உட்கொள்ளலாம். வனஸ்பதியை ஒரு சிலரே உபயோகித்தாலும், வருங்காலத்தில் அதன் உபயோகம் பன்மடங்கு உயரும் என்பதில் ஐயமில்லை. வனஸ்பதியென்பது ஜலவாயு கலந்த எண்ணெய் யெனச் சொல்லலாம். இதற்கு கடலையெண்ணெயும் பருத்திக் கொட்டை எண்ணெயும் தான் சாதாரணமாக உபயோகிக்கின்றார்கள். எண்ணெயை பிழிந்தெடுத்தவுடன் சுத்தமாக்கி, மிகவும் சுத்தமான ஜலவாயுவை இதனுடன் சுமார் 160 – 180° C உஷ்ணத்தில்

கலக்கினால், ஒலிக் அமிலம் ஸ்டிய ரிக் அமிலமாக மாறி எண்ணெய் யை வெண்மையாகவும், வாசனை இன்றி நெய் போலவும் மாற்றி விடுகிறது. இம்மாற்றலே துரிதப் படுத்த நிக்கல் சுருள்களை உபயோ கிக்கின்றனர். அயல் நாடுகளில் மீன் எண்ணெயை வனஸ்பதி யாக மாற்றி அதை சோப்புத் தொழிலில் உபயோகிக்கின்றனர்.

அடுத்தபடியாக எண்ணெய் யின் முக்கிய உபயோகம் சோப்பே. எண்ணெய்களுடன் சோடியம் ஹைட்ராக்சைட் என் பதை ஊற்றி காய்ச்சினால், க்ளிசி ரின் தள்ளப்பட்டு, நமக்கு சோடி யம் அமிலங்கள் அதாவது சோப்பு கிடைக்கின்றது.

எண்ணெய் + சோடியம் ஹை ட்ராக்சைட்

= சோப்பு + க்ளிசிரின்.

அதாவது கிளிசிரின், கொழுப்பு அமிலங்கள் + சோடியம் ஹைட் ராக்சைட்

= சோடியம் அமிலங்கள் + க்ளிசிரின்.

எளிதாகத் தோன்றும் இம்மாறு தல் பழக்கத்தில் மிகவும் கடினம்.

பெயின்ட், வார்னிஷ், இனமல், பாலிஷ்கள் முதலியன மற்றொரு முக்கியமான தொழில். சீக்கிரம் உலரும் ஆளிவிதை எண்ணெயும், துங் எண்ணெயும் உபயோகமா கின்றன. இவைகள் காற்றிலிருக் கும் பிராண வாயுவை கிரகித்து உலர்ந்து போவதால் தான் இந்த எண்ணெய்களை பெயின்ட், வார் னிஷ் முதலியவைகளுக்கு உபயோ கிக்கின்றோம். ஆளிவிதை எண் ணெயை அப்படியே உபயோ கிப்பதற்கு பதிலாக காய்ச்சின எண்ணெயே உபயோகிக்கின்ற னர். மாங்கனியம், ஈயம் முத லிய உலோகங்களின் பிராணயுதி யை சிறிது கலந்து ஆளிவிதை எண்ணெயை காய்ச்சினால், அந்த எண்ணெய் வெகு சீக்கிரத்தில் உலர்ந்து விடுகிறது. இப்போது ஆமணக்கு எண்ணெயை உபயோ கிக்கின்றனர். இன்னும் மேற் படி எண்ணெய்கள் மெழுகு துணி கள் லினோலியம், மின்சாரம் தடுக்கும் சாமானங்கள் தண்ணீர் புகாத துணிகள் முதலியன செய்ய உபயோகப்படுகின்றன. நூல் ஆலைகளிலும், தோல் பதனிடும் தொழில்களிலும் உபயோகமா கின்றன. ஆமணக்கு முதலிய எண்ணெய்கள் யந்திரங்களில் இடும் லூப்ரிகண்டாக உபயோ கப்படுகின்றன. ஆமணக்கு எண் ணெய் மருந்து வகைகளிலும், சாயத்தொழிலில் உபயோகிக்கும் டர்கி எண்ணெய் செய்யவும் உப யோகமாகின்றது.

தற்போது எண்ணெய்களை ஆச் சரியப்படுதற்குரிய நூதன முறை களில் உபயோகிக்கின்றனர். ப்ளாஸ்டிக் வகையறாக்கள், புதிய பாலிஷ்கள், வளையும் டியூபுகள் எஞ்சின்களில எரியும் எண்ணெய் கள் முதலியவை எண்ணெய்களி லிருந்து செய்யப்படுகின்றன.

செயற்கையாகவும் எண்ணெய் கள் செய்கின்றார்கள். பெட்ரோ லியமிலிருந்து கொழுப்பு அமிலங் கள் செய்யப்பட்டு, இவைகளை க்ளிசிரினுடன் கலந்து எண்ணெய் களை செய்கின்றார்கள். இது இன் னும் ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது. ஆனால் இயற்கையாக என்றும் கிடைக்கும் எண்ணெய் களுடன் செயற்கை எண்ணெய் கள் போட்டியிட முடியாது என் பது திண்ணம்.

பலாப்பழம்

"சுகி"

'பூவாதே காய்க்கும் மரமுள' என்மனார் பழுத்த புலவர். அவர்கட்கு எடுத்துக் காட்டாக பலாவும், பாதிரியும் உதவின. அப்படி பூக்காமல் காய்க்கக் கூடிய மரம் உலகத்திலே ஒன்று தான். அந்த 'நன் மரம்' கடவுள்.

பலாப் பழம் கடவுளுக்கு எதிரியோ இல்லை கடவுளின் வாரிசோ எனக்குத் தெரியாது. முக்கனிகளின் இடையில் அகப்பட்ட பலா, மாவையும் வாழையையும் விட யோகம் செய்தது. பழந் தமிழ்ப் புலவர்கள் கானகத்தையோ மலை யடிவாரங்களையோ, குறிஞ்சித் திணைக்குள்ப் புகுத்தி வர்ணிக்க ஆரம்பித்தால், மந்திகளுக்கும் பலாப் பழங்களுக்குமுள்ள உறவைப் படப் பிடிப்பார்கள்.

மந்திகள் பலாப்பழம் தின்பது எப்படி இருக்கிறது? குமரகுருபர சுவாமிகள் கண்ணிலே, நரசிங்க அவதாரம் எடுத்து ஹிரண்யன் மார்பைப் பிளந்து தின்பது போலத் தோற்றம் கொடுக்கிறது. எவ்வளவு பயங்கரமான காட்சி.

மந்தி
பொன்னிறம் பழுத்த பூஞ்சுளை வருக்கை
முன்னுறங் காண்டலும் முளையெயிறு
இலங்க
மடித் தலத் திருத்தி, வகிர்ந்து வன்
வுகிரால்
தொடுத்த பொற் சுளைபல எடுத்துவாய்
மடுப்பது
மானிட மடங்கல் தூணிடைத் தோன்றி
ஆடகப் பெயரின் அவுணன்மார் பிளந்து
நீடுபைங் குடலின் நிணங்க வர்ந் துண்
டென
இறும்பூது பயக்கும் நறும்பணை மருதம்.

இந்தச் சொல்லின் செல்வர்களை (குரங்குகளை) மறந்து, நாம் நகர்ப் புறத்தில் என்ன காண்கிறோம்? பலாப்பழத்தைப் போட்டு படாத பாடு படுத்தும் வியாபாரியையும், அவனையும் பலாச் சுளையையும் படாத பாடு படுத்தும் ஈக்களையும் பார்க்கிறோம். இந்த நர நரசிங்க மூர்த்திகளை, ஈக் கூட்டம் செய்கிற பழி கொஞ்சமா, நஞ்சமா? இதனால்தான், 'பலாப் பழத்திற்கு ஈப் பிடித்தா விட வேண்டும்?' என்ற பழ(ம்) மொழியும், 'சக்கையாகப் பிருபிருன்னு பிரித்து விட்டான்' என்று ஒருவன் அடியும் உதையும் படும் போது சொல்லுகிறார்கள்.

ஹிரண்ய கசிபுக்கு உவமைப் பொருளாக வந்த பலாப்பழம், அடிக்கும் உதைக்கும் உவமையாக வந்தது பொருத்தமே!

பூத்து விடாமல் காய்க்கக் கூடிய பெருந்தன்மை பலாவிற்கு எப்படி வர முடியும்? ஆனாலும் பூவை நான் பார்த்தவன் அன்று. தாவரங்களின் இல்லறத்தை அறிந்தவனல்ல!

"பலாப் பழமும் அத்திப் பழமும் இரண்டும் தனிப் பழமாகத் தோற்றம் கொண்டிருந்தாலும் உண்மையில் அவை தோலால் மூடிய பழக் குலைகளாகும்.

"பலாப் பிஞ்சுகளைக் கவனமாகப் பார்த்தால் முள்ளுகள் எல்லாம் தனி பூக்கள். 'முள்ளு' கள் என்பது தாய் பூக்களின் சூல் வாய்கள். காய்க்குள் பலாவின் மலர்கள் அடர்ந்து மூடிக் கிடக்கின்றன.

"அவற்றின் சூல் வாய்கள் தோலுக்கு வெளியே முள்ளுகளாகக் காணப்படுகின்றன. ஆண் பூக்களினின்று பராகம் வந்து பூரித்த பிறகு சூல்வாய்களின் நுனிகள் வாடிப் போகும். உள்ளே சூல்கள் முதிர்ந்து வளரும். சூல்கள் விதையாகின்றன. அதைச் சுற்றியுள்ள மலரின் பாகம் சதையும் இனிப்பும் கொண்டு சுளையாகிறது. முதிர்ந்து கனியாகும் பிஞ்சு ஒவ்வொன்றும் உண்மையில் பலா மலர்கள் சேர்ந்த ஓர் இணர். இணரானது தோலால் மூடப் பட்டுக் காயின் தோற்றத்தைத் தருகிறது. உண்மையில் சுளைகளே பழங்கள். பழம் என்று நாம் கருதுவது பழங்கள் அடங்கிய ஒரு தோற்பை.

"பலாப் பழத்தில் பழமாகிய சுளையைத் தின்கிறோம். அத்தியின் பழச் சுளைகள் தின்ன முடியாத கடினத் தன்மை கொண்டிருக்கின்றன. மேலுமுள்ள தோற் பையைத் தின்கிறோம். அத்தி மரமும் பலா மரமும் பூப்பதில்லை என்று சொல்வது தவறு."

நம் முன்னோர்களுக்கு இந்த விஷயம் குழந்தை பருவத்தில் நன்கு தெரியும்; வயது வந்ததும் மறந்து விட்டார்கள். ஒரு கவி — விடு கவி — சொன்னார்.

அப்பன் சொரியன்.
அம்மா சடைச்சி.
அவர்கள் பிள்ளைகள் சர்க்கரைக் குட்டி.

என்று. குழந்தையில் கேட்ட இதை மறந்துவிட்டு 'பூவாதே காய்க்கும் மரமுள' என்று பாடியும் விட்டார்கள். விடு கதையில் வருகிற எந்த வஸ்துவிடமும் எனக்கு அலாதிப் பெருமை; பிரேமை. குழந்தை யுள்ளத்தைக் கொள்ளை கொண்டு கோவிலைக் கொள்ளும் பொருட்களில் முதன்

மை பெற்றவை. அனேகமாக உருண்டையான பொருள்களே யாம். கோலி, பந்து, மாத்திரைகள் இவற்றோடு பலாப் பழமும் சேர்ந்ததில் ஆச்சர்யமில்லை. பலாப் பழம் மட்டும் தட்டையாக இருந்திருந்தால் இந்த விடுகதைக்கு அது வித்து 'ஊன்றியிருக்க முடியாது. உருண்டையான தன்மை கொண்ட பொருள்களில் என் மனசைக் கவர்ந்தவை உலகமும், பலாப் பழமும்தான். சுவைகள் நிறைந்த உலகமும், சுளைகள் நிறைந்த பலாவும், ரொம்பவும் ரஸமானவை.

நாவிற்கு இனிமை தருபவைகள் அநேகமாக உடம்புக்கு ஓரளவு கெடுதல் தருகிறவை. சர்க்கரை நீரழிவைத் தருகிறதாம். பலாப் பழம், வாதபித்த தொந்தங்களையும், கரப்பானையும் முன்பில்லாத பல்வேறு பிணிகளையும் தருமாம்.

நித்திக்கும் வாதசி லேத்ம பித்தம்
உண்டாக்கும்
மெத்தக் கரப்பான் விளைவிக்கும் -
சத்தியமாய்ச்
சேராப் பிணியை எல்லாஞ் சேர்க்
கும் ஒரு நொடியிற்
பாராய் பலாவின் பழம்.

பாட்டு பொய்யாக இருக்க முடியாது. இதை வியாதிப் பிண்டமாக வைத்திய நூல் காட்டுகிறது. இவ்வளவு கல்யாண குணங்களும் வருக்கை, கூழை, ஆசினி மூன்று ஜாதிக்கும் உண்டாம். ஆயிரத்தைச் சொன்னாலும் வருக்கைச் சுளைகள் மட்டும் எனக்குக் கிடைத்தால் வாதம், பித்தம், குன்மம், கரப்பான் இவ்வளவு வியாதிகளையும் மறந்து விடுவேன். அன்னம் தண்ணீரை மறந்து பாலை அருந்துவது போல, நான் அதன் சுவையையே அனுபவிக்கிறவன். ஞானிக்குத்தான் பெண் பேயாகக் காட்சி தருவாள்; துன்ப மாதாவாகவும், தொல்லையின் அவதாரமாகவும் தோன்றுவாள். ஆனால் என் போன்ற ரஸிகன் கண்ணில்...?

கலியாணம் பண்ணிக் கொண்டால், கஷ்ட நஷ்டம், குழந்தைத் தொல்லை, வாழ்வு தாழ்வு ஏற்படுமே யென்று பிரம்மச்சாரிகள் வருந்துகிறார்களா? பெண்ணின் லாவண்யத்தில் சொக்கி விடுகிறோம். அதுபோல, பலாச் சுளையின் தங்க நிறத்தில் தவிப்பு அடைந்து அதன் வயப்படுகிறோம்.

'தங்கம் உருக்கித் தழல் வார்த்து' என்பதை நான் பாடக் கூடுமானால், 'பலாவின் சுளையைப் பழுக்கக் காய்ச்சி, பாரில் பரப்பிய பசும் பொன் வெயிலே' என்று பாடியிருப்பேன். பலாச் சுளை அவ்வளவும் சொக்குத் தங்கம். பெண்களை வர்ணிக்கப் புகுந்த ஆசிரியர்கள் பலாச் சுளையின் வர்ண காந்தியை எப்படி மறந்தார்கள்? மறக்கத்தான் முடியுமா?

பலாச் சுளையும் மணப் பெண்ணும் ஒன்று. காளமேகப் புலவரை ஒரு சிலேடை வெண்பா பாடும்படி, அதிமதுரக் கவியும் அறுபத்தினாலு தண்டிகைப் புலவரும் கேட்டிருந்தால், அருமையான ஒரு பாட்டு நமக்குக் கிடைத்திருக்கும். என் நண்பரொருவர், "முள்ளம் பன்றி உருக் கொண்ட இந்தப் பலா இருக்கிறதே, அதன் வாசனை மூக்கை அப்படியே துவாரம் போட்டுவிடும். சிவ சிவா அதை அறுத்து சுளைகளைத் தேடி எடுக்கு முன், கையும் காலும் பிசின் பிசினாக ஒட்டி, ஹடயோகம் செய்வது போல பிராணனை வாங்கி

அரை டின் தேங்கா யெண்ணெ யும் காலியாக்கும். கொழுக் கட்டை தின்ற நாய்க்கு குறுணி மோர் தக்ஷிணை என்ற கதையாக இவ்வளவும் செய்து பழம் கூழை யாகப் போய் விட்டால்? முயற்சி இகழ்ச்சியே. என்னைக் கேட் டால் கல்லில் நார் உரிப்பது, பலாச்சுளை எடுப்பதைவிட, எவ் வளவோ மேல். இதைவிட, என் பெண்ணிற்கு வரன் தேடி முடித் தாலும் முடிக்கலாம். பலாவில் சுளை தேட முடியாது'' என்று புது மொழியோடு சொன்னார்.



ஒரு வகையில் உண்மை. பலாப் பழத்தால் சுளைகள் கிடைப் பது அருமை. முத்துகள், பயங் கரமும் ஆபத்தும் நிறைந்த கட லுக்கடியில்தான் கிடைக்கின்றன. கடற் கரையில் கிடைக்கவில்லை. அப்படியேதான் பலாப்பழமும், பெண்ணும் அருமையான பொக் கிஷங்கள். ஒரு வகையில் பலாப் பழத்தைப் பெண்பாலாகக் கொள்ளலாம் என்பதைக் காட் டித்தான் (சக்கை, பலவு, பலாசம், பனசம், வருக்கை இவற்றோடு) ஏகாரவல்லி என்ற பெயரையும் கொடுத்தார்கள் போலும்.

'' ஆகா, எவ்வளவு மதுரமான பெயர். ஏகாரவல்லி! மதுரமும் கனிவும் சோபையும் கொண்ட சுளைகளைச் சுற்றி அதன் மேல்த் தோல் ரம்பம் போல் மகா அரு வருப்பாக இருக்கிறதே! சை! கடவுள் கொஞ்சம் கூட ரஸிகத் தன்மையற்றவர், நான் மட்டும் சிருஷ்டிகர்த்தாவாக இருந்தால் சுளையைப் போலவே, மேல்த் தோல்லியையும் கவர்ச்சியும் மிருதுத் தன்மையும் பகட்டும் நிறைந்த மானினது மேனி போலச் செய்வேன்'' என்று ஸௌந்தர்யவாதி சொன்னார்.

அப்படிச் செய்திருந்தால் உல கில் பலாப்பழம் எட்டுச் சுரக்காய்க்குத் தாயாதியாக விளங்கும். தன்னை காப்பாற்றித் தன்னினத் தை விருத்தி செய்யவே கடவுள் அப்படிப் படைத்தாரோ, இல்லை, தானே அப்படி படைத்துக் கொண்டதோ? நண்பருக்குக் கலையுணர்ச்சியில் கண் இருந்ததே தவிர, அதன் வாழ்க்கை மீது கவலை இல்லை.

வாழ்க்கையும் கலையும் சங்கம மாகும் ஒரு பொருளை உவமைக் குச் சொல் என்றால் பலாப்பழம் என் நினைவு வட்டத்தில் எழும். வாழ்க்கை கோரமும் ஆபாசமும், பயங்கரமும், கரடு முரடும் நிறைந் தது. ஆனால் கலைக்குள் புகுந்த வாழ்க்கையில் இன்பமும் இனிய நினைவும், பரிணமிக்கிறதைப் பார்க்கிறோம்.

ஆம், பலாப்பழம் கடவுளின் வாரீசல்ல; கடவுளே தான் என்று சொல்ல வருகிறார் குற வஞ்சி ஆசிரியர்.

கிளை களாய்க் கிளைத்தபல கொப்பெலாஞ்
சதுர் வேதக் கிளைக ளின்ற
களை யெலாஞ் சிவலிங்கம்; கனியெலாஞ்
சிவலிங்கக் கனி களின்ற
சுளை யெலாஞ் சிவலிங்கம்; வித்தெலாஞ்
சிவலிங்க சொரூபமாக
விளையுமொரு குறும்பலவின் முளைத்தெ
ழுந்த
சிவக்கொழுந்தை வேண்டுவோமே

உலகத்தை உருண்டையாக சிருஷ்டித்த சிவபிரான், பலா மரத்தில் காய்க்கிற காய்களை சிவலிங்க உருவில் பார்க்கிறோம்; கனியாகி விட்ட சுளைகளின் தோற்றம் சிவலிங்கம்; சுளைக்குள்ளே இருக்கும் வித்துக்களும் சிவலிங்க சொரூபம். சிவ்லிங்கமாகப் பூத்துக் குலுங்கிய அந்தப் பலாமரத்தில்தான், குற்றால நாதர் முளைத்தெழுகிறாராம். ஆகா! பலாமரம் செய்த யோகம் வேறு எந்த மரத்திற்குக் கிடைத்தது? மாமரத்திற்கா? வாழை மரத்திற்கா?

போயும் போயும் சிவன் பலாவைத் தேடுவானேன்? தனக்குப் 'பித்தம்' வருவதற்கும், தன்னைப் பித்தன் என்றும் சொல்வதற்குமாக அதைத் தேடிப் பிடித்தாரா? அல்லது, அரச மரத்தைப் பிடித்த சனி பிள்ளையாருக்கும் பிடித்த கதையாக, சிவனுக்குள்ள 'பித்தன்' என்ற பெயரால் பலாமரத்திற்குப் பித்தத் தன்மை வந்ததா? விதை முந்தியதா, மரம் முந்தியதா என்ற பிரச்னையோடு பித்தம் எங்கிருந்து எங்கு பரவிற்று என்ற பிரச்னையும் முக்கியமாகக் கொள்ளலாம்.

சிவக் கொழுந்தாக வருகின்ற பலாயிலை எவ்வளவு புனிதம் நிறைந்தது. வாகட நூலாசிரியருக்கோ

பலாவிலையி லுண்ணப் பதுங்கி நின்ற பித்தங்
குலாவி யெழும்பிக் குதிக்கும் உலாவிவரு
கன்ம மகோதரம் நோய் காணா தகலாத
குன்ம மகலும் குறி.

என்று பலா விலையைக் கண்டதும் குலாவியும் உலாவியும் வரும் நோய் நொடிகள் தான் அவருக்குத் தெரிந்த உண்மைகள். ஆனால் அதற்குள்ளேயுள்ள கடவுள் தத்துவத்தைக் காண்பது மேம்பாடான அறிவு, என்பது என் எண்ணம்.

தாவர நூலாசிரியர்கள் பகுத்துப் பகுத்துச் சுளைக்குத் தான் பழமென்றும், பழத்திற்குப் பழங்கள் நிறைந்த தோற்பை என்றும், அதற்குள்ளே உலாவிக் குலாவி வரு நோய்கள் பொதிந்து கிடக்கிறது என்று சொன்னாலும் நாம் என்ன செய்வோம்?

பலாவின் பழத்திற்கும், மரத்திற்கும் இம்மையில் தான் கிராக்கி என்பது போய் அது மறுமைக்கும் வழிகாட்டியாக நின்று கனிவதை எண்ணயெண்ணச் சுளை சுளையாக நினைப்புகள் குவிகின்றன.

மரத்தை மறைத்தது மாமதயானை
மரத்துள் மறைந்தது மாமதயானை

என்ற திரு மந்திர அடிகளோடு, பின் வரும் அடிகளையும் சொல்லலாமா கூடாதா?



பித்தனைப் பிறைப்பித்தது பலாப்பழம்
பித்தத்துள் பிறந்தது பலாப்பழம்!

பலாப்பழம் அது வாழ்க. என்ன சொன்னேன்? சிவனை நான் வாழ்த்த தகப்பன் சிவனா?

பலாப்பழமே என்னை வாழ்த்து வாழ்வி!

உறவினருக்கு...

ப. தனுஷ்கோடி

“அன்பு நண்பரும், அரும் உறவினரும்”

“நண்பர்களும், பந்துக்களும்”

“சிநேகிதர்களும், சொந்தக்காரர்களும்”

“உற்ற சுற்றமும், உடனுறை தோழர்களும்”

“உற்ருர் உறவினரும், உண்மை நண்பர்களும்”

இம்மாதிரியாக இக்காலத்துத் திருமணப் பத்திரிகைகளின் பின்புறத்தில், “தங்கள் நல்வரவை ஆவலுடன் எதிர்பார்க்கும்” என்றவரிகளின் கீழ் காணப்படுகிறது. பழைய கல்யாணப் பத்திரிகைகளில், இம்மாதிரி மொட்டையாகக் குறிப்பிடுவதைக் காண முடியாது. எந்த ஜாதியாக மணமகனும், மணமகளும் இருக்கிருர்களோ, அதே வகுப்பில் உள்ள நெருங்கிய பந்துக்களின் பெயர்கள்தான் வரிசையாகக் காணப்படும். வரவேற்பு கோஷ்டியில் அவர்களின் பெயரைக் குறித்து கௌரவிப்பார்கள். இந்த வரிசையில் 'நல்லவர்கள், பெரியோர்கள், அறிவு அநுபவம் பெற்றவர்கள், ஆகியோரை விளம்பரப் படுத்துவதால், கல்யாண நிகழ்ச்சிக்கு வருபவர்களுக்கு நல்லோர் அறிமுகம் சுலபமாகக் கிடைக்கிறது. கல்யாண வீட்டின் பிரமுகர்களுடன் சௌகரியமாகப் பழகி பண்பாடு அடையும் வழி செய்கிறது.

ஆனல் இவ்வளவு சுமுகமான நல்ல காரியம் செய்வதை ஜனங்கள் இப்போது ஏன் விட்டு விட்டார்கள்? உறவினர்களின் பெயரைக் குறிப்பிடுவதிலே என்ன கஷ்டம்? ஏன் தயக்கம்?

நடைமுறையில் பல விவாகங்களை நடத்தியிருக்கும் பெரியாரைக்கேட்டால் ரொம்ப அலட்சியமாகப் பதில் சொல்லி விடுவார். “இவரைப் போட்டால் அவருக்கு வருத்தம்; அவரைப் போடவில்லையே என்று இன்னொருவருக்குக் கஷ்டம்......” என்று. வாஸ்தவம். அணையும் சுடரொளிபோல் அநுமார் வால் போல், வெகு வேகமாக நீண்டு வந்தது பெயர் போடும் வழக்கம். இரண்டு, நாலாயிற்று; நாலு எட்டாயிற்று: பின் பத்தாயிற்று; டஜனுக்கு மேலேயும் எண்ணிக்கை ஓடிற்று. வரவர கல்யாணத்திற்கு விஜயம் செய்யும் அத்தனை பேரையும் பிரசுரிக்க வேண்டுமோ என்ற பயம் கூட-சங்கடம் கூட தோன்றிற்று.

நல்ல காலம்! எந்த புத்திசாலியோ முதன் முதலில் கண்டு பிடித்த பேருதவி! எப்படி மாற்றி மாற்றிப் போட்டாலும் ஒரே வரியில் அடங்கி விடுகின்றனர். எல்லோரும் புதிய மோஸ்தரைப் பாராட்ட வேண்டியதுதான்; பின்பற்ற வேண்டியதுதான்.

ஆனல் இந்தமாதிரி ஒரு புதிய வழக்கம் தோன்றியதற்கு மேலே

கூறப்பட்டதுதான் காரணம் என்று எனக்குத் தோன்றவில்லை. பெயர் போடுவதில் தர்மசங்கடம் ஏற்படுவதை மட்டும் தவிர்க்க வேண்டும் என்று மக்கள் நினைத்திருந்தால், "தங்கள் வரவை எதிர்பார்க்கும் நமது பந்துக்கள் – உறவினர்கள்" என்பதுடன் விட்டிருக்கலாம். பெயர்களையும் பிரசுரிப்பவர்கள் இதர ஜாதியில் உள்ள நண்பர்களை இன்னும்கூட யாரும் குறிப்பிடுவதே இல்லை. அப்படியானல் பந்துக்களுடன் நண்பர்களையும் ஏன் சேர்க்க வேண்டும்? எதனுல் இந்த அபிப்பிராயம் தோன்றியது?

கொஞ்சம் நிதானமாக பாரபக்ஷமின்றி சமூகத்தின் உறவு நிலையை ஆராய்ந்தால் இதற்கு சரியான விடை கிடைக்கும். அதாவது, "சுப சடங்குகளின் போது சொந்தக்காரர்களின் ஒத்துழைப்பு மட்டும் போதாது. மற்ற நண்பர்களின் உதவியும் வேண்டும். அவர்களையும் இதில் கலந்து கொள்ளும்படிச் செய்ய வேண்டும். உறவினர்களை மட்டும் நம்பினல் பலன் இல்லை." என்ற எண்ணங்கள் சமூகத்திலே வேரூன்றி விட்டது. அதற்கு எப்படியாவது–ஏதாவது மாறுதல் அவசியமாக இருந்தது. பந்துக்களைக் குறிக்கவே பக்கம் இடமளிக்கவில்லை என்ருல், மற்றவர்கள் பெயரையும் சேர்த்தால் நிலைமை என்னவாகும்? எத்தனை பேர் என்று சேர்க்க முடியும்? யார் யார் என்று போட முடியும்? ஆகவேதான் பழைய வழக்கத்தினுள்ள குறை தீரவும், புதிதாக விரும்பும் கருத்தைக் கோர்க்கவும், ஒரே மாறுதல் அமைந்தது. ஒரு கல்லில் இரண்டு பக்ஷி என்பது போல இரு எண்ணங்களும் வெற்றியடைந்தன. இவற்றில் முதல் காரணத்தைவிட, இரண்டாவது காரணமே முக்கியமானது – என்பது என் கருத்து.

சற்று விரிவாகப் பார்ப்போம். இதன் அளவு கோலுக்கு, மனிதன் கல்யாணம் செய்துகொண்ட பருவத்திலிருந்து எடுத்துக் கொண்டாலே போதுமானது. ஏனெனில் அதற்கு முன் எந்த வாலிபனுக்கும் சமுதாயத்தின் கோரப் பிடிகள் தோன்றுவதில்லை. பாச, பந்தம் என்பதெல்லாம் விவாகமானவுடன் தான் இறுகப் பற்றுகிறது. அலட்சியமாக விட்டு விடும் எத்தனையோ காரியங்கள் இப்போது அவசியமாயிருக்கின்றன. "சிறு பிள்ளை; கல்யாணமாகாதவன் தானே?" என்று முப்பது வயது இளைஞனிடம் கூட பச்சாத்தாபம் காட்டுகிறது சமூகம். "அவனுக் கென்ன? பொண்டாட்டி வந்து இரண்டு வருஷமாகியும் கேடா?" என்று பதினெட்டாண்டு பூர்த்தியடையாத பாலகனைப் பார்த்தும் சீறுகிறது சமூகம்! பெண்டாட்டி என்று 'ஒரு பச்சைக் குழந்தை கழுத்தில் மஞ்சள் கயிற்றைக் கட்டி விட்டாலும் போதும்; அவன் சமூகத்திலே மேன்மையடைந்து விடுகிருன். "எல்லாம் தெரிந்தவனுகி" விடுகிருன். தொலையட்டும். சிறுவனுக்கு சிரஞ்சீவிப் பட்டமும், செல்வாக்கும் கொடுப்பதைப் பற்றி நான் ஆக்ஷேபிக்கவில்லை. என் கவலை எல்லாம், அவனுக்குக் கொடுக்கப்படும் "பெருமை"க்குப் பன்மடங்கு அதிகமாகவே, ஏதேதோ "பொறுப்புகள்" என்று சுமத்துகிருர்களே, அதுபற்றித்தான்!

மணம் 'செய்து 'கொண்ட புது தம்பதிகள் சமூகத்தில் ஜனித்த

இரட்டைக் குழந்தைகள்! இஷ்டம் போல் தத்தி விளையாடி இன்பம் பெற வேண்டியவர்கள்! சூழ்நிலை கொஞ்சங்கூட அவர்களை தொந்திரவு செய்யக் கூடாது. சுமுகமான நேச பாவம் நிலவி, வளர்ந்து வர வேண்டுமானால், சுற்றுப் புறங்களின் பாச பந்தங்களும், நிர்பந்தங்களும் தடையாக இருக்கக் கூடாது. வாழ்க்கையின் வெற்றி அதில் தானிருக்கிறது. சமூகத்தின் க்ஷேமமும் அதனால்தான் ஏற்படும்.

ஆனால் இன்று கண்ணெதிரே தோன்றுவது என்ன? கல்யாணம் செய்து கொண்டவுடன் பிரிந்து தனி வாழ்க்கை வாழ வேண்டும் என்கிறோம். ஏன் விலக வேண்டும்? சதிபதிகளிடையே ஒற்றுமை நிலவுவதற்காக! ஆனால் சுற்றுப்புறம் என்ன கூறுகிறது? "இன்ப விளையாட்டுக்காக" என்று. உண்மையாகவே இருக்கட்டும். தவறென்ன? ஆனால் யுவன் விரும்புவது உண்மையில் அதுவல்ல. பல வாலிபர்களின் நோக்கத்தை அறிந்திருக்கிறேன். ஐக்கியமாக இருப்பதால் அதிக உறவுகள், அதிக தொந்திரவுகள், அதிக செலவுகள், விரும்பாத சம்பந்தங்கள் ஆகிய வற்றிற்கே அவர்கள் அஞ்சுகின்றனர். அரும்பி முளை கிளம்பும் இளம் பயிரின் மேல், பாராங்கல்லைக் கொண்டு அமுக்கினால் தாங்குமா? வாலிப உள்ளம் விவாகமானவுடன் சமூக அவசரச் சட்டங்களினால் கருகி வதங்குவதை சமூகம் அறியுமா? ஒப்புக் கொள்கிறதா? விரும்புகிறதா?

"மனிதன் மீது எப்படியாவது குற்றம் சாட்டி மட்டமானவன் என்று தீர்ப்பளிப்பதிலேயே இன்றைய மனிதன் திருப்தியடைகிறான்" என்று ஒரு பேரறிஞர் கூறுகிறார். நன்றாகச் சொன்னார். இந்த மனோபாவம் நிஜமாகவே நிலவுவதால்தான், நேரில் நெருங்கிப் பழகும் நண்பர்களைவிட, தூரமாக இருந்து பழகும் நண்பர்களையே உயர்வாக மதிக்க வேண்டியிருக்கிறது. இதில் அவமானம் அடையக் கூடிய சந்தர்ப்பமோ, அன்பு உள்ளத்தை மாசுபடுத்தும் கேவலமான செய்கையோ சிறிதும் ஏற்படுவதில்லை. நட்பு நன்றாகவும் வளருகிறது. மேலும் நெருங்கிப் பழகுபவர் நம்மைக் குற்றம் கூறிக் கொண்டே வந்தால், பதிலுக்கு அவர்களின் குறைபாடுகளைக் குத்திக் காட்டினால்தான் மனம் திருப்தி படுகிறது. அவர்கள் வாயும் அடைபடுகிறது. ஆனால் இது நல்லதா என்பதை யோசிக்க வேண்டும். இதன் பலன் எவ்வளவு இழிவானது? மனிதஒழுக்கமே குன்றுகிறதே!

நினைத்தால் நேசமாகலாம்; வேண்டாமென்றால் பிரிந்து விடலாம் என்ற சுதந்திரம் உள்ள நட்பிலேயே நெருங்கிப் பழகுவது தீமை தருகிறது என்றால், உறவினர்களிடம் எவ்வளவு உஷாராக இருக்க வேண்டும்? என்ன நடந்தாலும் அவர்களது பந்தம் நம்மை விட்டு அகலாது. அப்படியானால் அதில் என் துவேஷம் என்ற விஷத்தைக் கலக்க வேண்டும்? நல்ல உறவை புரையோடும்படி விட்டு விடுவதா? நிலைத்து நிற்க வேண்டும் என்று தெரிந்தால் என்ன ஆபாசம் வேண்டுமானாலும் செய்யலாம் என்று அர்த்தமல்ல.

எவருடைய நட்பை ஆயுள் முழுதும் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்று விரும்புகி

ருயோ. யாருடைய உறவை ஜென்மம் முழுதும் இழந்து விடக் கூடாது என நினைக்கிருயோ, எந்த பந்தம் சாவதற்கு முன் உன்னைவிட்டு அகலாதோ, — அப்படிப் பட்டவர்களிடம் கசந்து கொள்ளாதே! விரோதம் வேண்டாம்! அதற்கு அதிகமாக நெருங்காமலிருப்பதே சிறந்த வழி. வார்த்தை, செயல் யாவற்றிலும் நிதானமும், ஜாக்கிரதையும் அவசியம். சகஜமாகப் பழகினல் தான் சரியான மன ஒற்றுமை என்று நினைப்பது வெறும் பிரமை! "கடும் சினேகம் கண்ணைக் கெடுக்கும்" என்பது பழமொழி. அது அனேகம் பேரை ருஜுப்பிக்கிறது. உயிரும், உடலும் ஒன்ருக இணைந்து நீண்ட காலமாகக் காணப்பட்டவர்கள் கூட ஏதோ ஒரு நாள் மனஸ்தாபம் அடையத் தான் செய்கிருர்கள். இதனுல் தான் "பழகப் பழகப் பாலும் புளிக்கும்" என்று ஏற்பட்டது போலும். ஆனல் பால் புளிக்கும் வரை பருகிக் கொண்டே இருக்க வேண்டும் என்று எந்த முட்டாள் சொல்வான்?

உறவினர்களாயினும் சரி; நண்பர்களாயினும் சரி; பிரிக்க முடியாத தொடர்பு இருந்தால் — இருக்க வேண்டும் என விரும்பினல், அனுவசியமான கேளிக்கைகளில் ஒட்டிக் கொள்ளாமல், உண்மையான பற்றுதலுடன், இதய ஆழத்திலிருந்து ஒற்றுமை விருத்தியடைய வழிகோல வேண்டும். இது சிறுகச் சிறுக மெதுவாகத்தான் வளரும் என்பது வாஸ்தவம்தான். ஆனல் வேர் ஊன்றி வளரும் செடிதான் மரமாக உறுதி பெறும். பரபரப்பாக வளரும் பாசத்தினல் பலன் பெறலாம் என நினைப்பது, கொடிய மிருகங்கள் வாழும் கானகத்தில் அமர்ந்து கொண்டு, கடற் காற்றின் இனிமையை ஸ்பரிசிக்க முயற்சிப்பது போல் ஆகும்.

காரியம் சாதித்துக் கொள்வதற்காக எத்தகைய கஷ்டங்கள் நேரிடினும் சகித்துக் கொண்டு நட்பை நீடிப்பவர்கள் ரொம்பப் பேர் உண்டு. இதே போலத் தான் சில நெருங்கிய பந்துக்கள் எக்காரணத்தைக் கொண்டும் நம் உறவை பிரிக்க முடியாது என கர்வம் கொள்கின்றனர். எத்தனை தடவை, எவ்வளவு மோசமான மனஸ்தாபங்கள் வேண்டுமானுலும் ஏற்படுத்திக் கொள்ள இவர்கள் தயங்குவதே இல்லை. இரத்த பாசம், பிறவி உரிமை என்ற பல்லவி பாடிக்கொண்டு என்றும் ஒட்டிக் கொள்ளலாம் என்பது அவர்கள் நினைப்பு. அப்படிப் பட்டவர்களை நம்பவே கூடாது.

இரத்த பாசத்தையோ, சரீர தொடர்புகளையோ ஆதாரமாகக் கொண்ட உறவை நான் விரும்புவதே இல்லை. யாராயினும் சரி; பழகும் முறை, பதியும் பாசம், ஆழத்தில் தோன்றும் அன்பு இவைகளை அஸ்திவாரமாகக் கொண்டேதான் சுற்றுப்புறத்தை மதிப்பிட வேண்டும். இதனுல் உறவு முறையில் உள்ளவர்களிடையே சில அருமையான நண்பர்கள் கிடைப்பார்கள். அதே போல் நண்பர்களிலே நல்ல நெருங்கிய உறவினரும் கிடைப்பார்கள். இரண்டும் இரண்டிலும் இல்லாதவர்களும் நிறைய இருப்பார்கள். அதாவது வெறும் சொந்தக்காரர்களும், வெறும் சினேகிதர்களுமாக. சாதாரணமாகப் பழகி வந்தால் அவர்களால் நமக்கு நன்மை ஏற்படா விட்டாலும் தீமை நேரிடாது.

நட்புக்கும் உறவுக்கும் ஒரு முக்கியமான வித்தியாசமிருக்கிறது. அவரவர்கள் சுபாவம்–குணம் இவற்றிற் கேற்றபடி நண்பர்கள் அமைவார்கள். அது இயற்கையானது. இன்பம் தருவது. ஆனல் உறவினர்கள் அப்படியல்ல. பிறவியினுலும், கொடுத்தல், கொள்ளுதலினுலும் விரும்பாதவர்களின் சேர்க்கை கட்டாயமாக ஏற்படுகிறது. அபிப்ராய பேதம் எவ்வளவுதான் ஏற்பட்ட போதிலும், என்றேனும் கூடியே தீரவேண்டும் என்பது உறவினர் சம்பிரதாயம். இந்த விதி என்ருவது அமுலுக்கு வரும் என்ற தைரியம் இருப்பதிஞல்தான், சிலர் கடுமையான பகையை சர்வசாதாரணமாக தேடிக்கொள்கின்றனர். நெகடிவும், பாஸிடிவும் சேர்ந்த மின்சாரம் போன்றது உறவினர்கள் விஷயம். புத்திசாலித்தனம் என்ற பல்பு இருந்தால் தான், இரு சக்திகளும் இணையும் போது சுமுகமாகப் பிரகாசிக்கும். இல்லையேல் அந்த சேர்க்கை பட்டென்று தெரித்து விடும். இந்த இயல் தன்மையை உணராததாலேயே சமூகம் சதா துயரத்திலிருந்து மீள முடியாமல் தவிக்கிறது. நல்ல திருப்திகரமான சமயங்களில் மட்டுமே சொந்தம் பந்தமாகச் சேர விடுதல் வேண்டும்.

கல்யாணம் செய்து கொண்டவுடன் பொதுவாகக் கவனித்துத் திட்டமிட்டுக் கொள்ள வேண்டிய விஷயங்கள் இவை. ஆனல் இப்போது அவனும் சிலருக்கு உறவினன் என்று மாறி விட்டபடியால் தனிப்பட்ட பாதிப்புகளிலும் மூளையைச் செலவிட வேண்டியிருக்கும். உறவினர்களிலே சில பெண்கள், '' ஆவதும் பெண்ணல்; அழிவதும் பெண்ணல் '' என்ற பழமொழியை தூக்கிப் போட்டுக் கொண்டு பெருமைப் படுகிருர்கள். எதை வேண்டுமானுலும் தாங்கள் மனது வைத்தால் அழிக்க முடியும்; என்று கர்வப்படும் ஸ்திரீகள் ஒவ்வொரு குடும்பத்திலும் நுழைந்து கொள்கிருர்கள். எந்தக் காலத்திலோ தோன்றிய அம்மொழி தங்களின் உயர்ந்த பொக்கிஷமாக நின்று வழி காட்டுகிறது என நினைக்கிருர்கள்.

ஆனல் உண்மையில் என்ன அது? அதற்கு அந்த அர்த்தம் தானு? பெண்களின் கௌரவத்தையா அது குறிக்கிறது? நடைமுறையில் ஸ்திரீகளின் சக்தி வெற்றி பெறுவதாயிருக்கலாம். ஆனல் அதிலே கொஞ்சமும் பெருமையில்லை. உண்மையில் பெண்மையை இழிவு படுத்த வந்த சொல் அது! பெண்ணின் கேவலமான புத்தியை சித்திரிப்பது அது! பெண்ணைக் கண்டு எச்சரிக்கை செய்கிறது ஆண்களுக்கு! பெண்களின் பிரமாதமான பரிவைக் கண்டு எப்போதுமே நான் பரவசப்படுவதில்லை. அற்ப விஷயத்திற்கெல்லாம் அதிகமான ஆதரவளித்துப் பேச முன் வந்து விடுவார்கள். சிறிய மனக்கசப்பு ஏற்பட்டு விட்டாலோ, லோகத்தையே எரித்துவிடும் ஆக்ரோஷம் வந்துவிடும். அதீதமான திடீர் மாறுதல்கள் – சலனங்கள் பெண்களிடம் காணப் படுவதால்தான் பேதமை படைத்தவர்கள் என்கிருர்கள்.

ஆனுலும், படித்த–விவரம் தெரிந்த – பகுத்தறிவு பெற்ற எத்தனையோ நல்ல யுவதிகள் இக்காலத்தில் தோன்றி விட்டனர். ஆண்களைவிட விசாலநோக்கமும்,

திடபுத்தியும், விவேகமும் உள்ள இளம் பெண்கள் எல்லா சமூகத்திலும் இன்று அதிகரித்து வருகின்றனர். அற்ப புத்தியும், பொறுமையும், குரோதமும் அவர்களை நாடுவதில்லை. மனித வாழ்வு எதிர்காலத்தில் பரிணமிக்க வேண்டுமானல் இப்படிப்பட்ட உத்தமகுண ஸ்திரீகளின் தொகை வளர்ச்சியில் தான் நம்பிக்கை வைக்க வேண்டும். குரோத உணர்ச்சியில் பெண்களை மிஞ்சும் அநாகரீக வாலிபர்கள் இன்னுமிருந்துவரும் இக்காலத்தில் மாதர் முன்னேற்றத்தைக் கண்டு மகிழாதார் யார்?

முரண்பாடான மொழிகளும், வசனங்களும், பரம்பரை வழக்கில் எத்தனையோ காணப்படுகின்றன. மனமொத்த மனைவியை "மதியூக மந்திரி" என பறை சாற்றும் சமூகமேதான், தீமையும் துன்பமும் நேரிடும் போது "பெண் பேச்சைக் கேட்டவன் உருப்படுவதேது?" என்று நகைக்கிறது. சரியான பகுத்தறிவும், ஒழுங்கான நாகரீகமும், பெற்ற பெண்களாயிருந்தால், இப்படி ஒருநாளும் பிதற்ற மாட்டார்கள். குத்திக் காட்டும் சுபாவம் கொண்ட கர்நாடகப் பெண்களும், தொட்டதற்கெல்லாம் குற்றம் கண்டுபிடிக்கும் மனோபாவம் கொண்ட அநாகரீக மனிதர்களும் என்று சமூகத்திலிருந்து மறைகிறார்களோ அன்றே உறவினர் உயர்வடைவர்.

சமுதாய ஒற்றுமையைச் சீர் குலைப்பதற்கு மொய் முறையும் ஒரு முக்கிய காரணமாக இருக்கிறது. விசேஷ காலங்களில் சில ரூபாய்களையோ, வெள்ளி சாமான்களையோ "ஓதி" வைப்பதால், நிகழ்ச்சி நடத்துபவருக்கு சகாயம் ஏற்படுகிறது என்றும், பிறகு அது "வட்டியில்லாக் கடன்" போல் அவர்களுக்கு 'வாபஸ்" ஆகிறதென்றும் சமூகப் பெரியார்கள் சமாதானம் கூறுகின்றனர். ஆனல் உண்மையில் இதனல் அடையும் பலன் என்ன? மொய்ப் பணத்தை எதிர்பார்த்து, ஆடம்பரச் செலவுகள் செய்து வீண் விரயம் தான் ஆகிறது. அதோடு பாண்டு, பத்திரம், வாய்தா இல்லாததும், "கேட்டபோது கொடுப்பதாக" ஒப்புக் கொண்டிருப்பதுமான அப்பணம், தனக்குச் சிறிதேனும் வசதி இல்லாத சந்தர்ப்பத்தில் கட்டாயமாக திருப்பிச் செலுத்த நேரிடுகின்றது. கலியாணம் செய்து கொள்ளப் போகிறவன், தனக்கு "மொய்," "சீர்" செய்பவர்களின் சௌகரியத்தை விசாரித்துக் கொண்டா நாள் குறிக்க முடியும்? ஆகவே சிக்கலும், சங்கடமும் தருவதான இப்பழக்கத்தை மாற்றும் உணர்ச்சி பல சமூகத்தினரிடையேயும் பரவி வருகிறது. அவர்கள், பொருளாதார நிர்பந்தத்தை முன்னிட்டே கட்சியாடுகிறார்கள்.

அது மட்டுமல்ல. அதைவிட முக்கியமானது என்று நான் நினைப்பது தார்மீகப் பிரச்னை. ஒரு 'வழக்கம்' செய்ய வேண்டுமென்பதற்காக, அதைவிட அதிக செலவு செய்து கொண்டு பிரயாணம் செய்ய வேண்டியிருக்கிறது. வேலைத் தொந்திரவுகளினல் வெளியில் செல்ல முடியாவிட்டால், செய்ய வேண்டியதைச் செய்ய மனமில்லை. என்ற அவதூறு புறப்படுகிறது. ஒருவரின் உறவை இவ்வித அளவு கோலைக் கொண்டு அளப்பது அறிவீனமானது; அபாயகரமானது. இவ்வழக்கத்தால் சமூகம் பெற்ற

நன்மை ஒன்றுமில்லை. எதையும் பகுத்தறிவுடன் விஞ்ஞானக் கண் கொண்டு பார்க்கும் இக்காலத்தில், செய்யும் சடங்குகள் மூடத்தனமாக இருக்கக் கூடாது. ஒவ்வொன்றுக்கும் பிரத்யக்ஷ ருஜு தேவை. ஆதாரமில்லாமல், இந்த சமயம், இன்ன சீர் – இன்ன மரியாதை செய்ய வேண்டியது உன் பொறுப்பு! என்று தலையில் சுமத்தினால் ஏமாந்துவிட மாட்டார்கள். நல்ல காரியமோ, கெட்ட காரியமோ பலவந்த வழக்கம் சொல்வது மடிந்தே தீரவேண்டும். எந்த சந்தர்ப்பமாயினும் சரி; பிறரது உதவியினால் செளகரியம் தேடிக்கொள்ள வேண்டும் என்ற மனப்பான்மையையும் நாம் உதறித்தள்ள வேண்டும். "கல்யாணத்தின் போது எட்டு ஜதை வேஷ்டி வந்தது; மூன்று வருஷம் வேஷ்டி வாங்க வேண்டும் என்ற கவலையே இல்லாமலிருந்தது...... அப்பா இறந்த போது ஆறுபேர் தலைக்கு துண்டு கட்டினார்கள்; இரண்டு வருஷம் பஞ்சமில்லை..." என்று கணக்குப் பார்க்கும் பிரகஸ்பதிகளைக் கண்டிருக்கிறேன். கணக்கிலே குறை விழும் நபரின் மீது கடும் மனஸ்தாபம் கொள்வதும் உண்டு. லாபம் பறிபோய் விட்டதே என்ற ஆத்திரம் பொங்கலாம். ஆனால் பொங்கிப் பூரிக்கும் இதே நபர்கள், பின்னொரு காலத்தில் தாம் திருப்பிச் செய்யும் முறை வந்தபோது, மூக்கால் அழுகிறார்கள். என்ன கஷ்டமான நிலையாக இருந்தாலும் மற்ற உறவினர்களால் வற்புறுத்தப்படுகிறார்கள்.

உண்மையிலேயே மனஸ்தாபம் ஏற்பட்டு பிரிந்து நிற்பவர்களைக் கூட, உறவு முறையை ஒட்ட வைத்து இணைக்கப் பார்க்கிறார்கள். சொந்தக்காரர்கள் என்றால் சுய உணர்ச்சியை விற்றுவிட வேண்டும் என்பது தவறு. அவர்களின் ஒற்றுமை உண்டாக்கும் நோக்கம், முயற்சி நல்லதாகத் தோன்றலாம். ஆனால் பிரிந்து போகும் உரிமை கொடுப்பதில்லை என்ற மனோ நீதியை ஆதரிக்க முடியாது. தவிர, தனி மனிதனின் சுதந்திர உணர்ச்சியில் தலையிடும் மாபெரும் குற்றத்தைச் செய்தவர்களாகிறார்கள். அவரவர் ஆசா பாசங்கள் அவரவரைப் பாதிக்காமல் இராது. அது அவரவர்களுக்கு இயற்கையாக ஏற்படும் விதத்தில் காரியங்கள் நடந்து விட்டுப் போகட்டுமே! அதில் அகாரணமாக குறுக்கிட வேண்டிய அவசியமென்ன? இயற்கையினாலோ, செயற்கையினாலோ, ஏற்படும் உறவு பந்தத்திற்கு, பிறர் பாதுகாப்பளிக்க முற்படும் முயற்சிகளினாலேயே விபரீதங்கள் விளைகின்றன.

உறவு – உறவினர்கள் என்பதில் உள்ள இவ்வளவு கஷ்டங்கள், நட்பு – நட்பினர்கள் என்பதில் இல்லை. அநாவசியமாக பிறர் காரியங்களில் தலையிட மாட்டார்கள். அதனால்தான் அது நிலைக்கிறது; நீடிக்கிறது; உயர்வடைகிறது. பணம், சீர், வழக்கம் என்பதற்கு அடிமைப்பட்டதல்ல நட்பு! நண்பர் வீட்டில் நடக்கும் பத்து கல்யாணங்களுக்குக்கூட, பணம் முதலியன கொடுக்காமல் போய் வரலாம். இடையில் ஒரு ஆண்டு நிறைவுக்கும், ஒரு காது குத்துக்கும், பிறவற்றிற்கும், போகாமலிருக்கலாம். அதனால் எல்லா நட்பும் சிதைவுறுவதில்லை. வெறுப்பு கொள்வதில்லை. 'உறவு' என்பதும் இந்த 'விவேகத்தில்' பண்பட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்? அனாவசியமான காரணங்களை முன்னிட்டு, மனைவியை

மறப்பது, மாமனுரைத் தூஷிப்பதும், சகோதரத்துவத்தை வெறுப்பதும், சகோதரிகளைப் பழிப்பதும் ஏன் ஏற்படப் போகின்றன? ஒன்று விடாமல் போய் வர வேண்டும் என்ற கட்டாயமும், ஒவ்வொன்றிற்கும் விசேஷ செலவுகள் செய்ய வேண்டும் என்ற வற்புறுத்தலும் அர்த்த மற்ற — பயனற்ற முறைகள். கெட்ட வழக்கங்களை உணர்ந்து சீர்திருத்திக் கொள்ளாத சமூகம் ஒருநாளும் உருப்படாது. இன்பமடையாது.

"பெருமைக்காகவும், பிறர் விரும்புவதற்காகவும், நாலுபேர் நம்மைத் தேடி தொடர்பு கொள்ளவும்தான் இந்த வழக்கம் ஏற்பட்டது. கொடுக்கல் — வாங்கல் பேரமில்லாவிட்டால் அது, பசையற்ற — ஒட்டுதலற்ற உறவாகிவிடும்;......" என்ற ரீதியில் சிலர் வியாக்யானம் செய்கிருர்கள், நாஸ்திகத்தைக் கண்டு மிரளும் ஆஸ்திகம் போல்! சமூகத்தவரின் அன்பைப் பெற வேண்டுமானல், சுற்றத்தினரிடம் தகுந்த அந்தஸ்தைப் பெற வேண்டுமானல், நிறைய 'மரியாதை' செய்து ஒட்ட வைத்துக்கொள்ள வேண்டும். ஹ்ஹூம்! உறவிற்கு எத்தகைய கேவலமான விலை? தன் தவறையும், அற்பத்தனத்தையும், தாழ்மையையும், மறைக்க படாடோப சூழ்ச்சியா? காலம் மாறி விட்டது. போலி வித்தைகள் பலிக்காது. யோக்கியமும், நல்லெண்ணமும், நேர்மையுணர்ச்சியும், மரியாதைத் தன்மையும் சரியானபடி பொருந்தியிருந்தால் எப்படிப் பட்டவனும், எக்காலத்திலும், இதர 'விளம்பரம்' இல்லாமலேயே பிரகாசிக்க முடியும். உலுத்துப்போன உதவாக்கரை சிபாரிசுகள் தேவையே இல்லை. "கற்ருரைக் கற்ருர் காமுறுவர்" என்பதும், "கற்ருேர்க்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு" என்பதும் பொய்த்து விடாது, எக்காலமும்!

ஒரு விஷயம். இப்படியெல்லாம் எழுதுவதால் நல்ல சமயங்களில் ஒருவர்க்கொருவர், 'உதவி' செய்து கொள்வதை 'லோபி'த் தனம் செய்யச் சொல்வதாக நினைத்து விடாதீர்கள். ஒவ்வொருவரும் கஷ்டப்படுவதும், சம்பாதிப்பதும், தான் மட்டும் சுகஜீவியாக காலம் தள்ளவல்ல. "இதம் சரீரம் பரோப கார்த்தம்" என்பது அருமையாகப் பின்பற்ற வேண்டிய பழமொழி. மனிதன் இழிவான சுயநலத்திற்கு முற்றிலும் அடிமையாகிவிடக் கூடாது. நண்பர்களோ, உறவினர்களோ; நல்ல காரியமோ, கெட்ட காரியமோ; சிறு விஷயமோ, பெரிய விஷயமோ; உங்களுக்குப் பிடித்தமானவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். உங்களால் முடிந்த மரியாதையைச் செய்யுங்கள். ஆனல் ஒன்று; அது திரும்பப்பெறும், 'உறவு' மனப்பான்மையில் வேண்டாம்! அவர்கள் யாராயிருந்தாலும், "பரிசாக" தானமாக — இனமாக—தர்மமாகக் கொடுத்த செய்கையாக அது இருக்கட்டும். பிரதி பலனை அனுபவிக்க வேண்டும் என்று நினைப்பவன் உண்மையில் நல்ல குணமுடையவனுக மாட்டான். அந்தந்தக் காலங்களில், அந்தந்த சந்தர்ப்பங்களில் யார் யார் அதிக அன்பும், நேசமும் உடையவர்களாக இருக்கிருர்களோ அவர்கள் கண்ணியப் படுத்துகிருர்கள். அவ்வளவுதான். அது கடமை.

பொது விஷயங்களில்தான் நம்மை உறவினர்கள் நிர்ப்பந்தப்

படுத்துகிருர்கள் என்பதில்லை. நமது சொந்தக் காரியங்களிலும்—சொந்த அபிப்பிராயங்களிலும் கூட, அனுவசியமாகத் தலையிட்டு வெறுப்பையும், விரோதத்தையும் தேடிக் கொள்ளுகிருர்கள். ஒவ்வொருவருக்கும் சிந்திக்கும், உரிமையும், சிந்தனையில் தோன்றும் எண்ணங்களின்படி நடக்கவும் சுதந்திரம் உண்டு. அது சரியானதா, தவருனதா என்று தீர்ப்பு கூற அழையாது நுழைய வேண்டியதில்லை. தாஞக வந்து கருத்தைத் தெரிவித்து 'காப்பாற்ற' முற்பட்டாலும் அதிகாரம் செலுத்தாமல், "ஆலோசகர்" என்ற ஸ்தானத்திலேயே நிற்க வேண்டும். இது இல்லாததினுல் தான் உறவினர்களின் தொடர்பு அடிக்கடி பலருக்குத் துண்டிக்கப் படுகிறது. நமது காரியங்களில் அவரது ஒத்தாசை தேவை என்பதை மறுக்கவில்லை. ஆனுல் அது பயன் பெறுபவரின் விருப்பத்திற்கும், தேவைக்கும் தகுந்தபடி இருக்க வேண்டும். "நாங்கள் கெட்டுப் போகவா சொல்லுவோம்" என்று ஒரே பல்லவி பாடிக் கொண்டு, ஓயாது மற்றவர் காரியங்களில் பிரவேசிக்கும், துர்ப்பழக்கங் கொண்ட உறவினர்களை ஒழித்தே ஆக வேண்டும்; அவர்களால் ஒரு பயனும் இல்லை.

மற்றவர் மனப்பான்மையைக் கவனிக்க முடியாதவன் மனிதனுக முடியும்? பால் உடம்புக்கு நல்லது என்று ஒரே தடவையில் நாலுபடி பாலைக் குடிக்கும்படி வற்புறுத்த முடியுமா? இந்த வித்தியாசம் நண்பர்களுக்குப் புரியும்! உறவினர் மனப்பான்மையில் விளங்காது!

இந்தக் கட்டுரையின் நகலைப் படிக்க நேர்ந்த ஒரு உறவினர் பின் வருமாறு என்னைக் கேட்க ஆரம்பித்தார்!

"அப்படியானுல் உறவினர் எல்லாம் உதவாக் கரைகளா? ரொம்ப மட்டமானவர்களா? அவர்கள் ஒத்துழைப்பே உனக்குத் தேவையில்லையா? சிநேகிதர்களைக் கொண்டே எல்லாம் நடத்தி விடுவாயா? உறவினர்கள் தான் குற்றம் செய்கிருர்களா? நண்பர்கள் எல்லாம் யோக்கியர்களா?........."

அவருடன் நான் தர்க்கம் செய்யவில்லை. அது வீண் வேலை; கால விரயம். ஆனுல் ஒரு விஷயம். உறவு மனப்பான்மைக்கும், நட்பு மனப்பான்மைக்கும் உள்ள வித்தியாசம் இங்கே நன்ருகப் புலப்படுகிறது. நண்பர்களாக இருப்பவர்கள் இம்மாதிரி எக்காலத்திலும் விகல்பமாக அர்த்தம் செய்து கொண்டு கேட்க மாட்டார்கள். எதிலும், முதலில் குற்றத்தைக் கண்டு பிடித்து விபரீதமாக்கிக் கொள்ள மாட்டார்கள். என்னைக் கேட்டவருக்கும் பல ஆப்த நண்பர்கள் இருக்கலாம். அப்படிப் பட்டவர்களில் ஒருவனுக நான் இருந்தால் நிச்சயமாக இம்மாதிரி வார்த்தைப் பிரயோகம் செய்திருக்க மாட்டார். அப்படியானுல் உண்மையான பரிசீலனையைக் கண்டு, உறவினர் மனக் கசப்பு அடைவானேன்? உறவை நான் உதறுவதாகப் பதறுவானேன்?

உண்மை அதுவல்ல. நமக்கு உறவினர் மீது பகையில்லை. நண்பர் மீது வாஞ்சையுமில்லை. ஆனுல் "நண்பர்கள்" என்று பழகுபவர்களிடம், அனேக அருமையான குணங்கள் வெளிப்படுகின்றன. "உறவினர்" என்று

பழகுபவர்களிடம், இன்ன தென்று அறியாத 'பய' உணர்ச்சியும், வரம்பு கட்டிய அன்பும், பல தீய சுபாவங்களும், சட்ட திட்டங்களும் முன் தோன்றுகின்றன. ஆகவே அம் முட்டுக்கட்டைகளை தைரியமாகக் களைந்து, அன்பும், பாசமும் நிரந்தரமாக இயற்கையாகப் பொருந்தும் படிச் செய்ய உறவினர்கள் மனம் வைக்க வேண்டும். உறவினர் ஒருவருக்கொருவர் நட்பு எண்ணத்தை வளர்த்து, செயலிலும் காட்ட வேண்டும். உறவினர் எல்லாம் நண்பர்களாக மாறுவதில் தவறென்ன? உள்ளம் ஒன்றிய சேர்க்கை யல்லவா—ஒழுக்கம் நிறைந்த பற்றுதலல்லவா பாராட்ட வேண்டிய குணங்கள்!

உறவினர் சமுதாயம் அப்படி மறுமலர்ச்சி பெற்று விட்டால், திருமணப் பத்திரிகையில்தான் ஏன் பாகுபாடு படுத்தப் போகிறார்கள்? சுற்றுப்புற தொந்திரவுகளினால் தடைதட்டு, இவ்வளவு தாமதமாக ஏன் அடுத்த கட்டுரையை நான் எழுதப் போகிறேன்?

வாழ்க்கை ஒரு கலை. இன்பம் தருவது கலை. உறவையும் கலையாகப் பாவித்து ஏன் பழகக் கூடாது?

வசந்தம் பூத்தது

கே. விஜயராகவன்

நான் சிறு குழந்தையாக இருக்கும்போது என் தாயாருடன் பக்கத்து ஊரில் உள்ள மலைக்குப் போயிருந்தேன். எனக்கு அப்போது பத்து மாசம் தான். பத்து மாதத்துக் குழந்தையாக இருந்த போது நடந்த சம்பவத்தை எப்படி இவ்வளவு ஞாபகமாகச் சொல்கிறேன் என்று கேட்டால் பதில் சொல்லத் தெரியாது. எல்லாம் கேள்வி ஞானம்தான். ஏன், என்னுடைய பெயரையே — மற்றவர்கள் சொல்லித் தானே நான் தெரிந்து கொண்டேன். அது ஒரு பக்கம் இருக்கட்டும்.

என் தாயார் என்னை ஒரு பசுமரத்தடியில் நிழலில் படுக்க வைத்து விட்டு, மற்றப் பெண்களுடன் வனபோஜனத்துக்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்த சமயம். நான் எனது பாஷையில் பேசிக் கொண்டிருந்தேன். அப்போது எங்கிருந்தோ இன்பமயமான பாட்டொலி கேட்டது. கீதம் என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. பாட்டில் நான் பரவசப் பட்டுப் போய் மெய் மறந்திருந்ததால் அருகே வந்து நின்ற சிறுத்தையைக் கூட கவனிக்கவில்லை! அப்படி நான் கவனித்திருந்தாலும் அதனுடன் விளையாடுவதைத் தவிர வேறு செய்யக் கூடிய காரியம் ஒன்றுமில்லை. நாதம் சிறுத்தையையும் பரவசத்தில் ஆழ்த்தி இருக்க வேண்டும். அதுவும் அப்படியே புளகாங்கிதத்துடன் நின்று விட்டது. அந்தச் சமயத்தில் என் தாயார் வந்து பார்த்துப் பதறிப் போன சங்கதி எல்லாம் எனக்கு இப்போது ஞாபகத்தில் இல்லை. ஆனால், கவிஞர் பாடியது மட்டும் நினைவில் இருக்கிறது.

காட்டில் விலங்கறியும்
கைக்குழந்தை தானறியும்

பாட்டின் சுவையை எங்களுடன் சேர்ந்து கவிஞரும் அறிந்து கொண்டாரே என்பது மட்டும் இன்னும் எனக்கு வியப்பாகவே இருக்கிறது.

அன்றிலிருந்து இன்றுவரை பாட்டும் கூத்தும், பச்சைக் காடும் என்னை என்னவெல்லாமோ செய்து வந்திருக்கிறது. என்னைப் போலவே என் தங்கைக்கும் இயற்கையாகவே, இயற்கையிடத்தில் பேரன்பு உண்டு. நாங்கள் இருவரும் உட்கார்ந்து கொண்டு ஓடும் நீரை நாளெல்லாம் பார்த்துக் கொண்டிருப்போம். சும்மா நீரையும் நிலத்தையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருப்பதிலே அளவற்ற ஆனந்தம்.

இன்றைக்கும் தண்ணீரைக் கண்டால் என் தங்கைக்கு உயிர். எங்கள் ஊர் குளத்துக்குப் போனால், குடத்தை படிக் கட்டில் வைத்து விட்டு அப்படியே உட்கார்ந்து விடுவாள். சிறு

வயதிலிருந்தே உள்ளத்தில் ஓராயிரம் இன்பக் கதைகளைத் தீட்டிய அந்தக் குளத்யையும் தாமரை மொக்குகளையும் நாங்கள் எவ்வாறு மறக்க முடியும்?

வசந்தம் வந்தால் உலகமே ஒரு யுகத்தில் அடி எடுத்து வைக்கிற மாதிரி எண்ணம் எனக்குள் எழுவதுண்டு. இளந்தென்றல் வீசும் போது, தருக்கள் மலர்கள் குலுங்க அசையும் அழகும்தான் என்ன? மொக்குகள் மேலும் கீழும் போய் வருகையில் ஊஞ்சல் ஆடுவது போலவே இருக்கும். எங்கே பார்த்தாலும் நிறநிறமான பூக்கள் சிந்திக் கிடக்கும். ஏன்?

பூஞ்சோலையே தென்றலில் தவழ்ந்து வருவது போல் தானே இருக்கிறது?

பெண்களுக்குத்தான் என்ன உற்சாகம்? கொண்டாட்டம். விதவிதமான மலர்கள் நிலத்துக்கு அழகு தருவது போல அவர்கள் கூந்தலுக்கும் அழகு தருகிறது. வண்டுகள் பூக்களைச் சுற்றி விளையாடுவதுபோல், கூந்தலைச் சுற்றி சுழலும் விழிகளை, வர்ணிக்க வேணுமா?

எனக்கு உட்கார்ந்த இடத்திலிருந்தே உலகைக் கவனிப்பதில் ஒரு திருப்தி, எழுதுவதை மேற்கொண்ட பிறகு, வசந்தத்துடன் என்உள்ளம் மேலும் நட்புப் பாராட்டியது! குழந்தையுள்ளமே இன்றைக்கும் இருப்பதில் எல்லையில்லா மகிழ்ச்சிதான், 'வசந்தம்', தொடங்கையில் 'வசந்தக்கனவு' களை எண்ணிப் பார்ப்பதில் பேருவகை எழுகிறது. இருண்ட இரவிலே, சந்திரோதய வர்ணனைகளை எவ்வளவோ தரம் எழுதி இருக்கிறேன். தகிக்கும் வெயிலில் கொட்டும் மழையைப் பற்றி பக்கம் பக்கமாக எழுதி இருக்கிறேன். ஆனால், வசந்தக் காட்சி வர்ணனை அப்படி அல்ல. இதோ உலகமே புது ஆடை உடுத்திக் கொண்டது. முந்தானை ஒரு நிறம். சேலைக்கரை ஒரு நிறம். சேலையே ஒரு வர்ணம். எப்படி இருக்கிறது? வானக் கண்ணாடி அதற்கிணங்க 'மலர்ந்து' நிற்கிறது. பளிச்சிடும் வானம், நிலமகளுக்கு இன்னும் அதிக அழகைத் தீட்ட வர்ண ஜாலம் காட்டுகிறது. எங்குமே ஒரே பரவசம்.

மற்றப் பருவங்களும் வருகின்றன. ஆனால் 'கலகல' ப்பின்றி ஏன், வெள்ளத்தைக் கரை புரண்டு ஓடச் செய்யும், காலமும், பனி போர்த்த, சாரல் நிறைந்த, வாடை மிதக்கும் கொழிக்கும் பருவங்களும் இன்பம் ஊட்டாமல் இல்லை. இருந்தாலும், புது வாழ்வைச் சித்தரிக்கும் வசந்தம் மோகனக் கனவுகளை மலரச் செய்து கொண்டே இருக்கிறது. பட்ட மரம் துளிர்க்கின்ற பருவத்தில் நம் உள்ளம் மலர்ந்து மணம் வீசுவதில் ஆச்சரியமில்லை.

வாழ்விலே புதுரசனையை நிரப்பவே வசந்தம் வருகிறது. புதுக் கதைகளை சிருஷ்டிப்பதற்கே 'வசந்தம்' வீசுகிறது. இவ்வளவு சோபையுடன் வரும் வசந்தத்தில் இதயம் இன்பகீதம் இசைப்பதில் தடையும் உண்டோ?

★

Printed at the Vasanta Mills Press, and Published by K. P. Sundaram at 4/12 A. Trichy Road, Coimbatore. Editor: R. Thirugnanasambandam.